

கல்கி

KALKI 6-10-1974 60 காசு


இந்த ஆண்டு
தீபாவளிக்கு
எமது கலர் ஒன்றல்ல, பல!
எமது டிசைன் ஒன்று, இரண்டல்ல!!
பலப் பல!!
அவைதான்
ராசி கதம்பம்
(RASI ASSORTMENT)
இந்தக் கதம்பத்திலிருந்து, உங்களுக்குத் தேவையான கலரிலும், பிடித்தமான டிசைன்களிலும் பட்டுப்புடவைகளைத் தேர்ந்தெடுத்து உற்சாகமாகத் தீபாவளி கொண்டாடுங்கள்!
ராதா சில்க் எம்போரியம்
சென்னை-600004
ராதா சில்க் எம்போரியம்
29, கோவிந்த் மஹல்,
86-B, மரைன் டிரைவ், G.ரோடு
பம்பாய்-400002
சார்பு நிறுவனம்: ராதா சில்க்ஸ்
'தன் பில்டிங்ஸ்' மவுண்ட் ரோடு,
சென்னை-600002
ராதா சில்க்கின் 'ராசி'
உன்னத வாழ்வுக்கு ஆசி
EP.RASI-88



கல்கி

ஆனந்த, புரட்டாசி 20 — அக்டோபர் 6, 1974

மாதிரி பாருங்கள்!

யானை ஒரு சிறு வெண்மையான பறவை!

தலைப்பிலே எத்தனை முரண்பாடுகள் உள்ளனவோ அத்தனை முரண்பாடுகள் நமது வாழ்விலே இன்று ஏற்பட்டுள்ளன என்பதைக் கூறுகிறது போட்டிக் கதை.

அரசுத் துறை அநியாயங்கள்

தனியார்த்துறையில் ஏகபோக்கியம் அதிகமாகி விட்டதென்பதற்காகப் பிரச்னையை ஆராய ஒரு கமிஷன் அமைத்தது அரசு. அதன் தலைவரோ அரசாங்க ஏகபோக்கியம் அதே அளவுக்குக் கொடிது என்கிறார்!

தலைநகரில் ஒரு தமிழன்

லைசென்ஸ் ஊழல் பற்றிய பாராளுமன்ற விவாதத்தின்போது நமது துணை ஆசிரியர் எஸ். வி. எஸ். புதுதில்லியில் இருந்தார். நகர்வலம் கட்டுரை இது.

எது தண்டனை?

செய்யாத குற்றத்துக்குத் தண்டனை அடைந்தான். வெளியே வந்தபோது தன்னை மாட்டி வைத்தவர்களைப் பழி வாங்காதிருப்பானா? ஆனால் இவன் அந்தச் செயலில் இறங்கவில்லை. ஏன்?

மகாத்மாவின் உபவாசங்கள்

உண்ணாவிரதம் மலிவுச் சரக்காகிவிட்ட இன்றைய நிலையில் அண்ணலின் ஜெயந்தியை யொட்டி இந்த இதழில் அவரது உண்ணா நோன்பு பற்றி அறியலாம்.


மேலட்டை:

இதழ் விரிக்கும் மலர்ச் சிலிர்ப்பும்
இதமான மங்கலச் சிரிப்பும்

வண்ணப் படம்: **வித்யாவ்ரதா**

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே


இதை என்றோ செய்திருக்க வேண்டும்!
கள்ளக்கடத்தல் ஆசாமிகள் கைது!
கிரி
இதை என்றோ சொல்லியிருக்க வேண்டும்


மதிய உணவை முடித்துக்கொண்டு முப்பெரும் விழா ஊர்வலத்துக்கு வந்து சேருங்கள்
மதிய உணவா, அப்படீன்னு?

கல்கி

மலர் 34

இதழ் 10

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

அரசுத்துறை அநியாயங்கள்

மாமியார் உடைத்தால் மண்கலமாம்! மருமகள் உடைத்தால் பொன் கலமாம்! பழமொழிதான்; ஆனால் பாரத அரசின் ஓரவஞ்சனையை விளக்கவே ஏற்பட்ட குறும்புமொழியாக ஒலிக்கிறது!

தனியார் துறையில் ஏகபோக்கியங்கள் பல இருப்பதாகக் கருதி இதன் விளைவுகளை ஆராயவும் கண்காணிக்கவும் ஒரு கமிஷனை நியமித்துள்ளது பாரத அரசு.

ஏகபோக்கியங்களை ஏற்படுத்துவதே அரசும் அதன் பர்மிட் லைசென்ஸ் கொள்கையும்தான் என்பதை எத்தனை எடுத்துச் சொன்னாலும் புரிந்துகொள்ள மறுக்கிறார்கள். போட்டா போட்டி மனப்பான்மையுடன் தனியார் துறையை இயங்க அனுமதித்தால், தொழில் வர்த்தக வளர்ச்சி தங்குதடையின்றிப் பெருக ஊக்கினால் ஏகபோக்கியம் இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிடும்.

ஆனால் நடப்பது என்ன? குறிப்பிட்ட ஓரிரு நிறுவனங்களுக்கு மட்டும் குறிப்பிட்ட பொருளை உற்பத்தி செய்ய லைசென்ஸ் வழங்கப்படுகிறது. இதில் வேண்டியவர் — வேண்டாதவர் சலுகை, பாகுபாடு எல்லாம் தோன்றும். லஞ்ச ஊழல் தாண்டவமாடும். ஏகபோக்கியத் தீமையும் உருவாகும்.

இப்படி நோயை வளர்த்து விடும் அரசு அதனைப் பரிசீலனை செய்யக் குழுவும் நியமிக்கிறது. தனியார் துறையில் ஏகபோக்கியம் அனுபவிப்பவர்கள் வர்த்தகத்தில் அல்லது தொழில் துறையில் அபரிமித லாபம் பெற முனைந்தால் ஏகபோக உடைமைச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க அரசுக்கு அதிகாரம் உண்டு. இதற்காகவே ஏகபோக உடைமைகள் பரிசீலனைக் கமிஷன் இயங்குகிறது.

இந்தக் குழுவின் தலைவர் முந்நாள் நீதிபதி ஜே. எல். நாயின் வந்தது வரட்டும் என்று அண்மையில் ஒரு வெடிகுண்டைத் தூக்கிப் போட்டார். அதாவது ஒரு முக்கியமான உண்மையை உடைத்துச் சொன்னார். நீதிபதியாய் விளங்கியவர் அல்லவா?

ஏகபோக்கியம் என்பது தனியார் துறையில் மட்டும்தானா இருக்கிறது? அரசுத் துறையிலும்தான் வேரூன்றியிருக்கிறது என்றார். அத்துடன் விட்டாரா? இந்த ஏகபோக்கிய அரசுத் துறை நிறுவனங்களிலும் அக்கிரமங்கள் நடக்கின்றன என்றார்.

எடுத்துக்காட்டாக எஸ். டி. ஸி. என்று சுருக்கமாக வழங்கும் அரசாங்க வர்த்தகக் கார்ப்பொரேஷன் ஒன்று போதாதா? இறக்குமதியாகும் பொருள்கள் பலவற்றுக்கும் ஏகபோக உரிமை பெற்றுத் தன் இஷ்டப்படி விலைகளை நிர்ணயிக்கிறதே! வாழ்வு அல்லது சாவை நிர்ணயிக்கும் மருந்துகள் முதல் ஜனநாயகத்துக்கு இன்றியமையாத பத்திரிகைக் காகிதம் வரை அது இறக்குமதி செய்து பலவற்றில் நூறு சதம் இருநூறு சதம்கூட லாபம் அடிக்கிறதே! முழு விவரங்களையும் அறியப்போனால் குடம் குடமாக நீர் அருந்தினாலும் நம் வயிறு குளிராது!

இதில் வேடிக்கை என்னவென்றால் மேற்படி ஏகபோக உடைமைகள் பரிசீலனைக் குழு தனியார்துறை நிறுவனங்களை மட்டுமே கண்காணிக்கலாம். அரசுத்துறை நிறுவனங்கள் பக்கம் தலைகாட்டக் கூடாது!

இதைத்தான் உடைத்துச் சொன்னார் நாயின். அரசு அனுமதித்தால் ஒழிய அரசுத்துறை ஏகபோக நிறுவனங்களின் அநியாயங்களை நாங்கள் எப்படி ஆராய முடியும் என்றார்.

ஒரு கண்ணில் வெண்ணெய் ஒரு கண்ணில் சுண்ணாம்பு என்ற ரீதியில் செயல்பட வேண்டியிருக்கிற இந்தக் குழு, தனியார் துறையிலும்கூட ஜுரம் இறங்கத்தான் உதவ முடியுமே தவிர நோயை ஒழிக்க அதனால் முடியாது. டாக்டர்களைக் கேட்டால் சொல்வார்கள் ஜுரம் இறங்கும் மருந்து வேறு, நோய்க் கிருமிகளைக் கொல்லும் மருந்து வேறு.

இங்கே நோய்க் கிருமி பர்மிட் லைசென்ஸ் கொள்கை.

பாரதப் பெருமகன்



பாரதப் பண்பாட்டின் உருவகமாக விளங்கியவர், வாணியின் அருளைப் பரிபூரணமாகப் பெற்று சகல கலாவல்லவராகத் திகழ்ந்தவர், அடக்கத்தின் திருஉருவாகக் காட்சி தந்தவர், ராஜ கம்பீரத்துக்கு எடுத்துக்காட்டாக நின்றவர் மைசூர் மகாராஜா திரு ஜெயசாமராஜ உடையார்.

அவரை ஆளுனராகப் பெறும் பாக்கியம் தமிழகத்துக்கும் சிறிது காலம் கிட்டியது.

மகாராஜா எத்தனை இலகுவாக ராமராஜ்யம் நடத்தினாரோ அதே அளவுக்கு எளிதாகப் பதவியைத் துறந்தும் விட்டார். பாரதம் சுதந்திரம் பெற்றபோது, மைசூரைப் பாரதத்துடன் ஐக்கியப்படுத்தி மற்ற சமஸ்தானாதிபதிகளுக்கு வழிகாட்டியாகச் செயல்பட்டார்.

''தங்களுக்குப் பிறகு பாரதத்தின் ராஷ்டிரபதியாக விளங்கச் சகலவிதத்திலும் பொருத்தமானவர்'' என்று ராஜாஜி, ஸ்ரீ ஜெயசாமராஜ உடையாரைப்பற்றிக் குறிப்பிட்டு அன்றைய ராஷ்டிரபதி ராதாகிருஷ்ணனுக்கு அவர் பதவி விலகும் தறுவாயில் எழுதினார். இளம் பிராயத்திலிருந்தே கல்வியில் சிறந்த ஜெயசாமராஜர் மாமேதையாக வளர்ச்சியுற்றார். அரச குடும்பத்தில் பிறந்தாலும் ஆரம்ப நாளிலிருந்தே சாமானியருடன் பழகி அகங்காரம் சிறிதும் அற்றவராக வாழ்ந்தார்.

நமது கலைகளின் காவலனாகத் திகழ்ந்தார். குறிப்பாக சங்கீத சாகரத்தின் எல்லைகளைத் தொட்டவராகச் சிறந்தார். கர்நாடக இசை தவிர மேனாட்டு இசையிலும் நிபுணர். நமது சங்கீத உபாசகர்களின் வணக்கத்துக்குரிய சாகித்யகர்த்தா.

சம்ஸ்கிருதத்தில் பேரறிஞராக, தத்துவ மேதையாக உலகெல்லாம் கொண்டாடப்பட்ட ஜெயசாமராஜர் டென்னிஸ் விளையாட்டிலும் ஈடுபாடு கொண்டார். குதிரை ஏற்றம் தெரியும். வேட்டைப் பிரியர்.

இறை உணர்ச்சி நிரம்பப் பெற்றவரானஅவர் கொடையில் கர்ணனாகவும் விளங்கினார்:

பாரதப் பெருமகன் என்ற வர்ணனைக்குச் சகல விதத்திலும் பொருத்தமான ஸ்ரீ ஜெயசாமராஜ உடையார் அவர்களால் இந்நாடு அடைந்துள்ள நன்மைகளை நன்றியோடு எண்ணி மறைந்த மாமன்னருக்கு அஞ்சலி செலுத்துகிறோம்.

என்ன சேதி?

அதிகாரக் குவிப்பில் ஆபத்து!

அன்னியப் படையெடுப்பு போன்ற நெருக்கடி நிலையில் பயன்படுத்த வேண்டிய சட்டம் இன்று கள்ளக் கடத்தல்காரர்களைப் பிடிக்க உபயோகப்படுகிறது. இந்தச் சட்டம் அரசுக்கு அபரிமிதமான அதிகாரங்களை வழங்குகிறது. இந்த அவசரகாலச் சட்டத்தைப் பயன்படுத்தாமல் போனால் இத்தனை கள்ளக் கடத்தல்காரர்களை அரசு இத்தனை துரித காலத்தில் சுற்றி வளைக்கவே முடியாது.

அபரிமிதமான அதிகாரங்களை அரசு தனக்குத்தானே வழங்கிக் கொள்ளும்போது அதை சர்வ ஜாக்கிரதையாகவும் நியாய உணர்ச்சி தவறாமலும் பிரயோகிக்க வேண்டும்.

கள்ளக் கடத்தல்காரர்களைக் கம்பி எண்ண வைப்பதை யாரும் ஆட்சேபிக்க மாட்டார்கள். ஆனால் அதே சட்டம் ஜனசங்கத் தலைவர் வாஜ்பாய் அவர்களைக் கைது செய்யத் துஷ்பிரயோகம் செய்யப்படும்போது நெஞ்சம் பதறுகிறது.

அதிகார ஆணவம் அரசின் ஜனநாயக உணர்வுகளைக் கொன்றுவிடலாகாது. ஒன்றிலிருந்து மற்றொன்று என்று அநீதிகளை இழைக்க அரசுக்கு உந்துதல் ஏற்படுவதுதான் அதிகாரக் குவிப்பில் உள்ள பேராபத்து.

மிரட்டுகிறார் முதல்வர்!

அரசின் அனுமதியின்றி 1971ல் எழுநூறு 'வாகன்'களில் அரிசி தமிழகத்திலிருந்து பிற மாநிலங்களுக்குச் சென்றிருக்கிறது. இதற்கான பர்மிட்டுகள் கள்ளத்தனமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன.

இதில் திமுக அரசுக்கோ, மந்திரிகளுக்கோ எந்தவிதமான சம்பந்தமும் கிடையாது என்கிறார் முதல்வர். அப்படி சம்பந்தம் இருப்பதாக நிரூபிக்கப்பட்டால் நடவடிக்கை எடுப்பாராம். மந்திரி தண்டனை பெறச் செய்வாராம். நிரூபணமாகவில்லை என்றால் குற்றம் சுமத்தியவர் தண்டனைக்குள்ளாக வேண்டுமாம். இந்த ஊழலில் அரசையோ அமைச்சரையோ சம்பந்தப்படுத்தி எழுதும் பத்திரிகைகள்மீது மான நஷ்ட வழக்குத் தொடுப்பாராம். மிரட்டியும் பொறுப்பைத் தட்டிக் கழித்தும் முதல்வர் தப்ப முடியாது. திமுக

அரசுக்கோ அல்லது மந்திரிக்கோ இதில் நேரடியான சம்பந்தம் இல்லை என்றே வைத்துக் கொள்வதானாலும் தார்மீகப் பொறுப்பு அமைச்சரவைக்கு உண்டு; உணவு மந்திரிக்கு நிச்சயம் உண்டு. இவர்கள் ஆட்சியில் இத்தனை பெரிய ஊழல் நடந்திருக்கிறது என்றால் அது ஆட்சியின் அசிரத்தையையும் ஆற்றலின்மையையும் சுட்டிக் காட்டுகிறது. இவ்வளவு பெரிய மோசடிகள் நடக்க அனுமதிக்கும் ஆட்சியாக விளங்குகிற காரணத்தாலேயே இந்த அமைச்சரவை ராஜினாமா செய்ய வேண்டும் என்று மக்கள் கோர உரிமை பெற்றிருக்கிறார்கள்.



தமிழ்வேள்

மைசூர் மன்னரின் மறைவை அடுத்துத் தமிழ்வேள் காலமான செய்தியும் கிடைத்திருக்கிறது.

திரு பி. டி. ராஜன் செல்வக் குடும்பத்தில் பிறந்து தமிழ்ச் சமூகத்தையே தமது குடும்பமாக ஏற்றுச் சிறந்தவர். மேல்நாட்டில் பாரிஸ்டர் பட்டம் பெற்றுத் திரும்பியபோதிலும் தமிழ் மொழியில் தணியா ஆர்வம் கொண்டு இலக்கிய வட்டாரங்களில் போற்றப்பட்டவர்.

ஜஸ்டிஸ் கட்சியில் சேர்ந்து மந்திரியாக விளங்கி ஆங்கில அரசால் ஸர் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டபோதிலும் பாரத சுதந்திரத்துக்கும் சுதந்திரத்தின் பின் நல்லாட்சிக்கும் பாடுபட்டு மக்களின் மதிப்பில் உயர்ந்தவர்.

சட்டசபைக்குள்ளே புகுந்து அறம் ஆட்சி செலுத்த வேண்டும் என்பதற்காக நீண்ட காலம் உழைத்தவர். சட்டசபைக்கு வெளியே வந்து இறை உணர்ச்சி ஆட்சி செலுத்த வேண்டும் என்பதற்காகத் தொண்டாற்றியவர்.

மதுரை மீனாட்சி கோவில் திருப்பணிக்கு அவர் எடுத்துக் கொண்ட பெருமுயற்சி அவரது பொது வாழ்வின் சிகரமான கட்டமாக அமைந்தது:

அந்தச் சிகரத்தில் ஏறியவர் உயிர் வாழ்வின் சிகரத்தையும் எட்டிவிட்டார்.

அமிர்தராஜ் சகோதரர்களின் சாதனை

அமிர்தராஜ் சகோதரர்களின் கடுமையான பயிற்சியும், அவர்களது இங்கிலாந்து – அமெரிக்க டென்னிஸ் பந்தய அனுபவமும் பூனாவில் ரஷ்யக் கோஷ்டியினரோடு கடுமையாக ஆடத் தெம்பு தந்தன. இந்தப் பந்தயங்களில் இரட்டையர் ஆட்டமும், ஆனந்த் – காருலியா மாட்சமே வெற்றி தோல்வி நிர்ணயிக்கும் பந்தயங்களாகத் திகழ்ந்தன. இரட்டையர் ஆட்டத்தில் அமிர்தராஜ் சகோதரர்களின் 'மாரத்தான்' ஆட்டம் வெற்றிக்கு அஸ்திவாரமாயிற்று. இவ்விருவருமே காருலியாவைத் தோல்வியடைய வைத்து டேவிஸ்கோப்பையில் இறுதி ஆட்டத்துக்குத் தகுதி பெற்றவர்களாகி விட்டார்கள். ரஷ்ய டென்னிஸ் ஆட்டக்காரர்களான மெட்ரிவேலியும் காருலியாவும் இறுதிவரை போராடி வெற்றியைத் தங்கள் பக்கம் திருப்ப முயன்றனர். இந்த டென்னிஸ் சிம்மங்களை எதிர்த்து வெற்றி வாகை சூடிய அமிர்தராஜ் சகோதரர்களை வாழ்த்துகிறோம்.

இறுதி ஆட்டத்தில் இவர்கள் சந்திக்கப் போவது இத்தாலியா தென் ஆப்பிரிக்காவா என்பது இன்னும் தீர்மானமாகவில்லை. தென் ஆப்பிரிக்காவானால் இந்தச் சந்திப்பு நிகழுமா என்பதும் சந்தேகம்தான். அவர்களின் நிறபேதக் கொள்கை காரணமாக நாம் இறுதிப் போட்டியைப் புறக்கணிக்க நேரலாம். இத்தாலியாயிருந்தால் ஒரு கை பார்க்கலாம்!

ராஜாஜி சிந்தனை

விவேகானந்தரின் விருப்பம்

தேசத்தை எந்தவிதமான விபரீதம் அணுகுவதானாலும் சரி, நமது மக்கள் அதிலும் குறிப்பாக இளம் தலைமுறையினர் தங்கள் ஆத்மாவைப் பரிசுத்தமாக வைத்துக்கொண்டார்களானால் நாட்டைப்பற்றிக் கவலையில்லை. பொய்மை, ஏமாற்று போன்றவை தங்கள் உள்ளத்தில் இடம் பெற அனுமதியாமல், தங்கள் நல்லொழுக்கத்தைக் காப்பாற்றிக்கொள்ள எந்தவிதமான தியாகம் புரியவும் இளைஞர்கள் தயாராயிருந்தால் போதும். டில்லியிலோ இதர ராஜ்யத் தலைநகரங்களிலோ நிர்வாக ஊழல்களும், கொள்கைத் தவறுகளும் எவ்வளவு நேர்ந்தாலும் அது நாட்டைப் பாதிக்காது.


இளைஞர்களிடம் இந்தத் திடசித்தம் இல்லாது போனால் எப்பேர்ப்பட்ட சிறந்த கொள்கையானாலும் நிர்வாக ஆற்றலானாலும் அவற்றால் நம்மைக் காப்பாற்ற முடியாது.

இளையபாரதம் தேசப் பற்றின் இந்த உச்ச நிலைக்குத் தன்னை உயர்த்திக்கொள்ளட்டும். பொய்மை, ஏமாற்று, அற்பத்தனம் இவற்றை விட்டொழித்து நடத்தையில் பரிசுத்தத்தை மேற்கொண்டு அதனையே தாய்நாட்டுக்குக் காணிக்கையாக்கட்டும். விவேகானந்தர் இதையே விரும்புவார். — சுயராஜ்யா, ஜனவரி 18, 1964



நினைவில் நிற்கும் நேரங்கள்!
பின்னி அறிந்திடும், நீங்கள் எப்படித்
தோற்றமளிக்க விரும்புவீர் என்பதை
Interpub/BB/48/74 tam

யூகோ பாங்க்கின் உதவிக் கரம்:



தொழிலதிபர்களுக்கு உதவ, பணவசதி செய்தளிக்கக் காத்திருக்கிறது

நீங்கள் ஒரு சிறுதரத் தொழில் தொடங்க எண்ணம் கொண்டிருந்தாலோ அல்லது முன் பேயுள்ளதை விரிவாக்க விரும்பினாலோ பண வசதிக்கு உடனே யூகோ பாங்கிற்கு வாருங்கள்.

எங்களது புதிய திட்டத்தின் கீழ் கட்டிடம் அமைத்தல், ப்ளான்ட் மற்றும் உபகரணங்கள் வாங்குதல் ஆகியவற்றிற்கு தாராளமான கடனுதவி பெறுவீர்கள்.

சுலபமான நிபந்தனைகள். ஆனால் ப்ளான்ட் உபகரணங்கள் வகையில் உங்கள் தற்சமய முதலீடு ரூ. 7.5 லட்சத்திற்கு மேல் போகக் கூடாது. இந்த ஒன்றுதான் நிபந்தனை.

விவரங்களுக்கு உங்கள் அருகிலுள்ள யூகோபாங்க் கிளையுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யுனைடெட் கமர்ஷியல் பாங்க்

தாங்களே தங்களுக்கு உதவ மக்களுக்கு லாபகரமாக உதவுகிறது

UCOC-38 TAM

சிவத்தின் சக்தி நாராயண சகோதரி

(8)



ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி
காமகோடி சங்கராசார்ய
ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிகள்

பரமேசுவரனும் ஸ்ரீமன் நாராயணனும் ஒரே வஸ்து; இரண்டல்ல. பெயர் வேறு, உருவம் வேறு, வேலை வேறு. ஆனால் உள்ளேயிருக்கப்பட்ட வஸ்து ஒன்றேதான். ஸ்ரீ சங்கர பகவத் பாதர்களின் அபிப்பிராயம் இதுதான். கேள்வியும் பதிலுமாக 'ப்ரச்னோத்தர ரத்னமாலிகா' என்று அவர் ஒரு கிரந்தம் செய்திருக்கிறார்.

அதில் ஒரு கேள்வி: 'பகவான் யார்?'

அதற்குப் பதில்: 'சங்கரனாகவும் நாராயணனாகவும் இருக்கிற ஒருவன் — சங்கர நாராயண: ஏக:'

இதிலிருந்து ஆசாரியாள் மனசில் சிவன், விஷ்ணு என்ற பேதபாவம் கொஞ்சம்கூட இல்லை என்றாகிறது.

இதே மனோபாவத்தில்தான் ஸ்மார்த்தர்கள் எல்லோரும், ஒவ்வொரு காரியத்தையும் 'பரமேசுவரப் ப்ரீத்யர்த்தம்' என்ற சங்கல்பத்துடன் ஆரம்பித்து, முடிவில் 'கிருஷ்ணார்ப்பணம்' என்று பூர்த்தி பண்ணுகிறோம்.

தீவிர வைஷ்ணவர்களைக் கேட்டால், விஷ்ணுதான் கடவுள்; சிவன் மற்ற ஜீவராசிகளைப்போல் என்பார்கள். இதே மாதிரி வீர சைவர்களைக் கேட்டால் சிவன்தான் முழு முதல் தெய்வம்; விஷ்ணு ஜீவகோடியைச் சேர்ந்தவர்தான் என்பார்கள். இவர்கள் ஒவ்வொருவரது சித்தாந்தப்படியும் சிவன் அல்லது விஷ்ணுதான் எல்லா ஜீவராசிகளின் இருதயத்துக்குள்ளும் அந்தர்யாமியாக இருக்கிறார். இப்படி வைத்துக் கொண்டாலும் ஒன்று, சிவன் விஷ்ணுவின் இருதயத்தில் இருக்கிறார்; அல்லது விஷ்ணு சிவனின் இருதயத்தில் இருக்கிறார்.

சித்தாந்தம் என்று கட்சி பேசாமல் நடுநிலையிலிருந்து பேசக்கூடிய மகா கவிகளான காளிதாஸன், பாணன் முதலியவர்களுடைய வாக்கைப் பார்த்தால் ஒரே வஸ்துதான் பல தேவதைகளாக வந்திருக்கிறது என்று ஸ்பஷ்டமாகத் தெரியும். அநுபவ சிகரத்திலிருந்து பேசிய மகான்கள் தங்களுக்கென்று ஓர் இஷ்ட தெய்வம் இருந்தாலும் கூட, மற்ற தேவதைகளும் அதுவேதான் என்று தெளிந்து கூறியிருக்கிறார்கள். 'மகேசுவரனுக்கும் ஜனார்த்தனனுக்குமிடையே வஸ்துபேதம் துளிக்கூட இல்லாவிட்டாலும், என் மனசு என்னவோ சந்திரனைச் சிரசில் சூடிய பெருமானிடம்தான் விசேஷமாக ஈடுபடுகிறது' என்று ஸ்ரீ அப்பைய தீக்ஷிதர் கூறுகிறார். 'நான் சைவன்தான்; சிவ பஞ்சாட்சர ஜபம் செய்கிறவன்தான். இருந்தாலும் காயாம்பூ நிறத்துக் கோபிகா ரமணனிடமே என் சித்தம் லயிக்கிறது' என்கிறார், 'கிருஷ்ண கர்ணாம்ருத'த்தில் லீலாசுகர்.

இஷ்ட தெய்வம் என்று ஒன்று இருக்கலாம். ஆனால் அதுதான் எல்லாமாகியிருக்கிறது என்பதால் அதுவேதான் மற்ற தெய்வங்களுமாகியிருக்கிறது என்ற எண்ணம் இருக்கவேண்டும். ஒன்றைப் பிடித்துக் கொண்டதற்காக இன்னொன்றை நிந்திக்கக் கூடாது. விஷ்ணுதான் கடவுள், சிவன் ஒரு ஜீவன் — அல்லது சிவன்தான் கடவுள், விஷ்ணு ஒரு ஜீவன் — என்றும் கூட ஒரு மூர்த்தியிடம் துவேஷம் பாராட்ட இடமில்லை.

ஒரு புராணத்தில் சிவன் விஷ்ணுவை நமஸ்கரிக்கிறார், இன்னொரு புராணத்தில் விஷ்ணு சிவனை நமஸ்கரிக்கிறார் என்பதால் இவர்கள் சின்னவர்களாகிவிடவில்லை. அவர்கள் பெரிய பக்தர்கள் என்ற நினைப்பிலாவது அவர்களை நமஸ்கரிக்கத்தான் வேண்டும். சிவனை நமஸ்காரம் பண்ணு என்று சிவனே சொல்லாமல் விஷ்ணு அதை நமக்குக் காரியத்தில் உபதேசிக்கிறார்; இப்படியே நமக்கு விஷ்ணு பக்தி உண்டாக்கச் சிவன் விஷ்ணுவைப் பூஜிக்கிறார்.

முன்னே சொன்ன 'ப்ரச்னோத்தர ரத்ன மாலிகை'யில் இன்னோரிடத்தில், 'மேலான தெய்வம், பரதேவதை, எது?' என்ற கேள்வியை எழுப்பிக் கொண்டு அதற்கு 'சித்சக்தி' என்று பதில் சொல்கிறார் ஸ்ரீ ஆசார்யாள். சித்சக்தி என்பதுதான் பரப்பிரம்மத்தின் பேரறிவு. அதுதான் அத்தனை தேவதைகளுமாயிற்று. அதுவே நமக்கு நல்லறிவு தரும் ஞானாம்பிகை. அந்த ஞானாம்பிகைதான் நமக்கு எல்லா விதமான பேத புத்தியும் போவதற்கு அநுக்கிரஹிக்க வேண்டும்.





☐ லக்ஷ்மி நாராயணர் கோவில்.
☐ ஜந்தர் மந்தர்.
☐ டில்லி பஜார்.
☐ நான் நிறுவ விரும்பும் சாம்ராஜ்யத்தைப் பற்றிக் கனவு காணும் இடைப் பையன். — பின்னால் சந்திரகுப்த மௌரியன். பாராளுமன்றக் கட்டிடத்தின் முன் உள்ளது இச் சிலை.

தலைநகரிலே ஒரு தமிழன்!

ஒவ்வொரு மனிதனுக்கும் தனித் தன்மை இருப்பது போல் ஒவ்வொரு நகரத்துக்கும் தனித் தன்மை உண்டு. அதை நகர்வலம் வரும் ஒவ்வொருவரும் அவரவர் உள்ளத்தில் உணரலாம்.

தில்லிப் பட்டணம் மகாபாரத காலத்திலிருந்து வழி வழியாக, பலப் பல சாம்ராஜ்யங்களைக் கண்டும், இன்றும் புதுமையும் உற்சாகமும் கொண்டு மிளிரும் நகரமாகும்.

புது தில்லியின் தனித்துவத்தை நான் சென்று கொண்டிருந்த ஜி. டி. எக்ஸ்பிரஸ் ஆக்ராவை அடைந்தபோதே நுகரத் தொடங்கி விட்டேன். ஆக்ராவைக் காலை 8 மணி அளவில் ரயில் அடைந்தது. என் பெட்டிக்குள் திபுதிபு என்று 35 முதல் 40 வயதுக்குள் மதிக்கத் தகுந்த நால்வர் ஏறினார்கள். நன்கு சலவை செய்த வெள்ளை பைஜாமா ஜிப்பா அணிந்தவர்கள். ஒரே உற்சாகமாக ஒருவரையொருவர் கட்டிப் பிடித்துக் கொண்டு ஹிந்தியில் கேளிக்கையும் நகைச்சுவையுமாகப் பேசிக் கொண்டு வந்தார்கள். வண்டியில் நெடுந்தூரப் பயணிகள் பெஞ்சுகளில் அமர்ந்திருந்ததால் அவர்களுக்கு இடம் கிடைக்கவில்லை. மேல் பலகையில் ஓர் எம்பு எம்பி உட்கார்ந்து விட்டார்கள் — சப்ளாங்கால் போட்டுக் கொண்டு. அட்டகாசப் பேச்சுத் தொடர்ந்தது. காலை ஆகாரம் வேண்டுமா என்று சிப்பந்தி வந்தான். இன்னொரு சிப்பந்தி தட்டு நிறைய ஆம்லெட் கொண்டு வந்தான். முதல் சிப்பந்தியிடம் உப்புமா வாங்கினார்கள். ஆம்லெட்டும் வாங்கினார்கள். மற்றொரு சிப்பந்தி காப்பி கொண்டு வந்தான். எல்லாரிடம் இந்நால்வரும் வேண்டிய அளவு வாங்கிக் கொண்டார்கள். வாங்கிய வேகத்தில், செய்த அமர்க்களத்தில் அந்த ரயில்வேத் தொண்டர்களுக்கு எவ்வளவு உப்புமாப் பொட்டலம் கொடுத்தோம்? எத்தனை ஆம்லெட் கொடுத்தோம்? எத்தனை கப் காப்பி கொடுத்தோம்? என்ற கணக்கே மறந்து விட்டது. இல்லை, அவர்களால் கணக்கு வைத்துக் கொள்ள முடியவில்லை! ஆனால் அந்நால்வரும் ஒருவருடன் ஒருவர் போட்டி போட்டுக் கொண்டு 'நீ உப்புமாவுக்குக் கொடு! நான் காப்பிக்குத் தருகிறேன்' என்று பேசி முடிவெடுத்துப் பணம் தந்தார்கள். சிப்பந்திகள் முகத்தில் நிறைவிருந்தது. கணக்குப் புரியாது போனாலும் பணம் தாராளமாகவே கிடைத்திருக்க வேண்டும்!

வண்டி நகர்ந்தது. பெட்டியினுள் ஒரு பிச்சைக்காரி பாடும் குரல் கேட்டது. பதினெட்டு வயது மதிக்கத் தகுந்த பெண் உருதுப் பாடலைப் பாடிக் கொண்டு வந்தாள். அவள் பார்க்கவும் அழகாக இல்லை. பாடிய முறையும் நன்றாயில்லை. எனினும் நமது நண்பர்கள் பிரமாதமாகத் தலையை அசைத்து உடலையே அசைத்து ரசித்தார்கள். திடீர் என்று அவர்களில் ஒருவர் ''இந்தப் பிச்சைக்காரிக்கு நீ ஒரு ரூபாய் தந்தால் நான் இரண்டு ரூபாய் தருகிறேன்!'' என்று சவால் விட்டார்.

''நான் இரண்டு ரூபாய் கொடுத்தால் நீ நாலு ரூபாய் தருவாயா?'' என்றார் பக்கத்திலிருந்த நண்பர்.

''சரி!'' என்றார் முதலில் பேசியவர்.

இருவருமே பிச்சைக்காரிக்குக் கொடுத்தார்கள். வாங்கிக்கொண்ட பிச்சைக்காரி தொடர்ந்து பாடிக் கொண்டேயிருந்தாள்.





நகர்வலம்

இரண்டாம் நபர் மீண்டும் ஐந்து ரூபாய் நோட்டை எடுத்தார். ''நீ பத்து ரூபாய் தருவாயா?'' என்று கேட்டார்.

''நீ கொடுத்துவிட்டால் நான் நிச்சயம் பத்து ரூபாய் தருகிறேன்'' என்றார் முதல் நண்பர்.

அப்படியே இருவரும் போட்டி போட்டுக் கொண்டு அந்தப் பிச்சைக்காரிக்குக் கொடுத்தார்கள். கிட்டத்தட்ட 32 ரூபாய் சேர்ந்தது. ஐந்து நிமிஷங்களில் சம்பாதித்து விட்டாள்! பிறகு எல்லாருமாகச் சேர்ந்து பிச்சைக்காரியை அனுப்பி வைத்தார்கள்.

பிச்சைக்காரி போனாளோ இல்லையோ, முதல் நண்பர் தாமே பாட ஆரம்பித்து விட்டார். அதை ஒருவர் பாராட்டினார். மற்ற இருவர் கேலி செய்தனர். ஆனால் அதை அவர் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை. பாடிக் கொண்டே யிருந்தார். ராகத்துக்கு ஏற்ப உடலை நெளித்து வளைத்து.

''நீங்கள் ஆக்ராவைச் சேர்ந்தவர்களா? தில்லியைச் சேர்ந்தவர்களா?'' என்று இதுகாறும் சும்மா இருந்த நான் என்னுடைய ஓட்டை உடைசல் ஹிந்தியில் கேட்டேன்.

தாம் உண்மையில் ஹரித்வாரைச் சேர்ந்தவர் என்றும், கையில் இரண்டு ரூபாயுடன் தில்லிக்கு வந்தவர் என்றும், இங்கு சாந்தினி சௌக்கில் மருந்துக் கடை வைத்து நடத்தி வருவதாகவும் கூறினார். தாம் இப்போது எவ்வளவோ சௌகரியமாக இருந்த போதிலும் ஏழைகளை மறப்பதில்லை என்றும் ஒவ்வொரு சனிக்கிழமையும் சுமார் நூறு பேருக்கு அன்னதானம் செய்து வருவதாகவும் சொன்னார். பகவத்கீதையில் தமக்கு அளவுகடந்த ஈடுபாடு என்றும், அதனை உருது மொழியில் அகவற்பா முறையில் மொழிபெயர்த்திருப்பதாகவும் தெரிவித்தார். கூறியவதோடு அவர் சும்மா இருந்தால் தேவலையே! தில்லி சென்றடையும்வரை தமது உருது பகவத்கீதையை எனக்குப் பாடிக் காட்டி, ஹிந்தியிலும், ஆங்கிலத்திலும் அந்தப் பாடல்களின் கருத்தை விளக்கி வந்தார். எனக்குப் போரடித்தது என்பது உண்மையானாலும் அவருடைய பகவத்கீதை பக்தியையும் உருது மொழிப் பற்றையும் வியந்து கொண்டே யிருந்தேன்! இதுதான் தில்லி!

* * *

புது தில்லி ஸ்டேஷனை விட்டு வெளியே வந்ததும் திடுக்கிட்டேன். 'எப்படி நாம் சென்னைக்குத் திரும்பி விட்டோம்!' என்று. ஏனெனில் புது தில்லி ஸ்டேஷனுக்கு வெளியே நின்றிருந்த டோங்கா வண்டிகளின் குதிரைகள் சென்னை ஜட்கா வண்டிக் குதிரைகளை விட மோசமாக இருந்தன! ஒரு காலத்தில் உடற்புஷ்டியான குதிரைகள் கம்பீரமான அழகுடன்



டது தில்லியின் தார் ரோடுகளில் 'டக் புக்' என்று குளம்புச் சத்தம் செய்து கொண்டு டோங்காவை இழுத்துச் சென்றன. அது கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். அதில் சவாரி செய்வதே ஓர் அரிய அநுபவம். டாக்ஸிகளும், ஆட்டோ ரிக்ஷாக்களும், பட் படிகளும் தில்லிக் குதிரைகளைத் தெருவி ராமன் கழுதைகளை விட மோசமான நிலைக்குக் கொண்டு வந்து விட்டன. இந்தப் பரிதாப நிலையைக் கண்டபோது உள்ளம் அழுதது! 'எத்தனையோ சாம்ராஜ்யங்களின் அழிவைப் பார்த்த தில்லியே! குதிரை வளர்ப்பு என்னும் அரிய கலையையும் அழித்துவிட்டு என்ன மிதப் பில் இருக்கிறாய்' என்று கடிந்து கொள்ளத் தான் தோன்றியது.

பாரத நாட்டின் தலைநகரமாதலால் பல தேச மக்கள் சர்வ சாதாரணமாகப் போய்க் கொண்டிருப்பதைப் பார்க்கலாம். பல்வேறு மொழி பேசும் ராஜ்யங்களைச் சேர்ந்த மக்கள் ஒன்றிக் கலந்து உறவாடுவதைப் பார்க் கலாம். ஏன், சமயத்தில் ஆண் பெண் வித்தி யாசம் கூடத் தெரியாமல் பழகுவதைப் பார்க் கலாம் — முக்கியமாகத் தில்லி பஸ்களில்.

தில்லி பஸ்களைப் போன்ற மட்டமான பஸ்கள் உலகில் எங்கேயுமே இராதோ என்று தோன்றுகிறது. ஏறுவதற்கும் இறங்குவதற் கும் ஒரே வழி.

ஒரு பஸ் ஸ்டாண்டில் நின்று கொண்டிருந் தேன். ஒரு பெண் முண்டியடித்துக் கொண்டு எனக்கு முன் ஏறப் பார்த்தாள். நான் பெண் ணாயிற்றே என்று சற்றுப் பின்னுக்கு ஒதுங்கி அவள் ஏற வழி விட்டேன். அப்போது என் னைப் பின்னாலிருந்து யாரோ வன்மையாக முட்டித் தள்ளிக் கொண்டிருந்தார்கள். அந் தப் பெண் வசதியாக ஏற வழி செய்தபின் என்னை அவ்வளவு பலமாகப் பின்னாலிருந்து தள்ளியது யார் என்று பார்த்தால் அங்கு நின்றதும் ஒரு பெண்!

இந்தச் சந்தர்ப்பத்தில் புதுதில்லியில் சகஜமாக வழங்கும் ஒரு நகைச்சுவை நினை வுக்கு வருகிறது.

"இந்தப் பாரத நாட்டில் ஒரே ஒரு ஆண் தான் இருக்கிறார் — அவர்தான் இந்திரா காந்தி!"

தில்லி யமுனை நதிக் கரையில் உள்ளது. அதன் எதிர்க் கரையில் உள்ளது ஷஹாதரா என்ற ஊர். அங்கு மகாத்மா—ராஜாஜி இவர் களின் பேரரான திரு ராஜ்மோகன் காந்தி, திரு சண்டிராம் என்பவரின் மகளான சௌபாக்கியவதி உஷாவைத் திருமணம் செய்துகொண்டார். திரு சண்டிராம் ஸிந்திக் காரர். அவர்கள் ஹிந்துக்களானாலும் 'கிரந்த சாகேப்' என்ற சீக்கிய மத நூலை வைத்துத் தான் திருமணம் நடத்துவார்கள். ஆனால் ராஜ்மோகன் — உஷா திருமணத்தை ஆரிய சமாஜ முறைப்படி நடத்த ஏற்பாடாகி இருந்தது.

ராஜ்மோகன் — உஷா திருமணத்தை மிகச் சிறப்பாக நடத்தித் தந்த புரோகிதர் அக்னி வளர்த்து ஹோமம் செய்வித்ததுடன் நகைச் சுவையும் கௌரவமும் கம்பீரமும் தொனிக்க ஸப்தபதியின் பொருள் விளக்கி ஏழு அடிகளை எடுத்து வைக்கச் செய்தார். மன நிறைவை ஏற்படுத்திய இந்த வைபவத்துக்கு ஜப்பானி லிருந்தும், இங்கிலாந்திலிருந்தும், லாவோஸி லிருந்தும் மேற்கிந்தியத் தீவுகளிலிருந்தும் கூட ராஜ்மோகன் காந்தியின் நண்பர்கள் வந்து பங்கு கொண்டனர். ராஜ்மோகனின் மாமா திரு வி. ஆர். நரசிம்மன், பெரியம் மாள் நாமகிரியம்மாள், அன்னை லட்சுமி தேவதாஸ் காந்தி ஆகியோர் சென்னையி லிருந்து வந்திருந்தனர். ஸ்ரீ ராஜ்மோகனின் பெரியப்பாவின் புதல்வி ஸ்ரீமதி சுமித்ரா குல்கர்னி (எம்.பி.) அவர்கள் வீட்டிலிருந்து பிள்ளை வீட்டார் கல்யாணம் நடக்கும் பெண் வீட்டுக்குப் பெரும் கோஷ்டியாகச் சென்ற னர். மொரார்ஜி தேசாய், ஸ்ரீமன் நாராயண், பியாரேலால், பெர்னாண்டஸ், டாக்டர் சுசீலா நய்யார், மணிபென் பட்டேல் முதலிய காந்தி பக்தர்களையும் காந்தி குடும்பத்தைச் சேர்ந்த வர்களையும் ஒருமிக்கக் காண நேர்ந்தபோது மெய்சிலிர்த்தது. உண்மையும் நேர்மையும் சுரம் கோத்துக் கொண்டு ராஜ்மோகன் திரு



இப்போது!

நீடித்த அழகு
நவீன நாகரீக வசதி
இரண்டையும் உங்கள்
சமையலறைக்குச் சேர்ப்பது

ஹாரால்ட்வேர்




சமைத்தவுடன் பரிமாறும் பாத்திரங்கள் உபயோகிப்பதில் நீங்கள் பெருமையடைவீர்கள்!

ஹாரால்ட்வேர்-சமையலறையானாலும் சரி சாப்பாட்டு மேசையானாலும் சரி...ஏற்றமிகு எழில் சேர்க்கும்.
நாகரீக இல்லத்தரசிக்கு உகந்த சமையலறைப் பாத்திரங்களின் சீர் வரிசை

ஹாரால்ட்வேர்-கண்ணுக்கு-கட்டுறுதி வாய்ந்தது.
பல்லாண்டுகள் நீடித்து ஒளி சிந்தும் எழில் தோற்றம். கெட்டியான தூய அலுமினியத்தினால் செய்யப்பட்டது.

ஹாரால்ட்வேர்-இதில் அதிகப்படி கனமுள்ள அடித்தளம் இருக்கிறது.
[illegible] நீண்ட நேரம் சூடாகவே வைத்திருக்கிறது.



ஹாரால்ட்வேர்-இதில் ஸ்டாண்டாகவும் பயன்படும் மூடியிருக்கிறது. உங்கள் மேசையில் சூட்டுக்கறை படியாமல் காக்கிறது.
தேவைப்பட்ட போது, மூடியை ஸ்டாண்டாகவும் பயன்படுத்தலாம்.
ஹாரால்ட்வேர் ரகம் ப்ரையிங் பேன்ஸ், சாஸ்பேன்கள், காஸரால்கள், கெட்டில்கள் பல சைஸ்களில் கிடைக்கும்.
எல்லாத் தருணத்திற்கும் ஏற்ற பரிசு.

IS:21 ISI SIC
• அலுமினியம் தரச் விதிகளுக்கு உட்பட்டது

தயாரித்து விற்பனை செய்வோர்
லாலுபாய் அமீசந்த் பி லி.
225-27 ஜே தாதாஜி ரோடு.
பம்பாய் 400 007

மேலும் விவரமறிய உங்கள் ஹாரால்ட்வேர் வியாபாரியை அணுகுக அல்லது ஹாரால்ட்வேர் போல்டருக்கு எழுதுக.

தமிழ்நாடு, கேரளா, ஆந்திரப் பிரதேசம், பாண்டிச்சேரி ஆகிய இடங்களுக்கு விநியோகஸ்தர்கள்
போபட் ஜமால் அண்ட் சன்ஸ் ஜமால் பில்டிங் 182, பிராட்வே சென்னை-600 001

Ratan Batra/LA/TM/04-AR

எஸ்ட்ரெலா சக்தி



இந்த சக்தி
தரும் ஒலி
உங்கள்
காதுகளில்
ரீங்காரம்
செய்கிறது.

இந்த சக்தி
தரும் ஒளியை
நீங்கள்
கண்ணெதிரே
காணலாம்







உங்கள் டிரான்ஸிஸ்டர் மற்றும் டார்ச்சில் எஸ்ட்ரெலா சக்தி காட்டும் அதிசயம் பாரீர்!

எஸ்ட்ரெலா பாட்டரிகளின் சக்தி: குடத்தில் காவேரிபோல! எஸ்ட்ரெலா பாட்டரீஸ் லிட்., பம்பாய்-400 019.


CMEB-2-203



"இருபது வருஷங்களுக்குப் பிறகு உன்னைப் பார்க்கிறேன். ஆளே மாறிட்டியே வசந்தா!''
"நான் வசந்தா இல்லே; வத்சலா!''
"அடிப் பாவி! பெயரைக் கூடவா மாற்றிக்கிட்டே?''



"அப்பெண்டிஸைடிஸ் ஆபரேஷன் பண்ணினேனே. ஏதாவது தொந்தரவு இருக்கிறதா?''
"ஒரே ஒரு தொல்லைதாங்க. அந்தப் பேரைச் சரியா உச்சரிக்க வரமாட்டேங்குது.''



"டேய், மரத்துமேலே என்னடா பண்ணறே?''
"கீழே விழுந்த மாங்காயை மறுபடியும் ஒட்ட வைக்கிறேன்!''

மணத்துக்கு வந்து ஆசி கூறியது போல் தோன்றியது.

மாலை புது தில்லி பட்டேல் ஹவுஸில் ஒரு வரவேற்பு நிகழ்ந்தது. ஸ்ரீ சி. சுப்பிரமணியம், வி. கே. ஆர். வி. ராவ், இன்னும் பல பத்திரிகையாளர்கள், நண்பர்கள், பிரமுகர்கள் எல்லோரும் வந்து சிறப்பித்தனர். மணிலா போகும் வழியில், ஸ்ரீமதி எம். எஸ்ஸும் ஸ்ரீ சதாசிவம் அவர்களும் இரவு எட்டேகால் மணிக்கு வந்து மணமக்களுக்கு ஆசி கூறினர்.

* * *

தில்லிக்குப் போனால் நம் பிரதிநிதிகள் கூடிப் பேசும் மக்கள் சபை (லோக் சபா)க்கு விஜயம் செய்யாமல் திரும்பலாமா?

நான் சென்ற அன்றுதான் லைசென்ஸ் ஊழல் விவகாரம், பொய்க் கையெழுத்து விஷயம் பேசப்பட்டது. பார்லிமெண்டில் சோஷலிஸ்ட் அங்கத்தினர் மது லிமயே மிக ஆக்ரோஷத்தோடு பேசிக் கொண்டிருந்தார். அதையொட்டிப் பழைய காங்கிரஸ் மிச்ரா பேசினார். ஜனசங்க அங்கத்தினர் வாஜ்பாய் பேசினார். இடை இடையே ஆளும் கட்சியினரின் குறுக்கீடுகள் இருந்தன. சபா நாயகர் தில்லான் சபையைக் கட்டுப்படுத்தி ஒழுங்குபடுத்தப் படாத பாடு படவேண்டியிருந்தது. ஊழல் புகார்கள் பற்றி ஹிந்தியில் தான் மேற்குறிப்பிட்ட அத்தனை பேரும் பேசினர். திரு மாவ்லங்கர் ஆங்கிலத்தில் தெளிவாகப் பேசினார். பிறகு கையெழுத்துப் போட்ட அங்கத்தினர்கள் சிலர் தங்களுக்கும் இந்த லைசென்சு ஊழலுக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லையென்றும், தாங்கள் எந்த மகஜரிலும் கையெழுத்துப் போடவில்லை என்றும் எழுதி வைத்துப் படித்தனர்.

ஒருவருக்குப் பின் ஒருவராக அவர்கள் படித்த வாசகம் ஒரே மாதிரி யிருக்கவே, சபையிலிருந்த பீலூ மோடி "இவர்கள் அத்தனை பேரும் ஒரே வக்கீலை ஏற்பாடு செய்து கொண்டிருப்பார்கள் போலிருக்கிறதே!'' என்றார். சபையில் 'கொல்' என்ற சிரிப்பு எழுந்தது.

ஒட்டுமொத்தத்தில் சபையைப் பற்றி ஓர் அபிப்பிராயம் கேட்டால், "ஐயோ கடவுளே! இவர்களா நம் பிரதிநிதிகள்! எந்த விஷயமும் புரிந்து கொள்ளக் கூடிய திராணி யில்லாதவர்கள் ஐம்பது கோடி மக்களின் அன்றாட வாழ்க்கையைப் பாதிக்கும் முடிவுகளை எடுக்கும் பொறுப்பில் இருக்கிறார்களே! மோதிலால் நேரு, விட்டல்பாய் பட்டேல், புலாபாய் தேசாய், சத்தியமூர்த்தி போன்ற அறிவு ஜோதிகள் ஒளிவீசிக் கொண்டிருந்த சபையில் வெறும் மின்மினிப் பூச்சிகள் உட்கார்ந்திருக்கின்றனவே!'' என்ற சோர்வுதான் ஏற்பட்டது!

* * *


"மலாய் மந்திர்! மலாய் மந்திர்!'' என்று பஸ் கண்டக்டர் சொன்னார்.

மலாய் என்றால் ஹிந்தியில் பாலாடை என்று எனக்குத் தெரியும். மந்திர் என்றால் கோவில் என்பதும் எனக்குத் தெரியும். அதனால் "பாலாடைக் கோயில்'' என்று அர்த்தம் செய்துகொண்டு அது என்ன கோவிலாக இருக்கும் என்று வியந்தேன்.

பக்கத்தில் இருந்த நண்பர் "ஆர். கே. புரத்தில் உள்ள உத்தரசுவாமி மலைக் கோயிலைச் சொல்கிறான். மலை—மலாய் ஆயிற்று; கோயில் மந்திர் ஆயிற்று. இரண்டும் சேர்ந்து 'மலாய் மந்திர்' ஆயிற்று'' என்று விளக்கினார்.

தமிழ்க் கடவுள் முருகன் தில்லியில் குடியேறியது மட்டுமல்ல; வேங்கடமுடையானும் தில்லியில் ஜாகை பிடித்து விட்டார்.

பொதுவாக வட நாட்டில் தமிழ் நாட்டில் வழங்கும் புரம் "புர்'' ஆகும். ஆனால் தில்லியில் உள்ள ராமகிருஷ்ணபுரம் மட்டும் சுருக்கப்படாமல் எல்லா மொழி பேசும் மக்களின் நாவிலும் புரம் என்றே வழங்கப்படுவதைக் கேட்டபோது தமிழ்நாட்டிலிருந்து சென்ற எனக்குத் தேனாகத்தான் இனித்தது. குறைகளும் இந்தப் பயணத்தில் தோன்றுமல்லை. அவற்றில் முக்கியமானது பட்டேல் சிலையும் மற்ற பல தலைவர்கள் சிலைகளும் உள்ள புது தில்லியில் 'ராஜாஜியின் சிலை இல்லையே' என்ற ஏக்கம்தான். தமிழகத்திலிருந்து தலைநகர் செல்லும் யாருக்குத்தான் இது மனத்தை உறுத்தாது? — **எஸ். வி. எஸ்.**


பிலிப்ஸ் தரும் இன்னொரு புதுமை!
புதிய புரட்சிகரமான 'அக்கூ-க்ரில்'* கொண்ட
பிலெட்டா காண்பதற்கு அதிக அழகாகவும், கேட்பதற்கு
அதிக இனிமையுடனும் விளங்குகிறது.
PHILIPS
'அக்கூ-க்ரில்' உங்கள் செவி
இன்பத்தை எவ்வாறு பெருக்குகிறது
பாருங்கள். இது ஒலி நயப்பாடுடன்
அமைக்கப்பட்டிருப்பதால்,
ஒலி அலைகள் தடையின்றிப்
பாய்கின்றன. ஆகையால்தான்
நீங்கள் இதன் ஒலி நயத்தை
அழுத்தமாக, தொய்வின்றி, சிறிதும்
இழக்காமல் கேட்க முடிகிறது.
இசைக் கலைஞர் கண்முன்னே
பாடுவதுபோன்று தோன்றுகிறது!
பிலெட்டாவின் சிறப்புகள்
இன்னும் பல. இதன் அழகான
கேபினெட்டுக்குள்ளே பிலிப்ஸின்
மற்ற சிறப்புகளும் பொதிக்
துள்ளன. உரக்க ஒலிதரும்
ஸ்பீக்கர், அதிக சக்தியுள்ள
சர்க்யூட் டிசைன்,
2 உணர்ச்சி மிகுந்த ஏரியல்கள்,
டோன் கன்ட்ரோல் கூட.
மற்றுமுள்ள சிறப்புகளைப்
பற்றி உங்கள் பிலிப்ஸ்
வியாபாரியைக் கேட்க
மறவாதீர்.
'ஒலிநயப் பண்போடு டிசைன் செய்யப்பட்ட 'அக்கூ-க்ரில்' பிலிப்ஸுக்கே உரித்தான சிறப்பு.
எதை வாங்கினாலும் சிறந்ததையே வாங்குங்கள்.
பிலிப்ஸ்
பிலிப்ஸ் இந்தியா லிமிடெட்
CHPR-296-165 TAM

பதினைந்தாம் அத்தியாயம்

"நமனை அஞ்சோம்!"

வேலனின் காதலி நீல மயில் ஒன்றை வளர்த்து வருகிறாள். அந்த மயிலைப் பார்க்கும்போதெல்லாம் அவளுக்கு முருகனுடைய நினைவு வருகிறது. காதலின் தாபம் அதிகமாகிறது. ஒரு நாள் மயிலைப் பார்த்துச் சொல்கிறாள்: "நீ பெருமான் முருகனுடைய வாகனம் அல்லவா? போ! போய் அவரை இங்கு விரைவில் அழைத்து வா!" என்று கட்டளை இடுகிறாள். கட்டளை இடுவதுடன் நிற்காமல் மயிலை அடிப்பதாகப் பய முறுத்தி விரட்டி விடுகிறாள்.

நீல மயில் விரைவில் திரும்பி வரும் என்றும், வரும்போது தன் மீது வேலனை ஏற்றிக் கொண்டு ஆடி வரும் என்றும் காதலி வழி பார்த்துக் கொண்டிருக்கிறாள். ஆனால், நெடு நேரம் காத்திருந்தும் மயிலையும் காணவில்லை - வேலனையும் காணவில்லை.


'வேலன் ஒருவேளை தன்னை அடியோடு மறந்து விட்டிருப்பாரோ?' என்று ஒரு கணம் தோன்றுகிறது.

உடனே, அந்தப் பழைய சம்பவம் ஞாபகத்துக்கு வருகிறது. கடைசித் தடவை வேலனை அவள் சந்தித்தபோது, "என்னை மறந்துவிடக் கூடாது!" என்று தான் இரந்து கேட்டுக் கொண்டதும், அவர் தம் வேலின் மேல் ஆணையாக, "உன்னை ஒருநாளும் மறக்க மாட்டேன்!" என்று வாக்களித்ததும் நினைவுக்கு வருகின்றன. உடனே, "இல்லை. அவர் ஒரு நாளும் மறந்திருக்க மாட்டார். இந்த மயில்தான் தாமதம் செய்கிறது" என்று தீர்மானித்துக் கொள்கிறாள்.

தன் மனக் கண்ணின் முன்னால் மயிலை உருவகப்படுத்தி நிறுத்திக் கொண்டு சொல்லுகிறாள்:

"மறவேன்மறவேன் என்று வேலின்மேல்
ஆணையிட்ட
மன்னரும் மறப்பாரோ நீல மயிலே!"

சிவகாமி பாடிக் கொண்டு அபிநயமும் பிடித்தபோது, சபையோரின் கண் முன்னாலிருந்த சிவகாமி மறைந்து விட்டாள். தமிழகத்தின் அதிதெய்வ





மான ஸ்ரீ சுப்பிரமணியர் கையில் வேலு டனே அவர்கள் கண் முன்னால் நின்றார். கருணையும் அன்பும் ததும்பிய கண்களி னால் முருகப் பெருமான் தன்னிடம் காதல் கொண்ட பெண்ணை நோக்கு வதையும், கையில் பிடித்த வேலின் மேல் ஆணை வைப்பதையும், 'உன்னை என்றும் மறவேன்!' என்று உறுதி கூறு வதையும் சபையோர் பிரத்தியட்ச மாய்க் கண்டார்கள்.

அடுத்த கணத்தில் வேலனும் வேலும் மறைய, வேலனைப் பிரிந்த காதலியை யும் நீல மயிலையும் சபையோர் தங்கள் எதிரே பார்த்தார்கள். காதலியின் உயிர் வேலனைப் பிரிந்திருக்கும் ஆற் றாமையினால் உருகிக் கரைவதையும் அவர்கள் கண்டார்கள்.

''அன்பர் வரவு நோக்கி இங்கு நான் காத்திருக்க
அன்னநடை பயில்வாயோ வன்ன மயிலே!''

என்னும் அடிக்குச் சிவகாமி அபிநயம் பிடித்தபோது, முதலிலே தன்னந்தனி யான ஒரு பெண், கண்களில் அளவற்ற ஆசையுடனும் ஆர்வத்துடனும், முடி வில்லாமல் நீண்டு சென்ற வழியைக் கண் கொட்டாமல் பார்த்துக் கொண் டிருப்பதைப் பார்த்தார்கள்.

பிறகு, அந்தப் பெண், அன்ன நடை பயிலும் வன்ன மயிலைப் பரிகசிப்ப தற்காகத் தானும் அன்ன நடை நடந்து காட்டியபோது, சபையில் 'கலீர்' என்ற சிரிப்பு உண்டாயிற்று. அவ்விதமே, முருகன் தன்னை வாகன மாய்க் கொண்ட பெருமிதத்தினால் மயிலின் தலைக்கேறிய போதையைக் காட்டிய போதும், அதனால் மயில் பாதையை மறந்து திண்டாடிய பேதைத் தனத்தைக் குறிப்பிட்ட போதும் சபையில் ஒரே குதூகலமா யிருந்தது.

''ஒருவேளை என்மேல் பழி தீர்த் துக் கொள்வதற்காக வழியில் வேணு மென்று படுத்து உறங்கிவிட்டாயோ?'' என்று மயிலைப் பார்த்துக் கேட்டுவிட்டு அப்பேர்ப்பட்ட அநியாயத்தைச் செய்த மயிலை, ''என்னவோ நீ எப்படி யாவது சௌக்கியமாயிரு!'' என்று மனங் கசந்து ஆசீர்வதிப்பதற்கு அறி குறியாக, ''வாழி நீ மயிலே!'' என்று வாழ்த்தி, அதற்குரிய பாவமும் காட் டிய போது, அந்தச் சபையில் ஏற்பட்ட ஆரவாரத்தைச் சொல்லி முடியாது.

மறு கணத்தில் காதலியின் உளப்பாடு மாறுகிறது. ''தங்க மயிலே!'' என்று கொஞ்சி அழைத்து, ''இந்த மங்கை மீதிரங்கமாட்டாயா!'' என்று கெஞ்சு கிறாள். ''உனக்காகவும் தெரியாது; சொன்னாலும் நீ கேட்க மாட்டாய்! உன்னைக் குற்றம் சொல்லி என்ன பயன்? ஏ, வன்கண் மயிலே!'' என்று, மயி லின் கொடுமையான கண்களின் சலனப் பார்வையைச் சிவகாமி காட்டிய போது, சபையோர் அதிசயத்தில் மூழ்கினார்கள்.





''உன்னை நொந்து பயனில்லை. உலகத்தில் யானைகள், குதிரைகள் என்பதாக எத்தனையோ நல்ல நல்ல பிராணிகள் இருக்க, உன்னைப் போய் வாகனமாய்ப் பிடித்தானே அவனையல்லவா நோக வேண்டும்?'' என்று பாட்டை முடிக்கும்போது, அதில் அடங்கியிருந்த சோகம், மனக் கசப்பு, பரிகாசம், நகைச்சுவை ஆகிய உள்ளப் பாடுகள் அவ்வளவையும் சேர்ந்தாற் போல் முகத்தில் காட்டிய சிவகாமியின் அற்புதக் கலைத் திறமை சபையோரைப் பரவசப்படுத்தியது.

ஆம், மேற்கூறிய பாடலும் அபிநயமும் சபையில் எல்லோரையும் பரவசப்படுத்தத்தான் செய்தன — ஒரே ஒருவரைத் தவிர. அந்த ஒருவர் மகேந்



திர பல்லவர்தான். அவர் முகத்தில் சிணுக்கம் காணப்பட்டது. வேலனிடம் காதலை வெளியிடும் வியாஜத்தில் சிவகாமி மாமல்லரிடம் தன்னுடைய மனம் ஈடுபட்டதையும் தெரிவிக்கிறாள் போலும்! 'வேலின் மேல் ஆணையிட்ட மன்னர்' என்பதில் அடங்கிய சிலேடை மிகத் தெளிவாக 'மகேந்திரருக்கு விளங்கியது. 'தன்னிகரில்லாதான்' என்னும்போது சிவகாமி தம்மைப் பார்த்ததன் கருத்தையும் தெரிந்து கொண்டார். ஆகா! இந்தப் பெண்ணுக்குத்தான் எவ்வளவு தைரியம்! தம்மைத் தோத்திரம் செய்து அவளுடைய காரியத்தைச் சாதித்துக் கொள்ள எண்ணுகிறாள் போலும்! ஆகா மகேந்திர பல்லவனுடைய இயல்பை இவள் இன்னும் அறிந்து கொள்ளவில்லை!

இவ்விதம் எண்ணமிட்ட சக்கரவர்த்தி, அருகிலுள்ள ஏவலாளனிடம் ஏதோ சொல்லி அனுப்பினார். அவன் போய் ஆயனர் காதோடு ஏதோ கூறினான். ஆயனர் சிவகாமியிடம், ''அம்மா! வாகீசப் பெருமானின் பதிகம் ஒன்று பாடு!'' என்று கூறினார்.

ஏற்கனவே சக்கரவர்த்தியின் சிணுங்கிய முகத்திலிருந்து அவருடைய மனப் பாங்கைச் சிவகாமி ஒருவாறு தெரிந்து கொண்டிருந்தாள். அவர் சொல்லி அனுப்பிய செய்தியினால் அது ஊர்ஜிதமாயிற்று. அந்தக் கல் நெஞ்சரைத் தன்னுடைய கலையின் மூலம் இளகச் செய்து அவருடைய ஆதரவைப் பெறலாம் என்று எண்ணிய தன்னுடைய பிசகை நினைக்க அவளுக்கு வெட்கமாயிருந்தது. அந்த வெட்கமே மறுகணம் கோபமாக மாறி அவள் உள்ளத்தில் கொந்தளித்தது. பின்வரும் பாடலை ஆரம்பித்தாள்:

''நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்...!''

அதுவரையில் ஒரே ஆனந்தத்திலும் குதூகலத்திலும் ஆழ்ந்திருந்த அந்தச் சபையில் திடீரென்று ஒரு மாறுதல் உண்டாயிற்று. ஒரு கல்யாண வைபவத்தின்போது, எதிர்பாராத அபசகுனம் ஏதேனும் ஏற்பட்டால் எல்லோருடைய மனமும் முகமும் எப்படி மாறுமோ அப்படிப்பட்ட மாறுதல். இந்தப் பாட்டை இந்தச் சந்தர்ப்பத்தில் ஏன் பாட வேண்டும் என்று அத்தனை பேரும் எண்ணியதாக அவர்களுடைய முகக் குறியிலிருந்து தெரிந்தது.

மேற்படி பாடலின் சரித்திரம் அத்தகையதாகும். சைவ சமயத்தைத் தழுவிய மருள்நீக்கியார் மீது பாடலிபுரத்துச் சமணர்கள் பற்பல குற்றங்களைச் சுமத்திக் காஞ்சிப் பல்லவ சக்கரவர்த்திக்கு விண்ணப்பம் செய்து கொள்ள, மகேந்திர பல்லவர் உண்மையை விசாரித்து உணரும்பொருட்டு அவரைக் காஞ்சிக்கு வரும்படி கட்டளை அனுப்பினார். கட்டளையைக் கொண்டு போன இராஜதூதர்கள் அந்த மகா புருஷரைக் கொஞ்சம் அச்சுறுத்தினார்கள்.

'' எனக்கு இறைவன் சிவபெருமான்தான். உங்களுடைய அரசனின் கட்டளையை நான் மதியேன்!'' என்று திருநாவுக்கரசர் கூறித் தூதர்களைத் திடுக்கிடச் செய்தார்.

''உம்மைச் சுண்ணாம்புக் காளவாயில் போடுவோம். யானையின் காலால் மிதிக்

தலையாய கூந்தல் அலங்கார நிபுணர்கள் சிபாரிசு செய்வது க்ளீம் ஷாம்பு— கேசத்தைப் பட்டுப்போல் சுத்தமாகவும், படியும்படியும் வைப்பதற்கு.



க்ளீம் ஷாம்பு-கார நீரிலும் மென்னீரிலும் நுரை கொழிக்கச் செய்கிறது. கேசத்தைத் துப்புரவாக சுத்தம் செய்கிறது. பட்டுப் போலவும் பளபளப்பாகவும் ஆக்குகிறது.



புது டில்லியைச் சேர்ந்த கூந்தல் அலங்கார நிபுணர் மேடம் பி. ராய் க்ளீம் ஷாம்புவைப் பாராட்டுகிறார். ''கேசத்தை மிருதுவாகவும் படியும் படியும் வைக்கிறது. கேசம் நீளமானாலும் குட்டையானாலும் விரும்பும் வகையில் படியவைக்க உதவுகிறது க்ளீம்'' என்கிறார் அவர்.

க்ளீம் ஷாம்பு கேசம் படிவதற்கும் நவீன கூந்தல் அலங்காரத்துக்கும் துணை புரிகிறது.



அதன் பிரெஞ்ச் நறுமணத்தை நீங்கள் மிகவும் விரும்புவீர்கள். அதிகபட்ச சிக்கனம் பெற 400 மி.லி. பாட்டில் வாங்குங்கள்.





க்ளீம் ஷாம்பு

கார நீரிலும் மென்னீரிலும் நுரை கொழிக்கிறது

3 சைஸ்கள் : 100 மி.லி., 200 மி.லி., 400 மி.லி.

Geoffrey Manners & Co. Ltd.



லலிதா பார்மஸி

கும்பகோணம்

எமது பிரதம டாக்டர் வி. ஆர். லக்ஷ்மிகாந்த சர்மா அவர்கள் எமது சென்னை பிராஞ்சுகளுக்குக் கீழ்க்கண்ட தேதிகளில் விஜயம் செய்து வைத்திய ஆலோசனை அளிப்பார்கள்.


1. 5-10-74, 6-10-74

6, ரங்கனுதன் தெரு.
தி. நகர், சென்னை – 600017
போன்: 441454

2. 7-10-74, 8-10-74

60 - B, கச்சேரி ரோடு.
மைலாப்பூர், சென்னை-600004
போன்: 73007

வைத்திய ஆலோசனை நேரம்:
காலை 8 to 11; மாலை 4 to 7



கதிராமங்கலம்

வனதுர்க்கா தேவிக்கு

லட்சார்ச்சனை

மிருகண்டு மகரிஷியினுல் பூஜிக்கப்பட்ட ஸ்ரீ வன துர்க்கா தேவிக்கு, 16-10-74 முதல் சாரதா நவராத்திரி புண்யகாலத்தில், தினந்தோறும் விசேஷ அபிஷேக ஆராதனையும், அத்துடன் காலை மாலை பத்து சஹஸ்ரநாம அர்ச்சனை விதம் நடத்திக் கடைசி தினத்தன்று வன துர்க்காதேவிக்கு விசேஷ மஹாபிஷேக அலங்கார ஆராதனைகளும் அம்பிகையின் அருளால் நடைபெற இருக்கிறது. தேவி பக்தர்கள் அனைவரும் இந்த தெய்வீகக் கைங்கரியத்தில் பங்கு கொண்டு லட்சார்ச்சனையைப் பூர்த்தி செய்து ஸ்ரீ வனதுர்க்கா தேவியின் அருளுக்குப் பாத்திரர்களாகுமாறு வேண்டுகிறோம்.

அபிஷேகத்துக்கும், அர்ச்சனைக்கும் சேர்த்து ரூ. 20 ஆகிறது. பணம் அனுப்ப வேண்டிய விலாசம்: கே. ஸ்ரீநிவாசய்யர், அறங்காவலர், வடக்குத் தெரு, கதிராமங்கலம் P. O. குத்தாலம் வழி, தஞ்சாவூர் ஜில்லா.

கச் செய்வோம். கழுத்திலே கல்லைக் கட்டிக் கடலிலே போடுவோம்'' என்றெல்லாம் தூதர்கள் பயமுறுத்தினார்கள். அப்போது, மருள்நீக்கியார் ஒரு பாடலைப் பாடினார்:

நாமார்க்குங் குடியல்லோம் நமனை யஞ்சோம்
  நரகத்தி லிடர்ப்படோம் நடலை யில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோ மல்லோம்
  இன்பமே எந்நாளுந் துன்ப மில்லை!
தாமார்க்குங் குடியல்லாத் தன்மை யான
  சங்கரனற் சங்கவெண் குழையோர் காதிற்
கோமாற்கே நாமென்று மீளா வாளாய்க்
  கொய்ம்மலர்ச்சே வடியிணையே குறுகி னோமே!

மேற்கண்ட பாடலை ஓலையிலே எழுதுவித்து, ''இதை எடுத்துக் கொண்டு போய் உங்கள் அரசரிடம் கொடுங்கள்!'' என்றார் சிவனடியார். தூதர்களும் தங்களுக்கு வேறு கட்டளை யில்லாமையால் திரும்பிச் சென்றுபாடலைச் சக்கரவர்த்தியிடம் கொடுத்தார்கள். அவர்கள் எதிர்பார்த்ததற்கு மாறாகக் காரியம் நடந்தது. அதாவது, பாடலைப் படித்த மகேந்திர பல்லவர் அத்தகைய தெய்வப் பாடலைப் பாடக் கூடிய மகானைத் தரிசிக்க விரும்பினார். அவரைத் தரிசித்த பிறகு, தாமும் ஜைன மதத்தைவிட்டுச் சைவ சமயத்தைச் சேர்ந்தார்.

இதெல்லாம் தெரிந்தவர்களானபடியாலேதான் சபையோர் அத்தகைய அசுவாரசியத்தைக் காட்டினார்கள்.

ஆனால், சபையோருடைய மனோபாவத்துக்கு நேர்மாறாக இருந்தது மகேந்திர பல்லவருடைய மனோபாவம். அந்தப் பாடல் அவருக்கு மிகுந்த உற்சாகத்தை அளித்ததாகத் தெரிந்தது. பாடல் ஆரம்பித்த உடனே, அது எந்தச் சந்தர்ப்பத்தில் பாடப்பட்டது என்பதை மகேந்திரர் புலிகேசிக்கு அறிவித்தார். புலிகேசிக்கு அது எல்லையற்ற வியப்பையும் உவகையையும் அளித்ததாகத் தெரிந்தது. ''அழகுதான்! தங்களுடைய அதிகாரத்தை மறுதளித்து ஒரு பரதேசி பாடல் பாடுவது; அதை ஒரு பெண் சபை நடுவில் நின்று அபிநயம் பிடிப்பது; அதை நீங்களும் பார்த்துச் சந்தோஷப்படுவது; இதை யெல்லாம் என்னால் நம்பவே முடியவில்லையே!'' என்றார் வாதாபிச் சக்கரவர்த்தி.

''அதுதான் கலையின் மகிமை, சத்யாச்ரயா! ஒருவன் வாய்ப் பேச்சாக என் ஆக்ஞையை மறுத்திருந்தால், உடனே அவனைச் சிரச்சேதம் செய்யும்படி கட்டளையிட்டிருப்பேன். அதுவே செந்தமிழ்க் கவிதையாக வந்தபோது, 'இத்தகைய அற்புதக் கவிதையைப் பாடியவரைப் பார்க்க வேண்டும்' என்ற விருப்பம் எனக்கு உண்டாகிவிட்டது'' என்றார் ரஸிகச் சிகாமணியான காஞ்சிச் சக்கரவர்த்தி.

இதற்குள்ளாகப் பாடல் ஒரு தடவை பாடி முடிந்து, அபிநயமும் ஆரம்பமாகியிருந்தது. 'நமனை அஞ்சோம்' என்னும் பகுதிக்குச் சிவகாமி அபிநயம் பிடிக்கத் தொடங்கியிருந்தாள். மார்க்கண்டனுடைய கதை சபையோரின் கண் முன்னால் வந்தது.

*   *   *

மல்லிகைப் பூவின் மெல்லிய இதழ் போன்ற மிருதுவான சரீரத்தை உடைய அந்த யுவதி ஒரு கணத்தில் கையிலே தண்டாயுதத்துடனும் பாசக் கயிற்றுட



னும் கண்டவர்கள் உயிர் குலையும் பயங்கரத் தோற்றத்துடனும் வரும் யம தர்ம ராஜனாக மாறுகிறாள்! அடுத்த கணத்தில் அவளே பதினாறு வயதுள்ள இளம் பாலகனாக மாறி, முகத்தில் சொல்ல முடியாத பீதியுடன், சிவலிங்கத்தை அணைத்து ஆலிங்கனம் செய்து கொள்ளுகிறாள்.

மறுகணத்தில் யம தர்ம ராஜன் தன் பாசக் கயிற்றை வீசி எறிந்து மார்க்கண்டனுடைய உயிரை வலிந்து கவரப் பார்க்கிறான். அந்த இளம் பிள்ளையின் முகமோ முன்னைக் காட்டிலும் பன்மடங்கு பீதியையும் பரிதாபத்தையும் காட்டுகிறது.

ஆஹா! அடுத்த கணத்தில் அந்தச் சிவலிங்கத்திலிருந்து சம்ஹார ருத்ர மூர்த்தி கிளம்புகிறார்! சிவகாமியின் நெடிதுயர்ந்த ஆகிருதி இப்போது இன்

னும் உயர்ந்து தோற்றம் அளிக்கிறது. ஒரு கணம் கருணை ததும்பிய கண்கள் சற்றுக் கீழ் நோக்கிப் பார்க்கின்றன. கரங்கள் பாலன் மார்க்கண்டனுக்கு அபயம் அளிக்கின்றன. மறுகணத்தில் கண்கள் எதிர்ப்புறம் நோக்குகின்றன. யமனைக் கோபத்துடனே பார்க்கும் கண்களில் அக்னி ஜுவாலை தழல்விடுகிறது. புருவங்களுக்கு மத்தியிலே நெற்றிக் கண் இதோ திறந்துவிடப் போகிறது என்று நினைக்கும்படியாக ஒரு துடி துடிப்புக் காணப்படுகிறது.

கோர பயங்கர உருவம் கொண்ட யமதர்மனிடம் இப்போது சிறிது பணிவைக் காண்கிறோம். "என் பேரில் ஏன் கோபம்? என்னுடைய கடமையைத் தானே செய்கிறேன்?" என்று சொல்லும் தோற்றம். கோபம் கொண்ட சம்ஹார ருத்ரமூர்த்தி மீண்டும் சபையோருக்குத் தரிசனம் தருகிறார். ஒரு காலைத் தூக்கி ஓங்கி உதைக்கிறார். 'தடார்' என்ற சத்தத்துடன் யமன் உதைபட்டுக் கீழே விழுகிறான்.



மீண்டும், பாலன் மார்க்கண்டனின் பால் வடியும் முகம். ஆகா! அந்த முகத்தில் இப்போது பயம் இல்லை. பீதி இல்லை! பக்திப் பரவசமும் நன்றியும் ததும்புகின்றன.

* * *

அபிநயம் ஆரம்பித்தவுடனேயே சபையோர் தங்களுடைய பழைய விரஸ உணர்ச்சியை மறந்து விட்டார்கள். பாட்டு யார் பாடியது, எந்தச் சந்தர்ப்பத்தில் பாடியது என்பதெல்லாம் அவர்களுக்கு அடியோடு மறந்து போய்விட்டது. வெளி உலகத்தை மறந்து தங்களையும் அடியோடு மறந்துவிட்டார்கள்.

பாடல் முழுவதும் முடிந்து, பூலோகத்துக்கு வந்தவுடனே, "எப்படி?" என்று மகேந்திர பல்லவர் புலிகேசியைக் கேட்டார்.

"நாகநந்தி எழுதியது உண்மைதான்!" என்று வாதாபி மன்னர் சொல்லிவிட்டு மகேந்திர பல்லவரை உற்று நோக்கினார். மகேந்திரரின் முகத்தில் எவ்வித மாறுதலும் காணப்படவில்லை.

"நாகநந்தி யார்?" என்று சாவதானமாக மகேந்திரர் கேட்டார்.

"நீங்கள் நாகநந்தி பெயரைக் கேள்விப்பட்டதே இல்லையா? தென்னாடெங்கும் பல நாட்கள் யாத்திரை செய்த புத்தபிக்ஷு."

"பிக்ஷு என்ன எழுதியிருந்தார் தங்களுக்கு?"

"அவருடைய யாத்திரை விவரங்களை எனக்கு அவ்வப்போது தெரிவிக்கும்படி கேட்டிருந்தேன். அந்தப்படியே எழுதிக் கொண்டு வந்தார். 'ஆயனரைப் போன்ற மகாசிற்பியும் சிவகாமியைப் போன்ற நடன கலாவாணியும் இந்தப் பரத கண்டத்தில் வேறு எங்கும் இல்லை!' என்று ஒரு தடவை எழுதியிருந்தார்."

"நாகநந்தி பிக்ஷு நல்ல ரசிகர்போல் இருக்கிறது. அவர் இப்போது எங்கேயோ?"

"அதுதான் தெரியவில்லை. ஒருவேளை உங்களுக்குத் தெரிந்திருக்கலாம் என்று நினைத்தேன்."

மகேந்திரர் மௌனமாயிருந்தார்.

"நாட்டில் இருந்த புத்தபிக்ஷுக்களையெல்லாம் ஒற்றர்கள் என்று நீங்கள் பிடித்துச் சிறைப்படுத்தியதாகக் கேள்விப்பட்டேன். ஒருவேளை நாகநந்தி பிக்ஷுவையும் ஒற்றர் என்று சந்தேகித்துச் சிறைப்படுத்திவிட்டீர்களோ, என்னவோ?"

மேற்குறித்த சம்பாஷணை நடந்து கொண்டிருக்கையில், சிவகாமியின் கண்கள் கரகோஷம் செய்து ஆரவாரித்துக் கொண்டிருந்த சபையோரின் மலர்ந்த முகங்களைப் பார்த்தவண்ணம் சுற்றிக் கொண்டு வந்து, மகேந்திர பல்லவரின் உற்சாகம் ததும்பும் முகத்தைப் பார்த்துவிட்டு, அடுத்தாற்போல் வாதாபிச் சக்கரவர்த்தியின் கிளர்ச்சி கொண்ட முகத்தில் வந்து நின்றன.

அவ்விதம் நின்றதும் சிவகாமியின் உள்ளத்திலே இத்தனை நேரமும் படர்ந்து


THE MOST WONDERFUL IDEAS GROW WITH COTTON
TEXTURES
wool-feel...gay silky...cool lineny...
natural-only as cotton
Century-FOR 100% COTTON TEXTILES
THE CENTURY SPG. & MFG. CO. LTD., Bombay 400025
Adroit-CM-539-P

வெள்ளைத் துணிகள் பழுப்பேறுவானேன்?



பழுப்புக்கு மூடுவிழா,
வெளுப்புக்குத் திறப்பு விழா:
புது ரின்ஸோ பவுடர்

சோப்புப் போடப் போட வெள்ளைத் துணிகள் பழுப்பேறி அழுதுவடிகிறது அல்லவா? அதைத் தான் அகற்றப் பிறந்தது ரின்ஸோ. டிட்டர்ஜெண்ட் சலவைக் கலையிலே ஒரு முன்னேற்றப் புத்தேடு. விழி திறந்த விடிவெள்ளி. உரித்தெடுத்த ஒளிவெண்மைக்கு: ரின்ஸோ. ஓகோ என்னும் தரம் - - - வாகான விலைநயம்.

வெண்மை பளிச்சிட வெளுப்பது ரின்ஸோ

வேதனை செய்து கொண்டிருந்த மாயத் திரை பனிச்சென்று விலகிற்று. நிழலாயிருந்த ஞாபகம் தெளிந்து உருவெடுத்து மனக் கண் முன்னால் நின்றது. ஆ! அந்த முகம்! — அப்படியும் இருக்க முடியுமா? இரு மனிதருக்குள் அத்தகைய முக ஒற்றுமை சாத்தியமா? அல்லது இருவரும் ஒருவர்தானா? மகேந்திர சக்கரவர்த்தி பலவித மாறுவேஷங்கள் போட்டுக் கொண்டு திரிவதுண்டு அல்லவா? அது போலவே, வாதாபிச் சக்கரவர்த்தியும் நாகநந்தி பிக்ஷுவாகத் தென்னாட்டில் உலவிக் கொண்டிருந்தாரா?

இத்தகைய எண்ணங்களினால் சிவகாமியின் உள்ளம் குழம்பிக் கொண்டிருக்கும் போதே மகேந்திர பல்லவர் நடனத்தை முடித்துவிடலாம் என்று ஆயனருக்குச் சமிக்ஞை செய்தார்.


நடனக் கலையின் அதிதெய்வமும் தமிழ் நாட்டின் தனிப்பெருந்தெய்வமுமான ஸ்ரீ நடராஜமூர்த்தி தில்லைப் பகுதியில் ஆடிய ஆனந்த நடனத்தை வர்ணிக்கும்பாடலோடும், அதற்குரிய நடன அபிநயத்துடனும் அன்றைய நடன வினிகை முடிவுற்றது.

''இம்மாதிரி ஒரு நடனம் இதற்கு முன்னால் நடந்ததில்லை! இனிமேலும் நடக்கப் போவதில்லை!'' என்று அம் மகாசபையில் கூடியிருந்த ரஸிகர்கள் ஏகமனதாக அபிப்பிராயப்பட்டார்கள்.

மகேந்திர பல்லவர் மீண்டும் சமிக்ஞை செய்ததன் பேரில், ஆயனரும் சிவகாமியும் இரு சக்கரவர்த்திகளும் அமர்ந்திருந்த சிம்மாசனங்களுக்கு அருகே சென்று வணங்கி நின்றார்கள். மகேந்திர பல்லவர், ''ஆயனரே! முன் தடவை இதே இடத்தில் சிவகாமியின் அரங்கேற்றம் நடந்து கொண்டிருந்த போது, இடையிலே தடைப்பட்டதல்லவா? அந்தத் தடைக்குக் காரணமான வாதாபிச் சக்கரவர்த்தியே இங்கு இன்று வீற்றிருந்து உம் குமாரியின் அற்புத நடனத்தைப் பார்த்துக் களித்தார்!'' என்று கூறிவிட்டுச் சிவகாமியைப் பார்த்து, ''அம்மா, சிவகாமி! வாதாபிச் சக்கரவர்த்தி உன்னுடைய நடனக் கலைத் திறமையில் ஒரேயடியாக மயங்கிப் போய்விட்டார். உன்னையும் உன் தகப்பனாரையும் தம்முடன் வாதாபிக்கு அனுப்பி வைக்கும்படி கேட்கிறார். உனக்குப் போகச் சம்மதமா?'' என்று வினவினார்.

சிவகாமி கோபத்தினால் தன்னடக்கத்தை இழந்து, ''பிரபு! இந்த ஏழைப் பெண் இந்தத் தேசத்தில் இருப்பதே தங்களுக்குப் பிடிக்கவில்லையா?'' என்றாள்.

சிந்தைக்கினிய தரும்
சிந்தாமணி விநாயகர்



சென்னை நகர எல்லை தாண்டியவுடன் வடபழனியை அடுத்து வளர்ந்து வருகிறது ஆழ்வார் திருநகர் எனும் குடியிருப்பு. இங்கு வசிப்பவர்கள் சிந்தாமணி விநாயகருக்கு மகாமண்டபம், ராஜ கோபுரத்துடன் நல்லதோர் ஆலயம் எழுப்பி வருகிறார்கள். குடித்தனம் ஒன்றுக்கு ஒன்பது மாத அளவில் ரூ. 100 வழங்க காலனிவாசிகள் திட்டமிட்டுள்ளனர். ஆயினும் ஒன்றேகால் லட்ச ரூபாய் அளவில் திட்டியுள்ள ஆலய நிர்மாணப் பணி நிறைவுபெற வெளியாரின் நிதி உதவியும் அத்தியாவசியமாகிறது. ''காரியதரிசி, ஸ்ரீசிந்தாமணி விநாயகர் திருப்பணிக் கமிட்டி, ஆழ்வார்திருநகர், சென்னை 600087'' என்ற முகவரிக்குப் பொருள் அனுப்பி வைத்து ஆத்திகர்கள் ஆனைமுகன் அருள் பெறுவாராக!

இம்மொழிகள் ஆயனருக்கும் இன்னும் பக்கத்தில் நின்றவர்களுக்கும் வியப்பையும் பயத்தையும் அளித்தன. ஆனால், மகேந்திர பல்லவரின் முகத்தில் மட்டும் புன்னகைதான் தவழ்ந்தது. அவர் வாதாபிச் சக்கரவர்த்தியைப் பார்த்து, ''சத்யாச்ரயா! பார்த்தீர்களா? சாட்டையினால் அடித்து நடனம் ஆடச் சொல்லும் நாட்டுக்குக் கலைஞர்கள் போக விரும்புவார்களா?'' என்றார்.

அப்போது புலிகேசியின் முகம் கறுத்ததையும், அவருடைய கண்களில் கனல் எழுந்ததையும் கவனியாமல், மகேந்திரர், ''அம்மா! சிவகாமி! உன்னை நாட்டை விட்டுத் துரத்த நான் விரும்பவில்லை. இந்த நகரத்தைவிட்டு உங்களைப் போகச் சொல்லவே எனக்கு இஷ்டமில்லை. ஆயனரே! இன்று இவ்வளவு அற்புதமாக நடனம் ஆடிய சிவகாமிக்கு நான் பரிசுகள் கொடுக்க வேண்டும். அதுவரை சில தினங்கள் நீங்கள் நகரிலேயே இருக்க வேண்டும். கமலியின் வீட்டிலே போய் இருங்கள். கமலியும் சிவகாமியைப் பார்க்க ஆவலாயிருக்கிறாள். பின்னர், அங்கு நான் வந்து உங்களுடன் சாவகாசமாகப் பேசுகிறேன்!'' என்றார்.

(தொடரும்)

அடுத்த அறையில் துப்பாக்கி வெடித்த சத்தம் கேட்டது. ஆறு பேரோடு அந்தரங்க சம்பாஷணை நடத்திக் கொண்டிருந்த அஸ்லம் அலறிப் புடைத்துக் கொண்டு அந்த அறைக்கு ஓடினன். மற்றவர்களோ மிரண்டு போய் எங்கே ஓடி ஒளிவது என்று இடம் தேடலாயினர்.

அஸ்லம் அறைக்குள் நுழைந்தபொழுது, அவள் கட்டிலில் மல்லாந்து சாய்ந்திருந்தாள். நெற்றிப் பொட்டில் துப்பாக்கி துளைத்து ரத்தம் கசிந்து கொண்டிருந்தது.

''என்ன காரியம் செய்துவிட்டாய் ரைஞ?'' அவளது துப்பாக்கி பிடித்த கரத்தை அவன் கை பற்றியபொழுது துப்பாக்கி கீழே விழுந்தது. தன் கரத்தை அவன் கரத்துடன் இணைத்தவாறே அவள் மெதுவாக முணுமுணுத்தாள்: ''நீங்கள் என் தெய்வம்; நாடு என் தாய்.'' விழிகள் அவனில் தேங்க, அவன் கண் முன்னேயே அவள் உயிர் பிரிந்தது.

அவள் உடல் மீது ஒரு முறை பார்வையை ஓட்டிய அஸ்லம் அவள் மடியில் டயரி ஒன்று கிடப்பதைக் கண்டான். விரல்கள் அதன் ஏடுகளைப் புரட்டிக் கொடுத்தன.

17–1–74

''ஹலோ! யூ ஆர் ஹியர் !''

அவர் கேட்டுக் கொண்டே என்னை நெருங்கினர். அப்பொழுது நான் பாங்குக் கவுண்டரில் உட்கார்ந்திருந்தேன்.

ஏற இறங்க அவரைப் பார்த்து, ''யார் நீங்கள் ? தெரியவில்லையே!'' என்றேன்.

''தெரியவில்லையா? என் கண்கள் என்னை ஏமாற்றவில்லையென்றல், விமான நிலையத்தில் நாம் இரண்டு மூன்று முறைகள் சந்தித்திருக்கிறோம். உங்கள் பெயர் ரீட்டாதானே?''

''இல்லை; உங்களுக்கு ஆள் மாறாட்டம். என் பெயர் ரைஞ.''

''ஐ ஆம் ஸாரி !''

அவர் நகர்ந்தார். புறப்பட்டவரை நான் வலிய இழுத்து, ''உங்களுக்கு என்ன வேண்டும்?'' என்று கேட்டேன்.

'' 'ஸேஃப்டி வால்ட்' சாவி ! இதில் உள்ளவற்றை அதில் வைக்க வேண்டும் !''– பிரீஃப் கேஸை உயர்த்திக் காட்டினார்.


இப்படியாகத் தொடர்ந்தது முதல் அறிமுகம்.

23–2–74

இந்தக் கால கட்டத்துக்குள் அவருடன் பல முறைகள் பழகியாகி விட்டது. ஆயினும் அவருக்கு ரீட்டா நினைவு போகவில்லை.

இன்று கடற்கரைக்குப் போயிருந்தேன். காரில் அமர்ந்தவண்ணமே காற்று வாங்கிக் கொண்டிருந்தேன். அவர் கார் என் காருக்குப் பின்னல் வந்து நின்றது. இறங்கி, ''ஹலோ, ரைஞ !'' என்று உற்சாகமாக அழைத்துக் கொண்டே என்னை நெருங்கி வந்தார்.

நலம் விசாரித்த என்னிடம், ''உன்னிடம் வெகு நாட்களாகவே ஒன்று சொல்ல வேண்டும் என்றிருக்கிறேன் !'' என்றார்.



யாருக்கென்று அழுவது?

ரா.வீழிநாதன்

""என்ன?""

""இது கடற்கரை: நம் கார்கள் நிற்பது காதலர் பாதைக்கு அருகில்! நான் என்ன சொல்ல விரும்புவேன்? ஊகிக்க முடியாதா?"" என்று கேட்டார்.

"" ஊகிக்க முடிகிறது. ஆனாலும் ஒரு சந்தேகம். அறிமுகம் ஆன அன்று என்னை ரீட்டா என்று எண்ணினீர்கள். இன்று ரைனு என்கிறீர்கள். நாளை ஒரு நைனு கிடைத்துவிட்டால், இந்த ரைனுவின் நிலை?"" சொற்கணையை அருவருப்பில் தோய்த்து எய்தினேன்.

""ரைனு! தப்புக் கணக்குப் போடாதே! ரீட்டாவும் நீயும் ஒரே அச்சு! அவள் என் பிஸினஸ் விஷயத்தில் பல முறைகள் உதவியிருக்கிறாள். உங்கள் இருவருக்கும் உள்ள உருவ ஒற்றுமை குணத்தில் இல்லை. மின்னுவதெல்லாம் பொன் அல்ல என்பது எனக்கு நன்றாகத் தெரியும். உன்னை நான் உளமாரக் காதலிக்கிறேன், திருமணம் புரிந்துகொள்ளவும் சித்தமாயிருக்கிறேன்; நீ சம்மதம் தெரிவித்தால்:.:.:..!""

"" நான் மட்டும் சம்மதம் தெரிவித்தால் போதுமா? என்னைச் சேர்ந்த பெரியவர்களின் சம்மதம் வேண்டாமா?"" என்றேன்.

""கேட்டுச் சொல்லு! இல்லை, நான் வந்து கேட்க வேண்டுமானாலும் சொல்லு!""

"" என் விருப்பத்துக்கு எதிர் சொல்ல மாட்டார்கள் என்றே நம்புகிறேன். கரம் பற்றியபின் என்னைக் கைவிடமாட்டீர்களே!"" என்று கேட்டவண்ணம் கையை நீட்டினேன். அவர் கைகொடுத்தார். நான் காரிலிருந்து இறங்கினேன். ஒரு காலில் நான்கு அங்குலம் கனத்த பூட்ஸ், இன்னொரு காலில் சாதாரண பூட்ஸ் – இந்தக்கோலத்தில் இறங்கிய என்னை ஒரு முறை ஏற இறங்கப் பார்த்தார்.

""என்ன பார்க்கிறீர்கள்?""

""ஒன்றுமில்லை. வந்து, வந்து.:..!""

""தயங்காதீர்கள்! ஒரு கால் ஊனத்தைக் கண்டதும் சப்பிட்டுவிட்டதா?""

""இல்லை.""

""மேலுக்குச் சொல்லாதீர்கள்!""

""மெய்யாகச் சொல்லுகிறேன், நீ சம்மதித்தால் நான் உன்னையே கல்யாணம் செய்து கொள்வேன்!""

"" நான் நொண்டி என்ற அநுதாப உணர்ச்சி காரணமானால், அந்த அநுதாபம் எனக்கு வேண்டவே வேண்டாம்.""

""அநுதாபம் காதலாகி விடாது ரைனு!"" உள்ளத்தில் எத்தனையோ ஊனம் கண்டவர்கள் உண்டு. அவர்களைக் காட்டிலும் உடல் ஊனம் பெரிதல்ல; தவறும் அல்ல. உன்னிடம் உள்ளத்தைப் பறிகொடுத்த பின் மறைப்பானேன்? நான் எத்தனையோ விஷயங்களில் கோணலானவன். ஆனால் காதல் விஷயத்தில் நேரானவன்! எனவே, உன் கரம் பிடிக்க உன் சம்மதத்தை எதிர்பார்க்கிறேன்!"" என்றார் அவர்.

ஆனால் நான்?

17–5–74

இப்பொழுது நான் அவர் மனைவி. இப்படி ஒரு நம்பிக்கைப் பிணைப்பு ஏற்பட்டுவிடவே, இன்று காலை அவர் என்னிடம் சொன்னார்:

""நீ ஒரு காரியம் செய்ய வேண்டும். பாங்கில் உள்ள ஸேஃப்டி லாக்கரிலிருந்து இன்னின்ன பொருள்களை எடுத்து வந்து இன்னாரிடம் சேர்க்க வேண்டும்!""

அவர் சொன்னபடியே பாங்குக்குச் சென்று ஸேஃப்டி லாக்கரைத் திறந்து பார்த்தேன். எனக்குக் கண்களே குருடாகிவிட்டாற்போல் இருந்தது. 'மின்னுவதெல்லாம் பொன் அல்ல' என்றாரே, அது எவ்வளவு உண்மை! அத்தனையும் விலைமதிப்பிட முடியாத வைரங்கள் அல்லவா? இத்தனையும் ஒரு நபரிடம் கொண்டு கொடுக்குமாறு கூறுகிறாரே, அவர் 'அபேஸ்' செய்து கொண்டு ஓடிவிட்டால்.....? யார் யாருக்குப் பதில் சொல்வது?

இதே சந்தேகத்தை ஏதும் தெரியாதவள் போல் கேட்டேன். அவர், ""என்னை ஏமாந்த சோணகிரி என்று எண்ணாதே! முதல் போட்டு முதல் எடுப்பவன் நான். இதற்கு வட்டியும் முதலுமாகச் சம்பாதிக்கும் சாமர்த்தியம் எனக்கு உண்டு – ஆனால் ஒன்று: நீ நகை – நட்டு என்று ரொம்ப ஆசைப்பட்டு விடாதே! அது சில சமயம் நமக்குத் தீங்காக முடிந்துவிடும். உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க வீடு – இவற்றைக் காட்டிலும் மனிதனுக்கு என்ன தேவை? இதனால்தான் பெரியவர்கள் 'ஐசுவரியம் அதிகமாயிருந்தாலும் ஆடம்பரம் கூடாது' என்று சொல்லியிருக்கிறார்கள்"" என்றார்.

2–6–74

என் கணவர் என்னை முழுசாக நம்பிவிட்டார். அந்த நம்பிக்கையில் ஒரு நாள் தம்மை மறியாமல் உளறிவிட்டார்: ""உன் கால் ஊனமாயிருப்பது எவ்வளவு நல்லது, தெரியுமா? நம் காரியத்தில் யாருக்குமே சந்தேகம் தோன்றாது!""

எனக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. ""இதற்காகத்தானா இந்த நொண்டியை மணந்து கொண்டீர்கள்?"" என்று கேட்டேன்.

""ரைனு! உன் ஊனத்தை எனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வது தவறுதான். உன்னை இனி இந்தப்பணியிலிருந்து கழற்றி விடுகிறேன்!"" என்று பணிந்தாற் போல் பேசினார் அவர்.

இவர் என்ன சொல்கிறார்? என் நடவடிக்கைகள் பற்றி இவருக்கு ஏதாவது

கடத்தல் மன்னன் கைது

கோவை, செப் 25— ...வையிலிருந்து தங் ...ாகேத்

தெரிந்துவிட்டதா? நான் போலீசாரின் உட்கை என்பதை இவர் புரிந்து கொண்டிருப்பாரோ? கணவன் – மனைவி உறவையே துண்டித்துவிடுவாரோ?

இருந்தாலும் நான் சமாளித்துக் கொண்டு, "நமக்கு எதற்கு இந்தத் தவறான காரியங்கள்? வேண்டாம், விட்டுவிடுங்கள்! இருப்பதைக் கொண்டு நாம் திருப்தி உறுவோம்!" என்றேன்.

அதற்கு அவர் வேடிக்கையாகப் பதில் சொன்னார்: "அழகுதான், போ! நாங்கள் எப்பேர்ப்பட்ட நல்ல காரியம் செய்து கொண்டிருக்கிறோம்? புரியாமல் பேசுகிறாயே! உலகத்தையே ஒன்றாக்க முயல்கிறோம். உலகத்தின் எந்தப் பகுதியில் என்ன பொருள் கிடைக்கவில்லையோ, அவற்றை அந்தப் பகுதிக்குக் கடத்திப் பேருபகாரம் செய்கிறோம். இது தவறா?"

எப்படி இவரது புது வியாக்கியானம்?

13–9–74

இப்பொழுது நான் இருதலைக் கொள்ளி எறும்பு. அது எப்படித் தவிக்கும் என்று எனக்குத் தெரியாது. என் தவிப்பும் அதற்குத் தெரியாது. என்னை முழுசாக நம்பிவிட்ட கணவர் ஒருபுறம். என்னைத் தன் பணிக்கு எடுத்துக் கொண்ட புலனாய்வுத் துறை மறுபுறம். யாருக்கென்று நான் ஆடுவது? மனைவிக்குக் கணவன்தான் தெய்வம். ஆனால் கணவன் – மனைவி இருவரையும் தன்னுள் அடக்கி யிருக்கும் தாய்நாடும் தெய்வத் திருநாடுதானே? யாருக்கு அல்லது எதற்கு முதல் இடம் கொடுப்பது? 'ஆண்டவனே! எனக்கு நெஞ்சுறுதியைக் கொடு!'

15–9–74

இன்று எனக்குத் தெரிந்த ரகசியங்கள் அத்தனையும், நான் உத்தியோகம் பார்த்து வரும் புலனாய்வுத் துறைக்குச் சமர்ப்பித்து விட்டேன். என்னிடம் உண்மையாக நடந்து கொண்டு என்னைத் தம் நம்பிக்கைக்குப் பாத்திரமாக்கிய என் கணவருக்கு அவரது அந்த நம்பிக்கையையே பணயம் வைத்துத் துரோகம் இழைத்துவிட்டேன். அவரது நடமாட்டம், அவரது குழாத்தின் நடமாட்டம் ஆகியவற்றை நான் அறிந்தது அறிந்தபடி கூறி விட்டேன்.

'நாளை மறு நாள் காலை பத்து மணிக்கு அவரது கடத்தல் குழு நான் இருக்கும் இல்லத்தில் கூடுகிறது. அவர்கள் செய்வது தவறான காரியங்கள்தான் என்றாலும், அதற்கும் ஒரு நேர்மையான ஒப்பந்தம் செய்துகொள்ள விருக்கிறார்கள். யார், யாருக்கு இன்ன இன்ன லாபம் என்பதைப் பிரித்துக் கொள்ளவும் போகிறார்கள். இவர்கள் இங்கே கூடியிருக்கும் இதே நேரத்தில் விசைப் படகுகள் இராம்பு கடத்திச் செல்லப் போகின்றன. அரேபியாவுக்கு அரிசி போகப் போகிறது. பாரதத்துக்குப் பெருமை தேடித் தரும் அற்புதமான பஞ்சலோக விக்கிரகங்கள் நாடு கடத்தப்படப் போகின்றன. கறுப்புப் பணம் புரளப் போகிறது! இந்தச் சமயம் வீட்டை முற்றுகையிட்டால் கடத்தல் மன்னர்களில் பலரைப் பிடிக்கலாம்.

வர வேண்டியவர்கள் அனைவரும் வந்துவிட்டார்கள் என்று குறிப்புணர்த்துவதற்கு நான் வெற்றுத் தோட்டாவைச் சுடுவேன். மறைந்திருக்கும் அதிகாரிகள் பாய்வார்கள்.

17–9–74

என் கண்களுக்கு நேராகவே, இன்று என் கணவரின் கைகளில் காப்பு ஏறப் போகிறது. அதை நான் என் கண்களால் பார்த்துக் கொண்டிருக்க வேண்டும். என்ன உத்தியோகம், பெண்ணாய்ப் பிறந்தவளுக்கு! உத்தியோகம் ஏற்பதற்கு முன்பே அல்லவா இதை யோசித்திருக்க வேண்டும்!

"ரைனா! இன்றே கடைசி நாள். என் நண்பர்கள் அனைவருக்கும் நீயே உன் கையினால் காப்பி தயாரித்துத் தர வேண்டும். நாளை முதல் உன் உத்தியோகம் வீட்டோடு சரி. நீ பார்க்கும் பாங்கு உத்தியோகத்தைக் கூட விட்டுவிடலாம்.

"நான்கூட, உன் சொற்படியே நடக்கத் திட்டமிட்டிருக்கிறேன். இந்தக் கடத்தல் தொழிலுக்கு முழுக்குப் போட்டுவிட்டு நேர்மையானவனாக வாழ நினைக்கிறேன். பயந்து பயந்து செய்யும் தொழிலைவிடப் பயப்படாது வாழ்வது எவ்வளவோ நல்லதல்லவா?"

ஒன்பது மணி சுமாருக்கு என்னிடம் வந்து இப்படிப் பேசினார் அவர்.

சேறாக இருந்த அவர் மனத்தில் திடும்மென்று செந்தாமரையாக இப்படி ஓர் எண்ணம் மலரும் என்று நான் கண்டேனா?

'அவசரப்பட்டுவிட்டாயே! இப்பொழுது குடிமுழுகப் போகிறதே!' என்று என் மனம் என்னை இடித்து உரைத்தது. இனி நொந்து என்ன பயன்? வேடன் கையிலிருந்து வெளியேறிய அம்பு திரும்பியும் வருவதுண்டோ?


நான் அவர் சொன்னபடி எல்லோருக்கும் காப்பி தயாரித்து வழங்கினேன். அவரிடம் நீட்டியபொழுது, என் கையைப் பிடித்துக் குலுக்கி அவர் பார்த்த பார்வை!

என் அறைக்கு வந்த நான் ஒரு முடிவுக்கு வந்தேன். நாட்டுப் பற்றுக்காக அருமைக் கணவரைக் காட்டிக் கொடுத்தாகிவிட்டது. அவரைக் காட்டிக் கொடுத்துவிட்டு மனைவி எப்படி உயிர் வாழ்வது? அதோடு இந்தப் போலீசாருக்குச் சாட்சி சொல்ல வேண்டிய முழுப் பொறுப்பும் என்னுடையதல்லவா?

வெற்று வேட்டை நிஜத் தோட்டாவாக்கி நெற்றியைக் குறி பார்த்தால் தீர்ந்தது கணக்கு!

* * *

அஸ்லமின் கை டயரியை வீசியெறிந்து ரைனாவை ஏந்தி மடியில் கிடத்தியது. கண்கள் நீரைச் சொரிந்து அவள் உடலைக் கழுவிக் குளிப்பாட்டின. எதிரே காவல் துறையினர் நிற்பது நீர்த் திரையிட்ட அவன் கண்களுக்குத் தெரியவில்லை. தொப்பியைக் கழற்றிக் கையில் ஏந்தி ரைனாவுக்கு இறுதி மரியாதை செய்த காவல் துறையினர் கண்களும்கூடக் கலங்கத்தான் செய்தன.


படிப்படியாக உயர்ந்து
முன்னேற்றமடைந்த அவருக்குத் தெரியும்..



மைதிலி

"தேவன்" அவர்களின் கதையை நாடகமாக்கி மேடையேற்றிப் புகழ்பெற்றவர்கள் திருவல்லிக்கேணி பைன் ஆர்ட்ஸ் கிளப் குழுவினர்.

மந்தரேசன் மைதிலியை விரும்புகிறான்; அவளுக்காக இராப்பகல் உருகுகிறான். ஆனால் மைதிலி யாரை விரும்புகிறாள்? இதுதான் கதையின் சாராம்சம். பட்டணம் பஞ்சுவுக்குப் பதிலாகச் செல்லமணி நிஜ ரென்று அந்தப் பங்களாவுக்குள் காலடி எடுத்து வைக்கப் போக அதிலிருந்து என்னவெல்லாமோ புறப்பட்டு ஒரு நாடகமாக உருவாகிவிட்டது.

தேவன் கதையை நாடகமாக்கும்பொழுது உள்ள சிரமம், அதில் பாத்திரங்கள் பலர் இருப்பதுதான். "மைதிலி"யிலும் ஏராளமான பாத்திரங்கள்! நாடகத்துடன் அதிகத் தொடர்பு இல்லாவிட்டாலும், கொஞ்சம் கொஞ்சம் தொடர்பு ஏற்படுத்திக்கொண்டு கடைசி வரையில் எல்லாப் பாத்திரங்களும் மேடையில் வளைய வருவார்கள். ஆனால், நாடகம் முடிந்தபிறகு சிந்தித்துப் பார்த்தால், இத்தனை பாத்திரங்கள் தேவைதானா? இவர்களெல்லாம் வந்து என்னத்தைச் சாதித்தார்கள் என்று எண்ணத் தோன்றும்.

மைதிலியாக வந்த குமாரி ஜான்சி ராணி மேடைக்கேற்ற வனப்பான தோற்றமுள்ளவர்; தன் உள்ளம் கவர்ந்த செல்லமணியை யாரென்று கண்டுகொண்டதும் அவரது பரபரப்பும், துறுதுறுப்பும் பாராட்டும்படியிருந்தன. செல்லமணியின் பாத்திரம் கலைச்செல்வனுக்கு நன்கு பொருந்தியது. திகைப்பு, வியப்பு, பூரிப்பு இத்தனை உணர்ச்சிகளை வைத்துக்கொண்டே அவர் ஜமாய்த்துவிட்டார். மந்தரேசன், காதலில் ஏமாற்றம் அடைந்த பாத்திரம். ஆனால் டி. கே. வரதன் நம்மை ஏமாற்றிவிடவில்லை. உணர்ச்சிபொங்க நடித்தார். ஸர் சந்தானமாக வந்த ஏ. நரசிம்மனின் நடிப்பு மிகவும் இயல்பாயிருந்தது. ஜி. எஸ். மூர்த்தி பட்டணம் பஞ்சுவாக அமர்க்களப்படுத்தி விட்டார். பாகவதர் கிருதா, அதற்கேற்ற ஜிப்பா, அட்டகாசமான பேச்சு. பேஷ், பேஷ்! பட்டணம் பஞ்சுவின் மனைவி ஸ்ரீமதி, நாடகத்தில் கலை கட்டும் பாத்திரம். (பட்டு மாமி பாத்திரத்துக்கு ஒரு தனி 'மவுசு' இல்லையா?) இப்படியே கதாபாத்திரத்துக்கு மேல் கதாபாத்திரமாக வந்துகொண்டே இருப்பதும் காணாமல் போன பொடி டப்பி, காணாமல் போன நெக்லஸ் ஆகியவை திரும்ப அகப்படுவதுமாகக் கதை வளர்கிறது. படிப்பதற்கு நன்றாயிருக்கும் கதை; ஆனால் நாடகமாக்கும் போது நாடக உத்திகளைக் கவனத்தில் கொள்ள வேண்டும். இதில் கருத்துச் செலுத்தப்படவில்லை. திரு கே. எஸ். நாகராஜனின் டைரக்ஷன் பாராட்டுக்குரிய அம்சம்.

- காந்தன்

ஜீஸஸ் வருவார்

ஸ்டெல்லா ஒரு வெகுளிப் பெண். 'ஜீஸஸ் வருவார்' என்ற நம்பிக்கை அவள் மனத்தில் உறையேற்றப்படுகிறது. தன்னையே கன்னிமேரியாகக் கருதுகிறாள். தன் வயிற்றிலேயே ஜீஸஸ் பிறப்பார் என்றும் எண்ணுகிறாள். அவளது அப்பாவித்தனத்தைப் பயன்படுத்திக் கொண்டு ஒரு கயவன் கற்பழித்து விடுகிறான். தன்னைக் காதலித்த பீட்டரிடம் தனக்குப் பிறந்த குழந்தையைக் கொடுத்துவிட்டு மடிகிறாள்.

இந்தக் கதைக் கருவுக்குள் மட்டும் நாடகம் வட்டமடிப்பது சிரமம். இதற்காகச் சில உப பாத்திரங்கள் தேவைதான். பாதிரியார், மைக்கேல், பீட்டர் என்று சிலரை வரிசைப் படுத்தலாம். ஆனால் வேறு சில கதைப் பாத்திரங்கள் நாடகத்துக்கு ஆபாசச் சுவையை வழங்கி விடுகின்றன!

உடல் ஆரோக்கியத்தோடு மன ஆரோக்கியமும் மனிதனுக்குத் தேவை. மன ஆரோக்கியம் கெடும் போது விகார உணர்வுகள் எழுகின்றன. அதை எழுதும் போது ரொம்ப ரொம்ப நாசுக்குத் தேவை. உடைத்துச் சொன்னால் எழுத்தே விகாரமாகி விடுகிற ஆபத்து இருக்கிறது. நியூவேவ் முயற்சிகளில் ஈடுபடுகிறவர்கள் இதைத்தான் மறந்து விடுகிறார்கள்.

கோமல் சுவாமிநாதன் எடுத்துச் சொல்ல விரும்பும் கருத்துக்கள் ரொம்பச் சரி; ஆனால் கொடுக்கிற முறையில் நயமில்லை. தாரா பாத்திரம் நாடகத்தை 'வயது வந்தவர்களுக்கு மட்டும்' லிஸ்டுக்குக் கொண்டு வந்து விட்டிருக்கிறது. மூளை முதிராத பாத்திரமோ மூளை முதிர்ந்தவர்கள் மட்டுமே ஏற்றுக் கொள்ளக் கூடியதாக அமைந்திருக்கிறது.

ஸ்டெல்லாவாக வரும் சூரியப் பிரபா, மைக்கேலாக வரும் சாமிக்கண்ணு, பாரதியாக வரும் சித்திரா, பீட்டராக வரும் ஜயராமன் ஆகியோர்கள் தங்கள் நடிப்பால் கண்முன் நிற்கிறார்கள். பாதிரியாராக எஸ். வி. சகஸ்ரநாமம் பதற்றமின்றி வந்து போகிறார். ஜீஸஸ் வரட்டும், தாராளமாக வரட்டும்; ஆனால் கண்ணியமாக வரட்டும் என்றே கூறத் தோன்றுகிறது.

- ரா. வீ.



பொன்னியின் புதல்வர்

சுந்தா



10. பால்ய நண்பர்கள்

முகநக நட்பது நட்பன்று ; நெஞ்சத்து
அகநக நட்பது நட்பு - குறள்

“இன்னமே உன்கூடப் பேச மாட்டேன்” என்றான் கிருஷ்ணமூர்த்தி.

“ஏண்டா, நான் என்ன தப்புடா செய்தேன்?” என்று துக்கம் தொண்டையை அடைக்கச் சுப்பு கேட்டான்.

கிருஷ்ணமூர்த்தியின் வெறுப்புக்குக் காரணம் என்னவென்று தெரிந்து கொள்ள முடியாமலும், அவனுடன் சேர்த்தியாக முடியாமலும் மூன்று நாட்கள் தவித்தான் சுப்பு. நாலாம் நாள் நல்ல வேளையாய் அவனை நண்பன் சிரித்த முகத்துடன் பள்ளிக்கூட வாசலில் வரவேற்றான்.

“அன்னிக்கு ஏண்டா என்னை அப்படி வெறுப்பாப் பார்த்தே?” என்று சுப்பு கேட்டான்.

“அன்னிக்கு நீ முகம் கழுவாமலும் நெத்திக்கு இட்டுக்காமலும் வந்தே அதனாலேதான்.”

“நான் தூங்கிப் போயுட்டேண்டா!”

“தூங்கிப் போயிட்டையோ சீங்கிப் போயுட்டையோ... தூங்கு மூஞ்சியா, சூன்ய நெத்தியா வரப்படாதுன்னு சார் சொல்லி இருக்காரா இல்லையா? அப்படி வந்தா அவரை அவமதிக்கிற மாதிரி. சரஸ்வதிக்கும் தோஷம்.”

“அன்னிக்கு அப்படி வந்தது தப்புத் தாண்டா...”

அப்போது முத்து வந்தான்.

“கிருஷ்ணமூர்த்தி என்கூடச் சேர்த்தி ஆயிட்டான்” என்று அவனிடம் மகிழ்ச்சியுடன் சுப்பு தெரிவித்தான்.

பிணக்கின் காரணத்தை முத்து தெரிந்து கொண்ட பின், கிருஷ்ணமூர்த்தி கோபித்துக் கொண்டதும் சரி, பின்னால் சேர்த்தியானதும் சரி என்று தீர்ப்புக் கூறினான். அப்புறம் மூன்று பேரும் ஒருவரை யொருவர் அணைத்துக் கொண்டு உள்ளே போய் ஆசிரியரை வணங்கிவிட்டு, ஒரே வரிசையில் அடுத்தடுத்து உட்கார்ந்து கொண்டார்கள்.


அன்று அய்யாசாமி அய்யர் துருவன் கதையுடன் வகுப்பை ஆரம்பித்தார். அவர் கற்பிக்கும் முறையே தனி. நிறையக் கதைகள் சொல்லுவார். கதைகளுக்கு இடையே கணக்கு, தமிழ், ஆங்கிலம், பூகோளம், சரித்திரம் முதலியவற்றில் பாடங்கள் சொல்லிக் கொடுப்



“அரவான் கதை மூலம் தியாகத்தின் சிறப்பைக் கிருஷ்ணமூர்த்தி சிறு வயதிலேயே அறிந்து கொண்டான்.”



“கிருஷ்ணமூர்த்தியின் யோசனையின் பேரில் சம்பந்த முதலியாரின் நாடகங்களைப் போட்டார்கள்.”





○ மாயூரம் நகரசபைப் பள்ளி.
(புகைப்படம்: ராமகிருஷ்ணா)

பார். தாம் பிள்ளைகளைக் கேள்வி கேட்பதற்குப் பதிலாகத் தம்மை அவர்கள் கேட்கச் சொல்லிக் கற்கச் செய்வார். அறிவைப் புகட்டக் கூடாது. தானாக அது மாணாக்கனின் மனத்தில் புலரும்படி அல்லது மலரும்படி செய்ய வேண்டும் என்பது அவருடைய கல்விக் கொள்கை.

மாணாக்கர்களின் பொது அறிவு, கற்பனை ஆற்றல், எழுத்துத் திறமை ஆகியனவற்றைப் பேணுவதற்காக, அவர்களை அய்யர் அடிக்கடி கட்டுரைகள் எழுதச் சொல்லுவார். அந்தக் கட்டுரைகளில் சிறந்தவற்றை வகுப்பில் வாசித்துக் காட்டி, பையன்களிடையே நல்லவிதமான திறமைப் போட்டி உண்டாகும்படி செய்வார். வாசிக்கும்போதே, தமது விமரிசனத்தை வெளியிடுவதோடு பல புதிய விஷயங்களையும் எடுத்துச் சொல்லுவார்.


கிருஷ்ணமூர்த்தியின் கட்டுரைகளே எப்போதும் முதல் பாராட்டுக்கு உரியதாகும். முத்துவின் கட்டுரைகள் அவற்றிற்கு அடுத்தபடியாக இருக்கும். ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் முடி சூட்டு விழாவை யொட்டி, எல்லாப் பள்ளிகளிலும் நடந்தது போல, பாண்டுரங்கன் பள்ளிக் கூடத்திலும் வியாசப் போட்டி நடந்தபோது, 'வாலி வதம்' பற்றிக் கிருஷ்ணமூர்த்தி எழுதிய கட்டுரைக்கு முதல் பரிசும், முத்துவுக்கு ஆறுதல் பரிசும் கிடைத்தன.



○ "இந்தியா பத்திரிகை அண்ணன்-தம்பி கைக்குக் கிடைக்கத் தொடங்கியது."

○ கிருஷ்ணமூர்த்தி கர்ணம் பரீட்சையில் தேறியதற்கான சான்றிதழ். (புகைப்படம்: ராமகிருஷ்ணா.)

மெஹர்பாபா என்பவர் ஆங்கிலத்தில் எழுதிய சமய சன்மார்க்க நூல்களிலிருந்து சிறப்பான பகுதிகளை, அய்யாசாமி அய்யர் வகுப்பில் படித்துக் காட்டுவார். அவற்றுக்குத் தமிழில் விளக்கம் கூறி, நல்லற அறிவையும் மொழி அறிவையும் ஒருங்கே மாணாக்கர்களிடையே வளர்ப்பார். ஒரு நாள், ஜீவகாருண்யம் பற்றிய பகுதி ஒன்றை அவர் படித்துச் சொல்லிவிட்டு, அதில் கூறியுள்ளபடி அரிசி மாவும் சர்க்கரையும் கலந்து எறும்புகளுக்குப் போட வேண்டும் என்று சொன்னார். அன்று



● "பையனின் முகத்தில் ஓங்கி ஒரு குத்து விட்டான் கிருஷ்ணமூர்த்தி."

மாலேயே கிருஷ்ணமூர்த்தி, அண்ணு, முத்து, சுப்பு நால்வரும் அப்படி ஜீவ காருண்யப் பணியில் ஈடுபட்டிருக்கையில், ''விடாதே, அடி, கொல்லு'' என்ற குரல்கள் தோப்பிலிருந்து கேட்டன. ''ஐயோ, ஐயோ'' என்று கிருஷ்ணமூர்த்தி கத்திஞன். அந்தக் கொலேபாதகக் குரல்கள் ஓணன் வேட்டை ஆடிக் கொண்டிருந்த பையன்களின் கூச்சல் என்பது கிருஷ்ணமூர்த்திக்கும் மற்றவர்களுக்கும் தெரியும்.

''நாம் போய் அந்தப் பையன்களே விரட்டலாம் வாங்க'' என்று முத்து கூப்பிட்டான்.

''நான் வரமாட்டேன்'' என்று கிருஷ்ணமூர்த்தி சொன்னுன். ''துஷ்டர்களேக் கண்டால் தூர விலகுன்னு ஸார் சொல்லியிருக்கார்.''

''இல்லே. துஷ்டர்களேக் கண்டால் துரத்தி அடிக்கணும்'' என்ருன் முத்து.

வேட்டைக்காரப் பையன்கள் புளியங் குச்சிகளே வீசிக் கொண்டும், வெறிக் கூச்சல் போட்டுக் கொண்டும் அவர்கள் பக்கமாய் ஓடி வந்தார்கள். அவர்களே முத்து தடுத்து நிறுத்தி, ''ஏண்டா! இப்படி வாயில்லாப் பிராணிகளே வதைக்கிறீங்க?'' என்று அதட்டிஞன்.

''மானத்தைப் பார்த்து வலிப்புக் காட்டற ஓணன்களே அப்படித்தான் வதைக்கணும்'' என்ருன் ஒருவன்.

''ஓணனேக் கொன்னு உழக்குப் புண்ணியம்'' என்ருன் இன்ஞெருவன்.

ஒருவனுடைய கையிலிருந்து புளியங் குச்சியை முத்து பிடுங்கி, அதனுல் அவனே அடிக்கக் கையை ஓங்கிஞன். அவனும் மற்றப் பையன்களும் ஓட்டம் பிடித்தார்கள்.

ஒருநாள் கிருஷ்ணமூர்த்தி, துணேக்கு அண்ணு இல்லாதபோது, ''என்னே வீட்டுவரை கொண்டு விடுடா'' என்று முத்துவைக் கேட்டுக் கொண்டான்.

''பட்டப் பகல்லே என்னடா பயம்?'' என்று தோழன் கேட்டான்.

''தனியாப் போனு ஓணன் வேட்டைக்காரங்க என்னேத் துரத்திப் பயமுறுத்தறுங்க'' என்ருன்.

''நீ தைரியமாய்ப் போய்ப் பார்க்கணும். அவங்க கிட்டே வந்தா, உன்னே அவங்க மிரட்டறதுக்கு முந்தி நீ அவங்களே மிரட்டு. அவங்க அடிக்க வந்தா, நான் பார்த்துக்கறேன். இந்த மரத்துக்குப் பின்னுலே மறைஞ்சு நிக்கறேன். ஏதேனும் பாடிண்டு தைரியமாய்ப் போ.''

அப்படியே கிருஷ்ணமூர்த்தி கையை வீசிக்கொண்டு நடந்தான். கொஞ்ச தூரம் சென்றதும், பச்சைக் குதிரை விளேயாடிக் கொண்டிருந்த நாலேந்து பையன்கள் அவனே வளேத்துக்கொண்டார்கள். ''என்னடா வேணும் உங்களுக்கு?'' என்று கிருஷ்ணமூர்த்தி தைரியமாய்க் கேட்டான்.

''மடியிலே என்னடா வச்சிருக்கே?'' என்று ஒருவன் கேட்டான்.

''அதை உங்கிட்ட எதுக்காகச் சொல்லணும்?''

''நீ சொல்லாட்டி நான் பார்த்துக்கறேன்'' என்று சொல்லி அவனுடைய மடியை அவிழ்க்க வந்தான் அந்தப் பையன்.

அப்படித் துணிந்த பையனின் முகத்தில் ஓங்கி ஒரு குத்து விட்டான் கிருஷ்ணமூர்த்தி. ''ஐயோ'' என்று அவன் வலியினுலும் அதிர்ச்சியினுலும் கத்திஞன். கத்திவிட்டு ஓட்டம் பிடித்தான். அவனேத் தொடர்ந்து மற்றப் பையன்களும் ஓடி மறைந்தார்கள்.

மறைவிலிருந்து முத்து வந்து, நண்பனேப் பாராட்டித் தட்டிக் கொடுத்தான். தைரியமாய் இருக்கக் கற்றுக் கொடுத்த முத்துவை அவனும் பாராட்டிஞன்.

தைரியத்தின் அவசியத்தை முத்துவின் மூலம் அறிந்ததுபோல், தியாகத்தின் சிறப்பையும் சிறு வயதிலேயே கிருஷ்ணமூர்த்தி அறிந்து கொண்டான், அவனுடைய தந்தையும் அய்யாசாமி அய்யரும் அடிக்கடி சொன்ன ஒரு கதையின் மூலம். மகாபாரதக் கதையில் ஒன்ருன அரவான் கதை அது. கிருஷ்ணமூர்த்தியின் மனத்தில் நிலேயாகப் பதிந்த அக்கதை, பல ஆண்டுகளுக்குப் பிறகு, பொன்னியின் செல்வனின் தியாகத்தை எடுத்துச் சொல்லும் பெருங் கதையில், சுருக்கமாய் இடம் பெற்றது:

அர்ச்சுனன் தீர்த்த யாத்திரை சென்றிருந்த போது மணிபுரியை அடுத்த வனத்தில், மணிபுரி ராஜகுமாரியான சித்ராங்கியைக் கண்டான். இருவரும் காதல் கொண்டார்கள். சித்ராங்கிக்கு அரவான் என்னும் அருமைப் புதல்வன் பிறந்தான். மலேநாட்டுக் கோமகளுக்கு அர்ச்சுனனுல் பிறந்த மகனுதலால் அரவான் மகா வீரனுயிருந்தான். பாரத யுத்தம் நடக்கப் போகிறது என்று அறிந்து அவனும் பாண்டவர் படையில் சேர வந்து சேர்ந்தான். போர் தொடங்குவதற்கு முன்னுல், சகல லட்சணங்களும் பொருந்திய மகா வீரனுன இளேஞன் ஒருவனேக் களபலி கொடுக்க வேண்டும் என்று பேச்சு வந்த போது, ''இதோ நான் இருக்கிறேன்; என்னேக் களபலியாகக் கொடுங்கள்!'' என்று அரவான் முன் வந்தான். அவனேக் காட்டிலும் சிறந்த வீரன் யாரும் பாண்டவர் பக்கத்தில் இல்லாத



உங்களுக்குத் தெரியுமா—பாரத நாட்டின்
பேரழகு திலகமான சிங்கார் எந்த உடைக்கும்
உளகிலக்கும் பொருந்துமாறு சொக்குமழகுள்ள
பலவிதமான சாயல்களில் உருவாக்கப்படுகிறது.
மென்மைய மெருகுடனோ, மின்னும் மெருகுடனோ...
சிந்தூரப் பொடி உண்டு. சாந்தும் உண்டு.



Shingar

சிங்கார்— பாரத நாட்டின் உச்ச விற்பனையுடைய,
பரிபூரண நம்பிக்கைக்குரிய குங்குமப் பொட்டு.

தயாரிப்பாளர்கள் பாரமவுண்ட் ப்ராடக்ட்ஸ், பம்பாய்-400 004.
விநியோகஸ்தர்கள் :- முல்லர் & பிப்ஸ் (இந்தியா) லிட்.

everest/858/SH tm

படியால், தானாக முன்வந்த அரவாணையே பலி கொடுக்க வேண்டியதாயிற்று.

(பாகம் 1; அத்தியாயம் 56)

இந்தக் கதையை ஒரு நாள் மாலை மண்ணி ஆற்றங்கரை ஆலமரத்தடியில் முத்துவுக்கும் கப்புவுக்கும் கிருஷ்ண மூர்த்தி சொன்னான். சாதாரணமாய்ப் பேசும் தமிழில் உருக்கமாய் அவன் அதைச் சொன்னதைக் கேட்டு, நண்பர்கள் இருவரும் உணர்ச்சி வச மானார்கள்.

சிறிது காலத்துக்குப் பிறகு, நண்பர்கள் கேட்டுக் கொண்டதன் பேரில், அவர்களுக்குத் தமிழ்ப் பாடல்களைப் பாடச் சொல்லிக் கொடுத்தான் கிருஷ்ணமூர்த்தி. சிலவேளைகளில் அண்ணனும் சேர்ந்து சொல்லிக் கொடுப்பான்.

ஒரு நாள் கிருஷ்ணமூர்த்தி, ''ஒரு புதுப் பாட்டுக்கு ஸார் மெட்டுப் போட்டுச் சொல்லிக்கொடுத்திருக்கிறார். அதை உங்களுக்குக் கத்துக் கொடுக்கிறேன்'' என்றான்.

''புதுப் பாட்டு மட்டுமில்லே, புது விதமான பாட்டு'' என்று அண்ணன் சொன்னான்.

''அப்படியா? பாடிக் காட்டுங்க, பார்ப்போம்'' என்று ஆவலாய்க் கேட்டார்கள் நண்பர்கள்.

''வந்தே மாதரம் என்போம் – எங்கள் மாநிலத்தாயை வணங்குதும் என்போம்'' என்ற பல்லவியை இருவரும் சேர்ந்து தொடங்கிச் சரணங்களையும் பாடி முடித்தார்கள்.

''இது யார் கட்டின பாட்டு?'' என்று முத்து கேட்டான்.

''சுப்பிரமணிய பாரதின்னு ஒருத்தராம்'' என்று கிருஷ்ணமூர்த்தி சொன்னான்.

''நிஜமாகவே இது புது தினுசாகத்தான் இருக்கு'' என்றான் கப்பு.

''இதுக்குச் சுதேச கீதம்னு பேராம்'' என்று வேங்கடராமன் சொன்னான்.

1907ஆம் ஆண்டில் வி. கிருஷ்ணசாமி அய்யர் வெளியிட்ட பாரதியாரின் முதல் கவிதைத் தொகுப்பான ''சுதேச கீதங்கள்'' புத்தகம் ஒன்று, பல கைகள் மாறி, அய்யாசாமிஅய்யருக்குக் கிடைத்திருந்தது. அதை அடுத்து, பாரதியாரேவெளியிட்ட ''ஸ்வதேசகீதங்கள்'' புத்தகப் பிரதி ஒன்றும் கிடைத்தது. அதையும் அடுத்து, புதுச்சேரியிலிருந்து பாரதியார் வெளியிட்ட ''இந்தியா'' பத்திரிகை, அண்ணன் – தம்பி கைக்குக் கிடைக்கத் தொடங்கியது. எல்லாவற்றிலும் வந்த பாடல்களை அவர்கள் மனப்பாடமாய்ப் பாடினார்கள். நண்பர்களுக்கும் சொல்லிக் கொடுத்தார்கள்.

ஏற்கனவே கடவுள் பக்தியும் குரு பக்தியும் கொண்டிருந்த அந்தச் சிறுவர்கள், அவற்றுடன், பாரதியாரின் பாடல்கள் ஊட்டிய தேசபக்தியையும் சேர்த்துக் கொண்டார்கள். அந்தப் புதிய பக்தி, அவர்களில், கிருஷ்ணமூர்த்தி, முத்து ஆகியோரின் உள்ளங்களில் மேலும் வளர்ந்து, அவர்களுடைய வாழ்க்கையின் கதியை உருவாக்கிற்று. மற்ற இருவர்களையும் அவர்களுக்கு ஊக்கமும் பலமும் ஊட்டும் துணைவர்களாய் நிற்கச் செய்தது.

1935 டிசம்பர் 7ஆம் தேதிய 'சுதேசமித்திரன்' வார இதழில் வெளியான கட்டுரை ஒன்றில் கல்கி எழுதினார்:

முதன் முதலில் என்னுடைய பத்தாவது வயதில் பாரதியின் பாடல்களை நான் படித்தேன். அது முதல் இன்று வரை என் வாழ்நாளில் ஒரு நாளாவது பாரதியின் சில வரிகளையாவது பாடாமலோ, பாடக் கேட்காமலோ கழிந்திருக்கும் என்று எனக்குத் தோன்றவில்லை.

தேசபக்தி பொங்கும் பாரதியின் பாவின்பத்தை அறிந்து கொண்டதற்குச் சற்று முன்னால், தெய்வபக்தி நிறைந்த ஆழ்வார் பாசுரங்களின் அருஞ்சுவையை அனுபவிக்கும் பேறு கிடைத்தது.

1938ல் வெளியான பி. ஸ்ரீ.யின் ''திவ்யப் பிரபந்த சாரம்'' நூலுக்கு முன்னுரை எழுதுகையில், அந்த அனுபவம், கல்கியின் நினைவில் எழுந்தது:

முதன் முதலில் தமிழ்க் கவிதையின் இன்பத்தை நான் உணரும்படி செய்தது ஆழ்வார் பாசுரங்களே ஆகும். நான் பத்து வயதுச் சிறுவனாய் இருந்த போது, ''ஸ்ரீ கிருஷ்ண சைதன்ய ஸ்வாமிகள் சரித்

விஷமக் கவிதை - 2



தேர்தல்!
திட்டம் தெரிந்தோர்
தேர்தலில் நின்றார்
திட்டத் தெரிந்தோர்
தேர்தலில் வென்றார்!
- தமிழமுதன்

திரம்'' என்ற ஒரு தமிழ் நூல் வெளியாகியிருந்தது. அது வங்காளத்தில் நானூறு வருஷங்களுக்கு முன் வாழ்ந்த ஒரு வைஷ்ணவப் பெரியாரின் சரித்திரம். அவரை ஸ்ரீ கிருஷ்ணரின் அவதாரம் என்றே கொண்டாடுகிறவர்கள் இன்றும் வங்காளத்தில் ஏராளமாக உண்டு. அந்த நூலைத் தமிழில் எழுதிய ஆசிரியர், இடையிடையே திவ்வியப் பிரபந்தத்திலிருந்து சில பாடல்களை எடுத்துப் போட்டிருந்தார். அவற்றில், ''ஆருத செல்வத்து'', ''கம்ப மதயானை'' ''ஆல மாமரத்தின்'', ''கொண்டல் வண்ணனை'' என்று தொடங்கும் நாலு பாடல்களையும், நான் எத்தனை தடவை வாசித்திருப்பேன் என்று சொல்ல முடியாது. பள்ளிக்கூடங்களில் பரீட்சைக்காக நெட்டுருச் செய்த எத்தனையோ செய்யுள்களும் பாடல்களும் மறந்து போய்விட்டன. ஆனால் இந்த நாலு பாடல்களும் என் மனசைவிட்டு அகலவேயில்லை.

இவ்வாறு ஆழ்வார் பாசுரங்களினால் தமிழ்க் கவிதையில் ஏற்பட்ட ஆர்வம், பின்னால் பாரதியார் பாடல்களினால் வளர்ந்தது. கடைசியில் கம்பனுக்கு வந்து பூரணம் அடைந்தது.

சிறுவர்கள் நால்வரும் பாண்டுரங்கன் பள்ளிக்கூடத்தை விட்டு விலகும் சமயம் வந்தது. அந்தப் பள்ளியில் ஐந்தாம் வகுப்புவரைதான் உண்டு. மேலே படிக்க மாயூரம் முனிசிபல் பள்ளியில் தான் வசதி இருந்தது. அய்யாசாமி அய்யரே அந்தப் பள்ளியில் அவர்களைச் சேர்த்து விட்டார்.

முத்துவும் சுப்புவும் செல்வக் குடும்பங்களைச் சேர்ந்தவர்களாதலால், அவர்களுடைய பெற்றோர்கள் மாயூரத்திலேயே அவர்களுக்கு ஜாகைகள் அமைத்துக் கொடுத்து அவர்களைக் கவனித்துக் கொள்ள உறவினர்களை அமர்த்த முடிந்தது. அவ்வித ஏற்பாடு செய்யக் கிருஷ்ணமூர்த்தியின் குடும்பத்தாருக்கு வகையில்லை. நண்பர்களின் ஜாகைகளிலேயே அண்ணனும் தம்பியும் வசித்திருக்க முடியும். நண்பர்களும் அவர்களை உடன் பிறந்தவர்கள்போல் வைத்துக்கொண்டு உபசாரம் செய்திருப்பார்கள். ஆனால், சாதிக் கட்டுப்பாடுகள் தளராத அந்தக் காலத்தில் எந்தப் பக்கத்துப் பெரியோர்களும் அவ்வித ஏற்பாட்டை அனுமதித்திருக்க மாட்டார்கள்.

கிராமத்திலிருந்து நாள்தோறும் மாயூரம் சென்று வருவதோ சிரமமானது. ஒரு பாட்டி அம்மாள் வீட்டில் சகோதரர்கள் தங்கிச் சாப்பிட்டுக் கொண்டு படிப்பது என்று ஏற்பாடாயிற்று. முனிசிபல் பள்ளியில் சம்பளம் கிடையாதுதான். ஆனாலும் அந்தப் பாட்டி அம்மாளுக்கு மாதா மாதம் ஒழுங்காய்ப் பணம் கொடுப்பது கூட அப்போதைய குடும்ப நிலையில் கஷ்டமாயிருந்தது. சில மாதங்களில் அண்ணனின் படிப்பு நின்றது. ஓராண்டில் தம்பியின் படிப்பும் நின்று போயிற்று.

அண்ணனுக்குத் தகப்பனாரின் கர்ணம் வேலை காத்திருந்தது. அதை அவனுடைய அம்மான்களில் ஒருவரான ராமு அய்யர் மைனர் கார்டியனாகப் பார்த்து வந்தார். அவருடைய உதவியுடன் அவன் அந்த வேலைக்கு உரிய புத்தகங்களைப் படித்துப் பரீட்சையில் தேறினான். பதினெட்டாவது வயதில் வேங்கடராமன் கர்ணம் வேலையை ஒப்புக்கொண்டு, அதைப் பார்ப்பதிலும், குடும்பப் பொறுப்பை வகிப்பதிலும் ஈடுபட்டான். அந்தக் காலத்தில் கர்ணம் சம்பளம் பத்து ரூபாய்தான்.

எதற்கும் இருக்கட்டும் என்று தம்பியை அவன் தன் வேலையில் பழக்கினான். பதினைந்தாவது வயதில் கிருஷ்ணமூர்த்தி கர்ணம் பரீட்சை எழுதித் தேறினான். ஆனால் அதற்கான சான்றிதழை வாங்கிக்கொள்வதில் அவனுக்கு அக்கறை இல்லை. மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு அதை அவனுக்காக அண்ணா வாங்கி வைத்துக் கொண்டார்.

ஜமாபந்தி சமயங்களிலும் வரி வசூல் மாதங்களிலும் அண்ணனுக்குத் தம்பி உதவி செய்வான். ஒரு சமயம் நிலத் தீர்வையைச் சர்க்கார் உயர்த்தியபோது புது விகிதப்படியான கணக்குகளை எல்லாம் தம்பி போட்டுக் கொடுத்தான். கணக்கிலே பிசகே இராது. கையெழுத்தோ மணி மணியாய் இருக்கும்.

அந்த நாளில் கிருஷ்ணமூர்த்தி அடைந்த பயிற்சி பிற்காலத்தில் நிலப் பிரச்னைகள் பற்றித் தலையங்கங்களையும் சிறப்புக் கட்டுரைகளையும் தெளிவாகவும் தேர்ச்சியுடனும் எழுத உதவியாய் இருந்தது. திருச்செங்கோடு ஆசிரமத்தில் கணக்கு வழக்குகளைக் கவனித்துக் கொள்ளவும் உதவிற்று.

அண்ணனுக்குக் கிருஷ்ணமூர்த்தி கர்ணம் வேலையில் உதவி செய்ததற்கு முன்னாலிருந்தே அய்யாசாமி அய்யருக்குப் பாண்டுரங்கன் பள்ளிக்கூடத்தில் சட்டாம்பிள்ளையாக உதவி செய்து கொண்டிருந்தான். அதுவும் பயனுள்ள அனுபவமாகவே அமைந்தது. சின்னஞ்சிறுவர்களின் மனத்தை அறிந்துகொள்ளவும், அவர்களுக்குக் கற்பிப்பதில் உண்டான சிரமங்களை உணர்ந்துகொள்ளவும் அது வாய்ப்பு அளித்தது. பிற்காலத்தில் கல்கி அக்கறை கொண்ட பிரச்னைகளில் கல்விப் பிரச்னையும் ஒன்று. அது பற்றிச் சிந்தித்துச் சிந்தித்துப் பயனுள்ளதாய் எத்தனையோ கட்டுரைகளை அவர் எழுதினார்.

அண்ணன் கணக்கையாவாய் இருப்பதையோ, தம்பி சட்டாம்பிள்ளையாய் இருப்பதையோ அய்யாசாமி அய்யர் சிறிதும் விரும்பவில்லை. கதா காலட்சேபம் செய்வதையே அவர்கள் தொழிலாகக் கொள்ளலாம் என்று அவர் அடிக்கடி சொல்வதுண்டு. ''எவ்வளவு பிரமாதமாய்ச் செய்யறேள்! சம்பாத்தியம், புகழ், புண்ணியம் எல்லாம் கிடைக்குமே!'' என்பார். ஆனால் அண்ணனோ தம்பியோ அதைத் தொழிலாக நடத்த விரும்பவில்லை.

தொழிலாக அல்லாமலே ''புத்தமங்கலம் சகோதரர்கள்'' மேலும் மேலும் அதிகமாய்க் கதைக் கச்சேரிகள் செய்தார்கள். ஒரு கட்டத்திற்குப் பிறகு கிருஷ்ணமூர்த்தி அந்தக் கச்சேரிகளினிடையே பாரதியார் பாடல்களையும் தன் சொந்தப்பாடல்களையும் பாடினான்.

இன்னும் ஒரு கட்டத்துக்குப் பிறகு நாடகம் போடத் தொடங்கினார்கள். அவர்களும், சுப்பு, முத்து, முத்துவின் தம்பி சாரங்கபாணி மற்றும் நடிப்பில் ஆசை கொண்ட மற்ற இளைஞர்களும் சேர்ந்து, ''பாண்டுரங்க பக்த ஜன நாடக சபா'' என்ற தடபுடலான பெயரில், அதற்கெனக் குழு ஒன்றை அமைத்துக் கொண்டார்கள். கோவலன், நந்தனார், சாவித்திரி - சத்தியவான் போன்ற நாடகங்களை முதலில் போட்டார்கள். பின்னர் கிருஷ்ணமூர்த்தியின் யோசனையின்பேரில் சம்பந்த முதலியாரின் நாடகங்களைப் போட்டார்கள். மணல்மேட்டில் ஓலைக் கொட்டகையில் நடந்த அந்த நாடகங்களை, உள்ளூர்க்காரர்களுடன் பக்கத்து ஊர்க்காரர்களும் பார்த்து மகிழ்ந்தார்கள்.

விளையாட்டுக்களில் ஆட்டக்காரனாய்க் கலந்துகொள்ளாதது போலவே, நாடகங்களிலும் கிருஷ்ணமூர்த்தி நடிகனாய்க் கலந்துகொள்ள விரும்பவில்லை. விளையாடும் பையன்களைப் பாராட்டியது போலவே, நடிகர்களையும் பாராட்டினான். ஒத்திகையின்போது யோசனையும் வக்கணையும் சொல்லுவான். நாடகத்தின் தொடக்கத்தில் சூத்திரதார் தோரணையில் முன்னுரை பேசுவான். இறுதியில் மதிப்புரை கூறுவான்.

சில நாடகங்களுக்குக் கிருஷ்ணமூர்த்தி பாட்டுக்கள் கட்டிக் கொடுத்தான். அவற்றை அவனே நடிகர்களுக்குக் கற்றுக் கொடுப்பான். மாதிரிக்கு ஒரு பாட்டு:

வன்னத் தாமரைகள் மணம் வீச
அன்னப் புள்ளுகளும் காணும் — அக்கச்
சுந்தர நீலோத்பலத்தால்—
மந்தகாசம் புரியும் குளமே —
வனமே நந்தவனமே.

நீல நிர்மலமான வானம் — அங்கு
சில வானம்பாடியின் கானம் — அந்தச்
சுந்தரச் சிறுகுன்றின் மேல்
அந்தமிகு சிற்றருவி ஆரம் —
ஆரம் ஒய்யாரம்.

''நீயே ஒரு நாடகம் எழுதேன் - ஜோராய்ப் போடலாம்'' என்று நண்பர்கள் சொன்னார்கள்.

''எனக்கு நாடகம் எழுத வரும் போல் தோணலையே!'' என்று கிருஷ்ணமூர்த்தி சொன்னான்.

''எழுதித்தான் பாரேன். நாம் போடற அடுத்த நாடகம் உன்னுடையதாகத்தான் இருக்கணும்'' என்று அவர்கள் வற்புறுத்தினார்கள்.

அதன்பேரில் ''சந்திரகாசன்'' என்ற நாடகத்தைக் கிருஷ்ணமூர்த்தி எழுதிக் கொடுத்தான். அதை நண்பர்கள் பாராட்டிச் சீக்கிரமே அரங்கேற்றினார்கள்.

நண்பர்கள் மெச்சிய போதிலும் கிருஷ்ணமூர்த்திக்கு அது நல்ல நாடகமாகத் தோன்றவில்லை. தனக்கு நாடகம் எழுத வராது என்றே முடிவு செய்து கொண்டான்.

பிற்காலத்தில், சிறு கதைகள், நாவல்கள், கட்டுரைகள், கவிதைகள் என்றெல்லாம் எழுதிக் குவித்த கல்கி ஒரு நாடகங்கூட எழுத முயலவில்லை. பிறர் கோரியும் எழுதவில்லை.

1945ன் இறுதியில் ஒரு நாள் நடிகர் அவ்வை சண்முகம் கல்கியைக் கண்டு, அவருடைய ''சுபத்திரையின் சகோதரன்'' என்னும் கதையை நாடகமாக்கித் தரும்படி வேண்டினார்.

கல்கி சிரித்துக் கொண்டே சொன்னார்: ''மிஸ்டர் ஷண்முகம்! கிருஷ்ணமூர்த்தி என்ன, சகல கலாவல்லவன் என்று நினைத்துக் கொண்டிருக்கிறீர்களா? அதெல்லாம் ஒன்றுமில்லை. எனக்கு நாடகம் எழுத வராது. உங்களுக்குப் பிடித்தமான நாடக எழுத்தாளர் யாரையாவது எழுதச் சொல்லுங்கள். அந்த எழுத்துப் பிரதியை எனக்கு அனுப்பி வையுங்கள். நான் சரி பார்த்துக் கொடுத்து விடுகிறேன்.''

....எந்த எழுத்தாளர் இப்படித் தம் திறமையைக் குறைத்துக் கொண்டு சொல்லுவார்! மாமேதை கல்கிக்குத்தான் அந்தத் துணிவு இருந்தது. இப்படித் தைரியமாகத் தம்மைப் பற்றி ஒப்புக் கொள்ளவும் ஒரு தனிப் பண்பு வேண்டும் அல்லவா?

(எனது நாடக வாழ்க்கை புத்தகம்).

(தொடரும்)

யானை சிறு வெண்மையான பறவை!

பொன்னித் துறைவன்

விடியற்காலை ஐந்து மணிக்கே விழிப்பு வந்துவிட்டது. விழிப்பு வந்துவிட்டது என்று கூறுவதுகூடச் சரியில்லை. தூங்கினால் அல்லவா விழிப்பு? இமை கொள்ளாது படுக்கையில் இரவு முழுவதும் புரண்டு கொண்டிருந்தவன் எழுந்து கொண்டேன் என்பதுதான் உண்மை.

லாவண்யா என் மனைவி என்கிற ஸ்தானத்திலிருந்து விலகிப் போய் ஆறு மாதங்களாகி விட்டன. கைக் குழந்தையையும் அழைத்துக் கொண்டு போய்விட்டாள். சட்டபூர்வமான முத்திரையையும் அடித்துக் கொண்டு, பள்ளிக்கூடத்தில் டிரான்ஸ்ஃபர் ஸர்டிபிகேட் பெற்றுச் செல்வது போல் அவள் விடைபெற்றாள்.

எனக்கு இது பெரிய அதிர்ச்சிதான். சிந்திக்கச் சிந்திக்கக் குழப்பந்தான் மிஞ்சுகிறதே ஒழிய என் கேள்விக்குப் பதில் இல்லை. ஆட்டுக் குட்டி போல் அத்தனை சாதுவாக இருந்த லாவண்யாவா இப்படிச் செய்தாள்? மைகாட்! என்னவெல்லாம் பேசிவிட்டாள்! அதற்குக் காரணமாக இருந்தது பொல்லாப் பிடிவாதமா, சம்பாதிக்கிறோம் என்கிற தைரியமா, இங்கிலீஷ் படிப்பின் விளைவா? அல்லது இவை எல்லாமும் சேர்ந்ததா?

லாவண்யா இனி எனக்கு மனைவியாக இருக்கப் போவதில்லை என்று புரிந்த அதே கணத்தில் அவள் என் மகளாக மாறிவிட்டது போன்ற ஒரு பிரமை என் இதயத்தைப் பிழிந்தெடுத்தது. இந்த விசித்திர உணர்வு ஏற்படக் காரணம் என்னவென்றே விளங்கவில்லை.

மீண்டும் அசை போட்டுக் கூட்டிக் கழித்துப் பார்க்கையில், வெளிப்படை உறவுகளில் நான் கணவனாக இருந்து வந்திருந்தாலும், மனத்தின் அடித்தளத்தில் அப்பாவாகத்தான் இத்தனை நாட்கள் இருந்திருக்கிறேன் என்பதும், அவள் பிரிந்து போக வேண்டும் என்று வற்புறுத்தியதற்கு வேறு என்ன காரணங்கள் இருந்திருந்தாலும், இது அவைகளில் முக்கியமானதொன்று என்பதும் புரிந்தது.

என்னை நிதானப்படுத்திக் கொண்டு, உணர்ச்சிகளை ஓர் அரைப் புன்னகையால் போர்த்தி மீண்டும் அவளை நோக்கினேன். அவளே பேசினாள்:

"ஐ ஆம் வெரி ஸாரி. எந்த ஓர் ஆணுக்கும் இதுபோன்ற தருணம் மிகப் பெரிய சோதனைதான். என்னைச் சரியாகப் புரிந்து கொள்ளவேண்டும். உங்களைப் போன்ற நல்லவர் இந்த உலகத்திலேயே இருக்க முடியாது.... ஆனால்...."

"ஆனால்?"

"கொஞ்சம் பொறுமையாகக் கேளுங்கள். சில அடிப்படை விஷயங்களை ஆராய வேண்டும். நீங்கள் தீவிரமான கொள்கைப் பிடிப்பு உடையவர். புதிய நோக்குகளைப் பற்றி உங்களுக்கு அவ்வளவு நல்ல அபிப்பிராயம் கிடையாது. (No changer). இந்நிலை, போகப் போக நம் இருவருக்குமே சங்கடமாக இருக்கும். இயல்பான போக்குகளை மாற்றிக் கொள்வது கஷ்டம்தான். மாற்றிக் கொள்ள வேண்டும் என்று வற்புறுத்துவதும் அநாகரிகம். ஆனால், வேறு சில விஷயங்கள் — மாற்றி அமைத்துக் கொள்ளக்கூடிய விஷயங்கள் இருக்கின்றன, இல்லையா?"

"உதாரணமாகத் தாம்பத்திய உறவு... அப்படித்தானே?"

"என்னைச் சீண்டுகிறீர்கள்.... அப்படியும் சொல்லலாம்..... ப்ளீஸ்... நேரடியாகப் பாதிக்கப்பட்டவர்கள் இது போன்ற சிக்கலான விவாதத்தில் இறங்குவது உணர்ச்சிகளை அநாவசியமாகக் கிளறிவிடுவது போலாகி விடும். நாம் இப்பொழுது பேச வேண்டிய அவசியமேயில்லை. நான் சொல்ல வந்தது உங்களுக்குப் புரிந்து விட்டது."

நான் பேச்சற்று விடுகிறேன். என்னத்தைப் பேச?

இவளது சிந்தனையும், தனித்துவமும், சுதந்திரமும் அவ்வளவு விரிவாக வளர்ந்துவிட்டனவா? அப்பப்பா! எவ்வளவு பெரிய வார்த்தைகள்!

திருமணம் என்பது இரு நபர்களை மட்டும் பொறுத்து, படுக்கையறையின் நான்கு சுவர்களுக்குள் முடிந்துவிடும் விஷயமல்ல, மாறாக ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து, இட்டு நிரப்பி, தன்னலமற்று, விரிவான பொது நன்மைக்காகத் தியாக வேள்வியில் புடம் போடப்படும் ஒரு மகத்தான நோன்பு என்பதை இவளுக்குப் புரிய வைப்பது எப்படி? இந்த மண்ணில் பிறந்த தோஷத்தால் இயற்கையாக நம்முள் ஊறியிருக்கும் சில நுட்பமான தர்மங்களை — தத்துவங்களை — எங்கிருந்தோ இறக்குமதியான அரைவேக்காட்டுப் பிதற்றல்களால் மழுங்க அடித்துக் கொண்டிருக்கிறோம் என்பதை இவளுக்கு யார் எடுத்துச் சொல்ல? இவள் மிக சிலாக்கியமாகக் குறிப்பிட்ட அதே தனித்துவம்தான் இந்த அவலப் போக்கின் முதல் பலி என்பதை யாவது இவளுக்குச் சொல்ல வேண்டாமா?

இப்படியெல்லாம் சிந்தனையோட்டம் சென்றாலும் பேச நா எழவில்லை. விவாதம் அவளது முடிவை மாற்றக் கூடும் என்று தோன்றவில்லை.

குழந்தை ஞாபகம் வந்தது. அதன் வளர்ச்சிக்கு "ஃபாதர் இமேஜ்" அவசியமாயிற்றே என்று தோன்றிற்று. அதற்கு இவள் என்ன செய்யப் போகிறாள்?

"இப்பொழுது எடுத்திருக்கும் உன் முடிவைத் தொடர்ந்து வேறு ஏதாவது திட்டம் உண்டா?"


அவள் என்னைப் பார்த்தாள். என் கேள்வியின் உட்பொருளைப் புரிந்துகொண்டுவிட்ட தன் ஒளி விழிகளில் இருந்தது. ஆனால்

அடுத்த நிமிஷமே விழிகளைச் சடக்கென்று தாழ்த்திக் கொண்டு, "அப்படியொன்றும் இல்லை" என்று வலுவில்லாமல் கூறினாள்.

விஷயத்தைப் பாஷை வாகனத்தில் ஏற்றி விஸ்தாரமாகச் சொன்னால்தான் புரிய வேண்டுமா என்ன? ஒரு பார்வை அல்லது ஒரு சைகையில் அந்தரங்கம் என்ன திட்டம் போட்டுக் கொண்டிருக்கிறது என்பதை கணிக்க முடியாதா? என் விழிகளைச் சந்திக்க ஏன் தயங்குகிறாள்?

புரிகிறது. அதே கணத்தில் இதயத்தை யாரோ காய்ச்சிய ஈயத்தால் நிரப்புவது போன்ற உணர்வுடன் நான் அந்த இடத்தை விட்டு அகன்றேன்.

நேற்று இரவு முழுதும் தூக்கமில்லை. ஐந்து மணிக்கே எழுந்தாகிவிட்டது. காரணம், லாவண்யாவும், அவளது புதுக் கணவனும் எனது பழைய குழந்தையும் என்னைத் தேடி வருகிறார்கள். 'கர்ட்டஸி' கால்! ஒரு வாரத்துக்கு முன்பே அவள் போன் செய்



போட்டிக் கதை 8

தாள். தனது கணவனை எனக்கு அறிமுகப் படுத்த ஆவலாயிருப்பதாகவும், உலகத்தில் என்னைப் போன்ற நல்லவர் கிடையாது என்கிற விஷயத்தை அவள் கணவனிடம் தான் சொல்லி வைத்திருப்பதாகவும், ஆகவே அவரும் என்னைப் பார்க்க விரும்புவதாகவும், குழந்தையை நான் பார்ப்பதற்கு இது ஒரு சந்தர்ப்பமாக அமையும் என்றும் கூறி, "ஹௌ அபௌட் தட்?" என்று ஒரு கேள்வியை வீசி எறிந்தாள். எதிர்பாராத இந்தத் தாக்குதல் என்னை அயர வைத்தது. இவள் நிஜமாகவே பச்சைக் குழந்தைதானா?

என்னை அவள் கணவன் சந்திப்பதால் லாபம் என்ன, விளைவுகள் என்னவாயிருக்கும்—இது போன்றதொரு நிலையில் என் உணர்ச்சிகள் எவ்வாறு பாதிக்கப்படும் என்கிற விஷயங்களைப் பற்றிச் சிந்தித்திருப்பாளா என்று பல கேள்விகள் எழுந்தன. "ஆர் யூ ஸீரியஸ்?" என்று கேட்டேன். "எஸ்" என்றாள். ஆகவே, வராதே என்று கூறுவது இங்கிதக் குறைவு என்பதனால் வேறு வழியில்லாமல் சரி என்று ஒப்புக் கொண்டேன். விளைவு? இரவு முழுதும் தூக்கம் கெட்டது.

நிலைக்கண்ணாடியில் முகத்தைப் பார்த்த போது ஜுரக்காரன் போல் இருந்தது. கண்களைச் சுற்றி இப்படியுமா ஒரு கருமை? இந்த ஆறு மாதங்களில் வயது படுவேகமாகக் கூடி விட்டது! உள்ளூற ஏதோ புரையோடிக் கொண்டிருக்கிறது. வயது ஏறுவது கால ஓட்டத்தைப் பொறுத்ததல்ல என்பது புரிகிறது. எல்லாம் மனசுதான். பிறப்புக்கும் இறப்புக்கும் இடையே நீண்டு கிடப்பது வாழ்க்கையல்ல; மனசு.

இந்த ஆறு மாத காலங்களில் நாங்கள் சில முறை சந்தித்திருக்கிறோம். எதேச்சையாக நிகழ்ந்துவிட்ட சந்திப்புக்கள். குழந்தையைப் பார்க்க வேண்டும் என்கிற துடிப்பு என் கழுத்தைப் பிடித்துத் தள்ளி அவளைத் தேடிப் போகச் சொன்னாலும், பல்லைக் கடித்துக் கொண்டு வைராக்கியத்தோடு இருந்தேன். ஆனால் இவளை மட்டும் தனியாகச் சந்திக்கும் வாய்ப்புக்கள் கிடைத்தன. அந் நேரங்களிலெல்லாம் கலகலப்புக்கு மட்டும் குறைவில்லை. இரண்டு பழைய நண்பர்கள் கூடிப் பேசும்போது ஏற்படுகிற ஆவலும் அந்நியோன்னியமும் சுடர்விடும். இவள் ஆபீஸ் செல்லும் வேளைகளில் குழந்தையை ஆயா பார்த்துக் கொள்வதாகக் கூறினாள். அப்பாவை நன்றாக ஞாபகம் வைத்துக் கொண்டிருப்பதாகவும், தூரத்தில் ஜிப்பா, வேஷ்டி உடுத்திக்கொண்டு போகிறவர்களையெல்லாம் 'அப்பா அப்பா' என்று அழைப்பதாகவும், ஆனால் அதே



பம்பாயில் இப்பொழுது கடைகளைச் சோதனை போடுவது போலீஸ் அல்ல. சிவ சேனைத் தொண்டர்கள். போலீஸார் பக்கத்தில் நின்று வேடிக்கை பார்ப்பார்கள். ஹிம்மத்-பாலி

நினைவால் ஏங்கிப் போகவில்லை என்றும், மற்றப்படி சந்தோஷமாக இருப்பதாகவும் கூறினாள். குழந்தையைப் பற்றிப் பேசும் போது மட்டும் என் மனம் அஞ்ஞானத்தால் குழம்பும். அவளுக்குத் தெரியாமல் கண்ணீர் வடிப்பேன். இந்த விஷயத்தில் எனது தவிப்பை அவள் புரிந்து கொள்ளவேயில்லை.

ஒரு விதத்தில், சலனமில்லாத அவளது மன் நிலை எனக்குப் பிடித்தது. பொறாமை யாகக்கூட இருந்தது. பழசை மறந்து புதிய உறவுக்கு மனத்தைப் பக்குவப்படுத்திக் கொள்வதும் ஒரு யோக முயற்சிதானே? பார்க்கப் போனால், கணவன் — மனைவி என்கிற கனமான உறவுச் சிலுவையைச் சுமந்து கொண்டு அச்சுமையின் அழுத்தலில் திணறுவதைவிட, நட்பு என்கிற இலேசான அங்கியை அணிந்து, தத்தம் கொள்கை வட்டங்களைக் கலைத்துக் கொள்ளாமல், உறவுக்கு இசைந்து கொடுத்து, உரிமைக்குப் போர்க்கொடி உயர்த்தும் சாமர்த்தியமான புதிய மரபினை ஏற்றுக் கொண்டிருப்பது அவளது இயல்பையொட்டியதாகவே இருந்தது. ஆசாரங்கள் தலைகீழாக மாறிவிட்ட சூழலில், துணி தயாரிப்பாளன், நட்சத்திர ஹோட்டல்காரன், சினிமாக்காரன் ஆகிய பண உபாசகர்களின் சிந்தனைச் சுடரிலிருந்து தெறிக்கும் புது யுகப் பொறிகளே வாழ்க்கை பாணியாக அமைந்துவிடுகிற வேளையில்,— வெற்று மனுஷன் அல்லது மனுஷியாகத் திகழ வேண்டும் என்றால், புனிதம், பவித்திரம், கற்பு என்கிற பொருந்தாப் பேச்சுக்களை உதறி விடுவதுதானே நியாயம்?

யானையைப் புரு என்று கூறுவதுதான் இந் நூற்றாண்டின் தர்மம் அல்லது மரபென்றால், அப்படிச் சொல்லிவிட்டுப் போவதுதானே கெட்டிக்காரத்தனம்? நக்கீரர்கள் மனித இயல்புக்குப் பொருந்தா விலக்குகள் மந்தைக் குணந்தான் மனித குலத்தின் பிதுரார்ஜிதம்.

சிரிப்புத்தான் வருகிறது. லாவண்யா தீவிரமாகத் 'தனித்வம்' 'சுதந்திரம்' ஆகிய வார்த்தைகளை உபயோகித்தாள். இவற்றின் பொருளை உணர்ந்துதான் பேசினாளா? நடையும், உடையும், பாவனையும், நோக்குகளும் வாழ்க்கை பாணியும், ஏன், சிந்தனைக் கருவும் கூட விதேசிச் சரக்காக இருக்க வேண்டிய ஓர் அற்பமான, அவலமான நிலைக்கு நம்மை நாமே தாழ்த்திக் கொண்ட பிறகு தனித்வமும் சுதந்திரமும் எங்கே இருக்கின்றன?

அறிமுகம் செய்விக்க வருகிறாளாம். வரட்டும். தனிப்பட்ட முறையில் லாவண்யா இப்பொழுது என் மகள். நான் அவளது தந்தை. கிரீஷ் எனது மருமகன். என்னைப் பொறுத்த வரை உறவு துண்டிக்கப்படவே இல்லை. மாறியிருக்கிறது. அவ்வளவுதான். லாவண்யா குடும்பத்துடன் பிறந்த வீட்டுக்கு வருகிறாள். நான் வரவேற்கத் தயாராயிருக்கிறேன்.

காலிங் பெல் ஒலிக்கிறது. அவர்கள் வந்து விட்டார்கள். கதவைத் திறக்கிறேன். 'ஹல்லோ' என்று அட்டகாசமாகக் கைகளைக் குலுக்குகிறான் கிரீஷ். குழந்தை பவித்ரா என்னை அநேகமாக மறந்துவிட்டாள். இல்லையென்று லாவண்யா என்னிடம் புளுகியிருக்கிறாள். எங்கேயோ பார்த்த நினைவாக இருக்கிறதோ என்னவோ! அப்படி உற்றுப் பார்க்கிறாள். அம்மாவின் விழிகளை உரித்து வைத்திருக்கிறது. ''என்னம்மா கண்ணு?'' என்று நான் கைகளை விரித்து அவளை அழைக்கிறேன். அவள் அம்மாவின் கழுத்தைப் பலமாகத் தழுவிக்கொண்டு சிணுங்குகிறாள். குழந்தை இளைத்திருக்கிறது. அல்லது எனக்குத்தான் பிரமையோ? ''நம்ப மாமாம்மா'' என்கிறாள் லாவண்யா, என் பக்கம் திரும்பாமலேயே! ''மாமா இல்லேம்மா, அப்பா. அப்பா சொல்லு. அ—ப்—பா'' என்கிறான் கிரீஷ். எனக்கு ரோமாஞ்சனம் ஏற்படுகிறது. அழுகையே வந்துவிடும்போலிருக்கிறது. கிரீஷின் பரந்த உள்ளத்தை என்னால் உணர முடிகிறது. இவர்கள் எல்லோரும் பக்குவம் அடைந்த மனசைக் கொண்ட யோகிகள். நான்தான் அஞ்ஞானத்தில் உழலுகிறேன். மண்டைக்குள் ஒரே சூன்யம். நிதரிசனமான உண்மையைக் காணக் கண்கள் கூசுகின்றன. மகம் மொத்தையாக மழுங்கிக் கிடக்கிறது. கால வெள்ளத்தை எதிர்த்து நீச்சல் போடுவது எவ்வளவு பைத்தியக்காரத்தனம்? நான் தோற்று விட்டேன். மகத்தான, பரிதாபமான, புன்மையான தோல்வி. வெற்றி கிரீஷுக்கே, லாவண்யாவுக்கே. அவர்கள் உண்மையை ஒப்புக் கொள்கிறார்கள். மிரளவில்லை. சாதாரண உணர்ச்சிகளுக்கு அப்பால் நின்று வாழ்க்கையைப் பார்க்கத் தெரிகிறது. ரசிக்கவும் தெரிகிறது. நான்தான் அஞ்ஞானி. மனம் புலம்புகிறது. கண்ணீர் வடிக்காமல் அழுகிறேன்.

குழந்தை கிரீஷிடம் தாவுகிறது. லாவண்யா தான் கொண்டு வந்திருக்கிற மாம்பழங்களைப் பையிலிருந்து எடுத்து மேஜையின் மீது வைக்கிறாள். பிறகு என்ன நினைத்துக் கொண்டாளோ, மளமளவென்று அவைகளை எடுத்துக்கொண்டு ஸர்வ சுதந்திரமாக அடுக்களைக்குச் செல்கிறாள். அடுத்த நிமிஷத்தில்

ரூபி டஸ்ட் டீயில் மட்டுமே காணும் மூன்று சிறப்பம்சங்கள்

I. கணத்தில் கிட்டிடும் பானம்

2. தருவதும் செறிந்த மணம்

3. பெருவதோ கோப்பைகள் அதிகம்



கெட்டியான டிகாக்ஷன் மட்டுமல்ல; சிக்கனத்தையும் சிறப்பம்சமாய்க் கொண்ட ஓரே டீ-லிப்டன் ரூபிடஸ்ட். முழுமையான தேநீரின் மறு பெயர்தான் லிப்டன் ரூபி டஸ்ட்.

லிப்டன் ரூபி டஸ்ட்


ஒவ்வொரு பாக்கெட்டுக்கும் செறிவு மிக்க அதிகக்கோப்பைகள்

LIPTON

[illegible]

LRDC-10 TAM

அமெரிக்க அரசு அலுவலகங்களை அலங்கரிக்கும் ஜனாதிபதி படங்களை வைக்க ஆகும் செலவை அரசு ஏற்பதில்லை. ஜனாதிபதி எந்தக் கட்சியோ அந்தக் கட்சி ஏற்கும்.



நசிம்மத் - பாலி

இரண்டு பிளாஸ்டிக் தட்டுகளில் தோல் சீவித் துண்டாக்கப்பட்ட பழங்களையும், என்னிடம் எப்போதுமே இருக்கிற பிஸ்கெட்டுகளையும் நிரப்பிக்கொண்டு ஒயிலாக நடந்து வந்து என்னிடம் ஒரு தட்டை நீட்டுகிறாள். அவள் உடம்பு சற்றுப் பூசினாற் போலிருந்ததைக் கவனிக்கிறேன். இன்னொரு தட்டைக் கிரீஷிடம் கொடுக்கிறாள். பிறகு, 'கொஞ்சம் பொறுங்கள், டீயும் வருகிறது' என்று கூறிவிட்டு, மீண்டும் அடுக்களைக்குள் சென்று விடுகிறாள். பவித்ரா கிரீஷின் மடியிலிருந்து இறங்கி, தனது சொப்புக் கால்களால் குறு நடை நடந்து அம்மாவைத் தொடர்கிறது. நானும் கிரீஷூம் தனியாக விடப்படுகிறோம்.

சில கணங்கள் நிசப்தத்தின் ஆளுகைக்குள் கனத்துக்கொண்டே நகருகின்றன.

விடைபெறும் நேரம் வருகிறது. கதவைத் திறந்து கொண்டு எல்லோரும் வெளியே வருகிறோம். அவர்கள் காரில் ஏறிக்கொள் கிறார்கள். லாவண்யா, குழந்தையின் கையை உயரே தூக்கி, பலவந்தமாக ஆட்டி, 'டாட்டா சொல்லு' என்று துணைப்புகிறாள். அது கையை உதறிக்கொண்டு ஆட்டாமல், என்னைச் சுட்டிக்காட்டி, ''மாம்மா'' என் கிறது. நான் பலமாகச் சிரித்து விடுகிறேன். லாவண்யா குனிந்து கொள்கிறாள். கிரீஷ் மூக்கை அறுத்துவிடுவேன் என்பதுபோல் குழந்தையிடம் பாவனை பிடிக்கிறான்.

கார் நகர ஆரம்பித்து விட்டது. கடைசி யாக ஒருமுறை குழந்தையைப் பார்க்கிறேன். அது என்னைப் பார்த்துக் குறும்பாகச் சிரிப்பது போல் தோன்றுகிறது. துளிக்கும் கண்ணீ ரால் பார்வை மங்குகையில் அந்தத் தளிர் முகம் என்னிடமிருந்து விலகிக் கொண்டே போகிறது. கார் மறையும்வரையில் அங்கேயே நின்றுவிட்டு வீட்டுக்குள் வருகிறேன்.

குழந்தை மாமாவென்று அழைத்தது ஒலித் துக்கொண்டேயிருக்கிறது.

புதிய கோணங்கள், புதிய நோக்குகள், புதிய அர்த்தங்கள். எல்லாமே புதுசு.

நானும் எனது சிந்தனையும்தான் பழசு. மக்கிப்போன பழசு. உபயோகமில்லாத பழசு. குப்பைக் கூடையில் எறியப்பட்ட பழசு.

இது மிகக் கொடிய உலகம். நமது கணக்குகள், கணிப்புகள், அர்த்தங்கள் எல் லாமே அபத்தம்; இதையெல்லாம் மீறிய கணிப்பு ஏதோ இருக்கிறது.

''ஈச்வரோ ரக்ஷது!''

◇ ◇ ◇ ◇ ◇ ◇ ◇ ◇ ◇ ◇ ◇ ◇ ◇ ◇ ◇ ◇ ◇ ◇ ◇

● ஹாமில்டனிலுள்ள கால்கேட் பல்கலைக் கழகம், சென்னை பரதநாட்டியாலயாவுடன் ஒத்துழைத்ததில் கால்கேட்-கமலா குரூப் என்ற பெயரில் இருபத்தைந்து நடன, இசைவல்லுநர் களுடன் ஓர் அமைப்பு தொடங்கப்பட்டிருக்கிறது. இதற்கு, பரதநாட்டியாலயாவின் தலைவியான கமலா டைரக்டராயிருப் பார். துவக்க விழாவின்போது கமலா-கால்கேட் குழுவினரின் அமெரிக்க டைரக்டரான பேராசிரியர் வில்லியம் ஸ்கெல்ட்டன், தமிழ்நாடு கல்வி அமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன், அமெ ரிக்க கான்ஸல் ஜெனரல் ஜான்சக்ஸ் ஆகியோர் பேசினர். கமலா நன்றி கூறினார்.



● தஞ்சை-திருச்சி மாவட்ட பெண்கள் கல்லூரிகளுக்கான பரதநாட்டியப் போட்டியில் குமாரி ஆர். எஸ். உஷா (குடந்தை, கல்கி ஏஜெண்ட் திரு ஆர். எஸ். மணியின் புதல்வி) முதல் பரிசாகக் கேடயமும், சிறப்புப்பரிசாக வெள்ளிக் கோப்பையும் பெற்றாள். பானை மேல் ஆடும் பேரணி நாட்டியம் வெகுவாகப் பாராட்டுப் பெற்றது.





● குமாரி ஆர். உஷா வின் மாணவி பேபி பிரியதர்சினியின் பரத நாட்டிய அரங்கேற்றம் அண்மையில் மயிலாப் பூர் ஃபைன் ஆர்ட்ஸ் கிளப் அரங்கத்தில் ஏரா ளமான ரசிகர்கள் முன் னிலையில், சென்னை நீதிபதி கனம் பி. ஆர். கோகுல கிருஷ்ணன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. பேபி பிரியதர்சினிக்கு நல்ல வருங்காலம் இருக்கிற தென்று தலைவர் வாழ்த்துக் கூறினார்.

குவாலியர் ரேயானின் மகத்தான 26 ஆண்டு காலப் பணி



தன்வலிமை பெறும் கனவை நனவாக்கி வரும் பணி.

ரேயான் துணிகள், ஸ்டேபிள் இழை, ரேயான்-கிரேடு பல்ப் (கூழ்). ரேயான் ஸ்டேபிள் நூலிழைத் தொழிற்சாலைகளுக்கான எந்திர சாதனங்கள் ஆகிய எல்லாவற்றையும் நம் நாட்டிலேயே உற்பத்தி செய்து கொள்வதற்கென குவாலியர் ரேயான் செய்துவரும் முயற்சிகள், நாடு சுதந்திரம் எய்திய நாளிலேயே தொடங்கிவிட்டன.

மூங்கில் மற்றும் இதர கெட்டி மரங்களிலிருந்து கரை திறனுள்ள ரேயான்-ரகக் கூழ் தயாரிப்பு, மற்றும் ரேயான், பல்ப், இவை சார்ந்த தொழிற்சாலைகள் ஆகியவற்றுக்கான நுட்பநவீனமான எந்திர சாதனங்களின் உற்பத்தி முதலியவற்றிலே குவாலியர் ரேயான்-முன்னோடியாக விளங்குவதனால், ரேயான் தொழிலிலே நம் நாடு தன்வலிமை பெற வழியமைத்துள்ளது.

இன்று, குவாலியர் ரேயானின் ஸ்டேபிள் நூலிழை உற்பத்தியளவு, 520 லட்சம் பேருக்கு ஆடை வழங்கப் போதுமானதாக உள்ளது. மரக் கூழ் உற்பத்தியோ, ஆண்டு தோறும் ஒரு லட்சம் டன்களுக்கு மேல்; இது செல்லுலோஸ் இழையளவிலே கணக்கிட்டால், 5.2 லட்சம் பருத்தி பேல்களுக்கு ஈடாகும்.

கடந்த பத்தாண்டுகளில், குவாலியர் ரேயான் நம் நாட்டின் பொக்கிஷத்திற்கு, வரிகளும் தீர்வைகளுமாக ரூ. 90 கோடி செலுத்தியுள்ளதோடு, அதே காலத்தில் ரூ. 360 கோடி அந்நியச் செலாவணியை மிச்சப்படுத்தியுள்ளது; இதை நோக்கும்போது, தன்வலிமை வாய்ந்த பொருளாதார அமைப்புக்கு குவாலியர் ரேயான் செலுத்திவரும் மகத்தான பணியின் பெருமை தெளிவாக விளங்கும்.

குவாலியர் ரேயான்—
தேச முன்னேற்றமே முதன்மை எனக் கருதுவோர்.

தி குவாலியர் ரேயான் ஸில்க் மானுபாக் (வீவிங்.) கோ. லிட்., பிர்லாகிராம், நாக்தா (ம.பி.)

ஸ்ரீகானுபவமும் சாவகாசப்பாணியும்!

பத்திரிகையாளனுக்குப் பல சந்தர்ப்பங்களில் பிறர் எழுதியதைக் குறைக்கவோ கூட்டவோ வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும். சில தருணங்களில் இரண்டு பெரிய 'பாரா'க்களை எடுத்துவிட்டு அதற்குப் பதிலாக நாலு வரிகளில் விஷயத்தை எழுத நேரும். பின்னால் அதைப் படிக்கும் அந்த எழுத்தாளர், ''இரண்டுவரிகள் எழுதிச் சேர்த்தாலும் அதை என் பாணியிலேயே எழுதியிருக்கிறீர்கள்'' என்று சொன்னால் பத்திரிகையாளனுக்குச் சந்தோஷம் தாங்காது. மற்றொருவரது நடை



நவராசாவின் ஓர் அங்கமாக 'கானராசா', கணபதி ஹோமம், ஆலோசனைக் குழு சகிதம் கனஜோராக விநாயகசதுர்த்தியன்று ஆரம்பமாகியது. தொடங்கி வைத்தவர் நீதிபதி கே. எஸ். வேங்கடராமன். முதல் கச்சேரி செம்மங்குடி. கச்சேரி சிறப்பு தவிர அனைவர் கவனத்தையும் கவர்ந்தவை இரு விஷயங்கள். ஒன்று சேஷாத்திரியின் அடக்கமானதும் அபாரமான அழகுடன் கூடியதுமான மேடை அலங்காரம். இரண்டாவது, 'ஹிந்து'ப் பத்திரிகையில் வயலின் பற்றிய சர்ச்சை ஒருவழியாக ஓய்ந்திருக்கும்போது புதிதாக மிருதங்கம் பற்றிய சர்ச்சை கிளம்புவதானாலும் சரி என்பது போல் வேராமனுக்கு வைக்கப்பட்டிருந்த மைக்! கலைஞர்களுக்கும் நீதிபதிக்கும் படத்தில் மாலையிடுபவர் ஒய். ஜி. பி.






நேதுனூரி

யைக் கையாண்டு வெற்றி பெற்றதில் உண்டாகும் அளவுக்கு மகிழ்ச்சி அந்தப் பத்திரிகையாளரது எழுத்தையே யாராவது புகழ்ந்துரைத்தால்கூட ஏற்படாது.

இதுபோன்று பிறருடைய பாணியைப் பின்பற்ற வேண்டிய சந்தர்ப்பங்கள் வயலின் வித்வான்களுக்கு அடிக்கடி நேரும். சிலர் இதைப் புரிந்து கொள்ளாமல் தம் போக்கிலேயே ஏதோ வாசித்துக் கொண்டு போவார்கள். பாட்டும் வயலினும் சேராமல் சிரமப்படுத்தும். ஆனால் இந்த விஷயமெல்லாம் லால்குடி ஜெயராமனுக்குச் சொல்லித் தரவா வேண்டும்? அண்மையில் நேதுனூரி கிருஷ்ணமூர்த்திக்கு அனுசரணையாக அவர் வாசித்தது மிகுந்த மன நிறைவைக் கொடுத்தது.



அருண் பரத் ராம். டி.வி.எஸ். நிறுவனத்தின் டைரக்டர்களுள் ஒருவரான இவர் பல அலுவல்களுக்கிடையில் கலை பயில ஆர்வம் காட்டுவது மெச்சத் தகுந்ததல்லவா? ரவிசங்கரின் சிஷ்யரான இவரது ஸிதார் கச்சேரி பாலசுப்பிரமணிய சங்கீத சபா ஆதரவில் ஸ்ரீநிவாச சாஸ்திரி கூடத்தில் நடந்தது. அடக்கமான இந்த அவைக்கு மைக் இல்லாதிருந்திருந்தால் இனிமை கூடியிருக்கும்.

இந்தக் கச்சேரி கேட்கக் குரோம்பேட்டை கல்சரல் அகாடமிக்குப் போயிருந்தபோது, ''செருப்பு ஜாக்கிரதை, செருப்பு ஜாக்கிரதை! பக்கத்திலேயே வைத்துக் கொள்ளுங்கள்'' என்று நிர்வாகிகள் திரும்பத் திரும்பச் சொன்னார்கள். 'அட ஆண்டவனே! குரோம்பேட்டையிலேயே செருப்புக்கு ஆபத்தா, கிராக்கியா?' என்று எண்ணிக் கொண்டேன். இருந்தாலும் செருப்பை மடியில் கட்டிக் கொள்ள இஷ்டமின்றி ஓர் ஓரமாகவே நடப்பது நடக்கட்டும் என்று கழற்றிப் போட்டுவிட்டு ஜமக்காளத்தின் மையத்தில் போய் உட்கார்ந்தேன்.

ஒரு பக்கம் அறிஞர் அண்ணா கம்பீரமாகக் காட்சி தர, மறுபுறம் கலைஞர் கருணாநிதி மாறாப் புன்னகையுடன் திகழ, சில குழந்தைகள் அங்குமிங்கும் ஆனந்தக் கூச்சலிட்டு ஓடி விளையாடிக் கொண்டிருக்க, வேறு சில குழந்தைகள் அழுகுரல் எழுப்ப, போக்குவரவு அரங்கத்தில் நேதுனூரி கிருஷ்ணமூர்த்தியின் கச்சேரி ஆரம்பமாயிற்று!

திகைப்பும் கவலையுமாகக் கேள்விக் குறிகளைத் தேக்கி என் மனைவி என்னை ஏறிட்டுப் பார்த்தபோது, ''கவலைப் படாதே. எட்டு மணிக்கெல்லாம் களைப்பு மேலிட்டுக் குழந்தைகள் தூங்கி விடும்'' என்று தைரியம் சொன்னேன். அதன்படியே சத்தடி அடங்கவும் காம்போதி ராக ஆலாபனை



கிருஷ்ண கான சபா பிற்பகல் கச்சேரியில் சிறப்பாகப் பாடி, பலரது பாராட்டுதல்களைப் பெற்ற ஷோபனா ரங்காச்சாரி



"ஆபீசில் என் பெயரைக் கடைநிலை ஊழியர் என்று மாத்திட்டாங்க."

"ஆபீஸ் டயத்தில், வெற்றிலைபாக்குக் கடை, பொடிக் கடை, சோடாக் கடை என்று போய் வருகிற நிலையில் இருப்பதால் கடை நிலை என்கிறார்களோ!"

ஆரம்பமாகவும் மணி எட்டு அடிக்கவும் சரியாக இருந்தது!

ஒருவர் கச்சேரியை வர்ணிக்கும்போது 'ஆனந்தமா யிருந்தது' என்போம். இன்னொருவர் பாட்டு 'இனிமையா யிருந்தது' என்போம். வேறொருவர் கச்சேரியை 'விறு விறுப்பா யிருந்தது' எனக் கூறுவோம். நேதுனூரி கச்சேரியைச் 'சுகமாயிருந்தது' என்று வர்ணிக்கத் தோன்றுகிறது. கேட்பவருக்கு மட்டுமல்ல, பாடுகிறவரே சுகானுபவத்துடன் பாடுவதை உணர்கிறோம். ராக ஆலாபனைகளின்போதும் சரி, ஸ்வரப் பிரஸ்தாரங்களின் போதும் சரி, பார்ப்பதற்கு மிக இலகுவாகப் பாடுவது போன்ற பிரமையை ஏற்படுத்துகிறார். அதற்காக அவர் எடுத்துக்கொள்ளும் பிரயாசை முயற்சிகளெல்லாம் அவருக்கு மட்டுமே தெரியும்!

ஸ்வரப் பிரஸ்தாரங்களின்போது கணக்கு வழக்குக்குக் குறைவில்லை. என்றாலும் சுகானுபவத்துக்கே இங்கும் முக்கியத்துவம் தந்து பாடுகிறார். உருட்டல் புரட்டல் ஏதுமின்றி உதிரிப் புஷ்பங்களாகச் சொரிகிறார்.

ஆங்கிலத்தில் அச்சான அவர் பெயரை நானிதழில் பார்த்து விட்டு நேதனூரியா, நேதுனூரியா, நெடுனூரியா எப்படி உச்சரிப்பது என்று புரியாமல் நான் ஆரம்பத்தில் குழம்பியதுண்டு. அதேபோல்தான் அவரும் தமிழ்ப் பாடல்களைப் பாடும்போது சிறிதளவு சிரமப்படுகிறார். அதுவும் இப்போதெல்லாம் ரொம்ப முன்னேற்றம்தான். சுந்தரத் தெலுங்கோ அவர் உச்சரிப்பில் அழகு கூடிப் போகிறது.

ராமபத்திரனின் மிருதங்க வாசிப்புக்கும் முக்தாய்ப்புக்கும் எத்தனை சபாஷ் வேண்டுமானாலும் போடலாம்தான். என்றாலும் நேதுனூரி ஒவ்வொரு பாட்டின் முடிவிலும் கன்டிப்பாகத் தாமே சபாஷ் போடுவது என்ற பழக்கத்தைக் குறைத்துக் கொள்ளலாம். அதேபோல் மைக்கில் ஃபீட் பாக் ஏற்படுகிற அளவுக்கு ஓங்கி அறைந்து தாளம் போடுவதையும் விட்டுவிடலாம். சின்ன விஷயங்கள் தாம். ஆனால் ரசிகர்களை நெருடுகிறவை. அன்று ஒரு மெர்க்குரி விளக்கின் 'ஙொய்' சத்தம் பாடகருக்குக் காதை உறுத்த அவர் அதை அணைக்கச் சொல்லவில்லையா?

குரோம்பேட்டை கல்சரல் அகாடமி குறைந்த வசதிகளுடன் அடக்கமாக நடத்தப்பட்டாலும் அங்கத்தினர்கள் அடக்கம் காட்டவில்லை - ரசிப்பதிலும், அப்ளாஸ் கொடுத்துக் கலைஞரை உற்சாகப்படுத்துவதிலும். இந்த அடக்கமின்மை ரொம்ப மகிழ்ச்சி அளித்தது!

மகிழ்ச்சி அளித்த மற்றொரு விஷயம், செருப்பு கடைசிவரையில் காணாமல் போகாமலே இருந்து குரோம்பேட்டையின் நற்பெயரைக் காப்பாற்றியதுதான்!

* * *

மணிக்கு ஐந்நூறு மைல் வேகத்தில் பறக்கும் ஜெட் விமானத்தில் ஏறி அமெரிக்கா சென்று திரும்பியவர்தாம் ஸ்ரீமதி பிருந்தா என்றாலும், பாட்டு விஷயத்தில் 'என்ன அவசரம்? எதுக்கு இறக்கையைக் கட்டிக்கிட்டுப் பறக்கணும்?' என்று கேட்பது போலிருக்கும் அவர் சங்கீத பாணி. சாவகாசமாகப் பாடலின் ஒவ்வொரு சொல்லையும் அந்தச் சொல்லின் ஒவ்வொரு எழுத்தையும் அந்த எழுத்தின் ஒவ்வொரு அசைவையும் தனித்தனியே நாம் கேட்டு ரசிக்கும்படி பாடுவார்.

வயதுக்கேற்ற அனுபவத்துடனும் அதையொட்டிய நம்பிக்கையுடனும் அவர் கிருஷ்ண கான சபையில் பாடியபோது அமைதியான கம்பீரத்துடன் பாயும் ஒரு நதி தீரம் நம் முன் நின்றது. மெருகேறிய சாரீரம் ராக பாவங்களை அழுத்தமாகப் புலப்படுத்தியது. தானத்தில் சிறந்தது நிதானம் என்பது சங்கீத உபயத்துக்கும் பொருந்தும் என்று கருதுபவர்களுக்கு அவர் கச்சேரி பெருஞ் செல்வம்தான்.

உடன் பாடிய வேகவாஹினி தாயாரைத் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டிருந்ததில் தம்மைப் பற்றிய கவலையைச் சற்றுப் புலப்படுத்தினாலும் அவர் அச்சமின்றிப் பாடலாமே என்றுதான் நமக்குத் தோன்றியது. பாடுவதற்கு அவர் பயப்பட வேண்டியதே யில்லை; பாடியபடியே கச்சேரியை டேப் ரிகார்டரில் பதிவு செய்வதற்குத்தான் அஞ்ச வேண்டும்! ரொம்ப நாளுக்காக அதைச் செய்தார் என்றாலும் அது மேடைப் பண்பாகாது.

பிருந்தாவின் ரசிகர்கள் அவர் எப்போது ராகமாலிகை பாடப் போகிறார் என்று காத்துக்கொண்டிருப்பார்கள். அன்று அவரது வராளியும் நீலாம்பரியும் அப்படி காத்திருந்தவர்களுக்குக் கர்ணாமிர்தமாய் ஒலித்தது.


—குட்டி கிருஷ்ணன்



புதுமை குன்று
பொலிவுடன்
இருங்கள்
CINTHOL
LUXURY
TOILET POWDER
BY
சிந்தால் டாய்லெட் பவுடர் சங்கட
மான உடல் துர்நாற்றத்திலிருந்து
உங்களைப் பாதுகாத்து, அதி-
வெப்பமான தினத்திலும், நாள்
முழுவதும் உங்களைப் புத்துணர்ச்-
சியுடன் வைத்திருக்கிறது.
அதன் அருமையான நறுமணம்
உங்களை விட்டு அகலுவதில்லை.
கோத்ரெஜ் அளிக்கும்
சிந்தால்
Interpub/GSP/12/74 Tam



பெண்ணென்று சொன்னாலே பெருந்துன்பம் சில நாளில்; கம்ஃபிட் ஒன்றுதான் கவலையை மறக்கச் செய்யும். பத்துமடங்கு ஈரத்தைப் பாங்காக உறிஞ்சும்...மற்றவற்றைவிட ஐந்துமடங்கு அதிவிரைவில். மென்மையோ மென்மை...முன்னே முட்டி நிற்காது, பின்னால் களைந்தெறியும் தொல்லையில்லை—காரணம், நீரிலே கரைத்து விடலாம் நிம்மதியாக.
அதுவே கம்ஃபிட்!
கம்ஃபிட் சானிடரி டவல் கவலையை மறந்து களிப்புடன் இருக்கச் செய்யும்!



கிறிஸ்டியன் ஹோல்டன் (இந்தியா) லிட்., கோர்த்தாலிம், கோவா கம்பெனியின் தரமான தயாரிப்பு.

AIYARS-CH.4 TH

சிந்தனைப் பறவை சிறகடிக்கிறது!

மிகச் சாமானிய நிலையிலிருந்து முன்னுக்கு வந்து அரிய பெரிய சாதனைகளைப் புரிந்திருப்பவர்களைச் செயல் வீரர்கள் என்று சொல்வோம். ஆனால் ஒவ்வொரு செயல் வீரருக்கும் உள்ளே அருமையான சிந்தனையாளர் ஒருவர் இருப்பதை நாம் அவ்வளவாக எண்ணிப் பார்ப்பதில்லை. சிந்தனையில் மலரும் எண்ணங்கள் தாமே சாதனைகளாக உருப்பெறுகின்றன!

பொள்ளாச்சி திரு என். மகாலிங்கம் இதற்கும் ஒரு படி மேலே போகிறார். அவரால் சாதிக்க முடியாத அளவில் சிந்திக்கிறார்! அவர் சாதனைகள் விந்திய பர்வதம் என்றால் சிந்தனைகள் இமயத் தொடர்! அத்தனையும் நாட்டு நலனை, மக்கள் முன்னேற்றத்தைக் குறித்த யோசனைகள், எண்ணங்கள், கருத்துக்கள்!

* *Random thoughts* என்ற பெயரில் அவரது சிந்தனைகளின் தொகுப்பு, நூலாக வெளி வந்திருக்கிறது. மதுவிலக்கு, வேலையில்லாத் திண்டாட்டம், பொருளாதார சீர்குலைவு, கல்வித் தரம், நிர்வாக ஆற்றல் போன்ற பல அம்சங்களைப் பற்றி, அவற்றிலிருந்து கிளைக்கும் பல துணைப் பிரச்னைகள் பற்றி மகாலிங்கம் சிந்தித்து, தீர்வுகாண வழி முறைகளைச் சொல்கிறார். சிலவற்றில் நமக்குக் கருத்து வேறுபாடு இருக்கலாம். ஆனால் அவர் யதார்த்த நோக்கில் பிரச்னைகளை அலசுகிறார் என்பதையும் புதுமையான யோசனைகளைச் சொல்கிறார் என்பதையும் மறுப்பதற்கில்லை. அதனாலேயே மகாலிங்கத்தின் மனத்தை அறிந்து கொள்வதென்பது ஒரு சுவாரசியமான அநுபவமாகிறது.

அவருடைய உள்ளம் பாரதத்தின் இன்றைய நிலைமை குறித்து எவ்வளவு கவலையோடு சிந்தித்திருக்கிறது என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டாக அவர் சென்னைப் பல்கலைக் கழகத்தில் நிகழ்த்திய சொற்பொழிவைக் கூறலாம்.

லாலா லஜ்பத்ராய் நூற்றாண்டுச் சிறப்புப் பேருரைகளை இம்மாதம் 16, 17, 18 தேதிகளில் நடத்தினார். பொருள்: பத்தொன்பதாவது நூற்றாண்டில் நிலவிய அரசியல், பொருளாதார, சமூகச் சூழ்நிலைகள். அது பற்றிய ஆராய்ச்சியுரையாக அமையும் என்று எதிர்பார்த்துச் சென்றவர்களுக்கு மகாலிங்கத்தின் உரை நிகழ்காலத்தை மறவாத வகையில் அமைந்திருந்தது வியப்புக் கலந்த மனநிறைவை அளித்தது. காந்தி மகான் காலத்திய நிலையையும் அவருக்குப் பிற்பட்ட சுதந்திர பாரதத்தில் நேருவின் ஆட்சியிலும் இந்திரா ஆட்சியிலும் ஏற்பட்ட பொருளாதாரச் சீர்கேடுகளையும் எடுத்துக் கூறி, காந்திய நெறியைப் பின்பற்றியிருந்தால் இவ்வளவு சீர்கேடு ஏற்பட்டிருக்காது என்பதை மிகத்தெளிவாக விளக்கினார்.




ஆலையில் நெய்யப்படும் மில் துணிகள் அவ்வளவையும் வெளி மார்க்கெட்டுக்கு ஒதுக்கிவிட்டு, உள்நாட்டில் பெரும் பணக்காரர் முதல் பரம ஏழை வரையில் உடுத்தக் கைத்தறித் துணிதான் உண்டு என்ற நிலையை ஏற்படுத்தினால் உள்நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் பெரும் பகுதி நீக்க முடியும் என்றார். அதே சமயம் ஏராளமான அந்நியச் செலாவணியையும் சம்பாதிக்கலாம் என்றார்.

நம் நாட்டில் உற்பத்தியாகும் வெள்ளைச் சர்க்கரைக்கு வெளிநாட்டில் நல்ல மார்க்கெட் இருக்கிறது. ஆகவே இந்த ஆலைச் சர்க்கரை முழுவதையும் வெளிநாடுகளுக்கு அனுப்பி அந்நியச் செலாவணியை ஏராளமாகச் சம்பாதிக்கலாம். உள்நாட்டுத் தேவைகளுக்கு வெல்லத்தையும் கண்டசேரி சர்க்கரையையும் உபயோகிக்கலாம் என்றார். இதுபோன்று மகாலிங்கத்தின் மனத் தோட்டத்தில் பூக்கிற சிந்தனை மலர்கள் எத்தனை எத்தனையோ!

நமது பொருளாதாரச் சீர்குலைவு மிகப் பயங்கரமாக இருக்கிறது. இதைச் சீர்படுத்த வேண்டுமானால் திரு மகாலிங்கம் சொல்கிற யோசனைகளே இல்லாவிட்டாலும் அவை போன்ற சில துணிகர முடிவுகளைக் காலா காலத்தில் எடுத்தால்தான் நாடு நலமுறும்.

- எஸ். வி. எஸ்.



---

* கிடைக்குமிடம்:
ஹிகின்பாதம்ஸ், சென்னை.
விலை ரூ. 8-00.



மொழியின் குரல்வளை

பி. வி. ஆர்.

தமிழர்களுக்கு உள்ள ஆங்கில மொழி அறிவு, அந்தப் பாஷையில் பேசுகிற சாமர்த்தியம் வேறு எந்த மாநிலத்தாருக்கும் கிடையாது என்று சொல்லுவதுண்டு.

தற்போது தமிழ்நாட்டில் ஆங்கிலமொழி பகிரங்கமாகக் கொலை செய்யப்படுகிறது. பள்ளிகளிலிருந்து சர்வகலாசாலைக் கூடங்கள் வரை, எல்லா இடங்களிலும் ஆங்கில மொழியின் கழுத்தை நெரித்துக் கொல்லுகிறார்கள்.

போன ஏப்ரல் அல்லது மே மாதம் கல்லூரி மாணவர்கள்இருவர் பஸ்ஸில்பேசிக் கொண்டு வந்தார்கள்.

''நான் எழுதினதுதான் Correct!''

''No நீ Correct இல்லே.''

''என்ன Bet?''

''I will treat you!''

''O K. If I loose I will treat you!''

இந்த ''I will treat you!'' என்ற வாக்கியம் மூன்று நான்கு தடவைகள் என் காதை அறுத்தன. 'Correct' என்கிற ஆங்கில வார்த்தையை எந்த இடத்தில் எப்படி உபயோகிக்க வேண்டும் என்று தெரியாமலிருந்த மாணவர்களைக் கண்டு அநுதாபம்தான் பிறந்தது.

ஒரு காலத்தில் மேல் நாட்டுப் பழக்க வழக்கங்களைமேற்கொள்ளுவது ஒரு நாகரிகமாக இருந்தது. சமூகத்தில் ஓர் அந்தஸ்தை ஏற்படுத்திக் கொடுப்பதாக இருந்தது. இப்போது இந்தியாவே ஒரு 'மேனா'டாகிவிட்ட நிலையில், மேனாட்டு மொழியான ஆங்கிலத்தைப் பற்றி நாம் பேசாமல் இருக்க முடியாது. வெள்ளைக்காரன் கொடுத்துவிட்டுப் போன பல சொத்துக்களில் ஆங்கில மொழி மாபெரும் சொத்து. ஒரு ஷேக்ஸ்பியரையும், மில்டனையும், ஒரு சர்ச்சிலையும் ஷாவையும் நமக்கு அந்யோன்யமாகத் தெரியப் படுத்திய மொழி. காந்திஜியும் ராஜாஜியும் நேருவும் எழுதிப் பேசி உலகத்தையே ஆட்கொள்ளக் காரணமாக இருந்த மொழி. இந்த மொழியைத் தங்களுடைய பேச்சுக்களிலும், எழுத்துக்களிலும் சித்திரவதை செய்பவர்களை எப்படி மன்னிப்பது?

ஒரு பணக்கார வியாபாரி ஆங்கில வார்த்தைகளை உபயோகிக்க ஆசைப்படுவார். அவர் நாலாவது வகுப்புக்கு மேலே படிக்கவில்லை.

அவர் ஒருநாள் ஆறு வயது பேரப் பிள்ளையிடம் சொன்னார்:

''முருகா! Plantainஐத் துன்னுட்டு. Leatherஐ வெளியே போடு.''

இதற்கு அர்த்தம் பழத்தைத் தின்றுவிட்டுத் தோலை எறிந்துவிடு!

நம் நாட்டில்தான் இங்கிலீஷை இப்படிச் சின்னா பின்னப்படுத்துகிறார்கள் என்று நாம் பெருமைப்பட்டுக் கொள்ள வேண்டாம். பெர்னார்ட்ஷாவே ஆங்கில மொழி எவ்வளவு மட்டமாக இங்கிலாந்திலேயே பேசப்படுகிறது என்பதை ஒரு புத்தகத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

அமெரிக்கர்கள் ஆங்கில மொழிக்காகத் தங்களை வளைத்துக் கொள்ளவில்லை. தங்கள் சௌகரியத்துக்காக மொழியை வளைத்துக்கொண்டார்கள். எளிமையான நடை போலவே, வார்த்தைகளின் உச்சரிப்புக்களும் எளிமையாக இருக்க வேண்டும் என்று நினைத்தார்கள். ஆனால் அங்கேயும் ஆங்கிலம் கொலை செய்யப்படுகிறது. ஓர் உதாரணம் [எங்கேயோ எப்போதோ படித்தது:]

ஒரு சிறந்த ஆட்டக்காரனுக்கு ஒரு கல்லூரியில் இடம் கொடுக்க மறுத்து விட்டார் பிரின்ஸிபால். கல்லூரி மாணவர்கள் அவரை முற்றுகையிட்டுக் கெஞ்சினார்கள். அவனில்லாவிட்டால் வெற்றிக் கோப்பைகள் வராது என்று மன்றாடினார்கள். ஒரு சிறு பரீட்சையில் அவன் தேறினால் ஏற்றுக் கொள்வதாக முதல்வர் சொல்லிப் பரீட்சை நடத்தினார். அதாவது Coffee என்கிற வார்த்தையில் உள்ள எழுத்துக்களைச் சரியாகச் சொல்ல வேண்டும். ஓர் எழுத்து சரியாகச் சொன்னால்கூடப் போதும்!



'K' என்று ஆரம்பித்தான் ஆட்டக்காரன். கூடியிருந்தவர்கள் மண்டையில் அடித்துக்கொண்டார்கள். 'A' என்றுதொடர்ந்தான் அவன். யார் முகத்திலும் ஈயாடவில்லை. பிறகு மெதுவாக 'U' என்றான்!

Coffeeயில், Kau வந்தாகிவிட்டது. அடுத்த எழுத்து?


திடீரென்று ஆட்டக்காரனுக்குப் பௌதிக ஞானம் வந்தது. 'Physics' என்கிற வார்த்தையில் இருக்கும் 'Ph'ன் உச்சரிப்பு நினைவுக்கு வந்தது.

Kauph...

எல்லோரும் கண்களை மூடிக் கொண்டு தியானம் செய்தார்கள். இன்னும் ஓர் எழுத்து இருக்கிறது. அந்த எழுத்தாவது Coffeeல் இருக்கிற ஓர் எழுத்தாக இருக்க வேண்டுமே என்று!

ஆட்டக்காரன் மூச்சைப் பிடித்துக் கொண்டு முடித்தான்: Kauphi!





தலைவலியா?

சக்தி வாய்ந்த, நம்பகமான அனஸின் விரைவில் குணமளிக்கிறது



"தலைவலியைப் போக்க நான் எப்பொழுதும் அனஸின் சாப்பிடுகிறேன்" என்கிறார், பம்பாயிலுள்ள ஒரு கப்பல் கம்பெனி அதிகாரி திரு. பரமசிவம்.

சக்தி வாய்ந்தது— ஏனெனில், உலகெங்கும் டாக்டர்கள் மிக அதிகமாக சிபாரிசு செய்யும் வலி நிவாரணியை அதிக அளவில் கொண்டது அனஸின். ஆகையால்தான் அனஸின் வலியிலிருந்து விரைவிலேயே நிவாரணமளிக்கிறது.


நம்பகமானது— திரு. பரமசிவம் போன்ற லட்சக்கணக்கானவர்கள் அனஸினை நம்புகிறார்கள். டாக்டரின் நம்பகமான மருந்தைப்போல பல மருந்துகளின் கலவையே அனஸின்.

ஜலதோஷம் மற்றும் ஃப்ளூவினால் ஏற்படும் வலிகள் மற்றும் நோவுகள், தலைவலி, முதுகுவலி, தசைவலி, பல்வலி ஆகியவற்றுக்கு அனஸின் சக்திவாய்ந்த நிவாரணி.

சக்தி வாய்ந்த, நம்பகமான

அனஸின்

இந்தியாவின் புகழ் பெற்ற வலி-நிவாரணி



Regd. User of TM : Geoffrey Manners & Co. Ltd.

திருடர்கள்

ர.சு.நல்லபெருமாள்





13. வரிப் பணம் பறி போகிறது!

மத்திய அரசின் ஊழியர்கள் தங்களுடைய வியாதிகளையோ அல்லது தங்கள் மனைவி குழந்தைகள் ஆகியோரின் வியாதிகளையோ போக்கிக் கொள்ள டாக்டருக்கும், மருந்துக்கும் செலவழிக்கும் தொகையை அரசிடமிருந்தே பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு உண்டு. சில ஊழியர்கள் வீட்டுக்கு வேண்டிய மேஜை நாற்காலிகள், சுவர்க் கடிகாரம், டிரான்ஸிஸ்டர் ரேடியோ, ஹார்லிக்ஸ், — ஓவல்டின் போன்றவைகளை வாங்கிக் கொண்டு அந்தத் தொகைக்கு மருந்து பில்லைத் தயாரித்துப் பணத்தை அரசிடமிருந்து பெற்றுக் கொள்வதும் உண்டு. இந்த வசதிக்காகச் சில மருந்துக் கடைக்காரர்கள், பர்னிச்சர் கடைகளையும், ரேடியோக் கடைகளையும் சேர்த்தே நடத்தி வந்தார்கள். கடிகாரத்தையோ, நாற்காலியையோ விற்று விட்டு அந்தத் தொகைக்குச் சமமாக, ஃபெரடால், பிகோஸுல், ஸஸ்டஜன், பிஜிஃபாஸ், நியூரோபயான் என்று, விலை உயர்ந்த மருந்துகள், டானிக்குகள் ஆகியவற்றின் பெயர்களை எழுதிப் பில் கொடுத்துவிடுவார்கள். அந்தப் பில்லை அரசால் அங்கீகரிக்கப்பட்ட டாக்டரிடம் கொண்டு போய்க் கொடுத்தால் அவர், அந்த மருந்துகளுக்கும் டானிக்குகளுக்கும் ஏற்ற வியாதியை எழுதிக் கையெழுத்தும் போட்டுக் கொடுத்துவிடுவார். அதாவது, அந்த வியாதி அந்த ஊழியருக்கு வந்தது, அதற்காக அந்த மருந்துகளும், டானிக்குகளும் டாக்டரின் யோசனையின் பேரில் வாங்கப்பட்டன என்று அர்த்தம். இந்தப் பணிக்காக டாக்டருக்கு மத்திய அரசாங்கம், பதினைந்து ரூபாய் வரை கொடுக்கும்.

டாக்டர் ராஜகோபால் இந்த வியாபாரத்தில் சிறந்த நிபுணராகிவிட்டார். அவரிடம் சராசரி மாதம் இருபது ஊழியர்களாவது வருவார்கள். ஓர் ஊழியர், ஒரு வியாதிக்கு நான்கு முறை கன்ஸல்டேஷனுக்கு டாக்டரிடம் போகலாம். முதல் கன்ஸல்டேஷனுக்கு ஃபீஸ், ஐந்து ரூபாய். பின்னுள்ள கன்ஸல்டேஷன் ஒவ்வொன்றுக்கும் மூன்று ரூபாய். ஆகவே, ஓர் ஊழியரின் ஒரு வியாதிக்கான கன்ஸல்டேஷன்களுக்குப் பதினான்கு ரூபாய் விதம் கிடைக்கும். ஆனால் ஓர் ஊழியருக்கு ஒரு வியாதி மட்டும்தான் வரும் என்பதில்லை. பல வியாதிகள் வரும். அத்தனை வியாதிகளுக்கும் அத்தனை தனித் தனி கன்ஸல்டேஷன்கள். ஊழியரின் மனைவிக்கோ அல்லது குழந்தைகளுக்கோ வரும் வியாதிகளுக்கும் தனித் தனி கன்ஸல்டேஷன்கள். மத்திய அரசாங்க ஊழியர்கள் ரேடியோவை வாங்கினால் என்ன, சுவர்க் கடிகாரம் வாங்கினால் என்ன? ராஜகோபாலுக்குக் கன்ஸல்டேஷன் பீஸ் வந்தால் சரிதான். அந்த வகையில் ராஜகோபால் ஏராளமாய்ப் பணம் சம்பாதித்து வந்தார்.

ஒரு மாதத்தில் குறைந்தது இருபது மத்திய அரசு ஊழியர்களாவது வருவார்கள். ஓர் ஊழியருக்குக் குறைந்தது இரண்டு வியாதிகளுக்கான கன்ஸல்டேஷன்கள் நடைபெறும். அந்த ஊழியரின் மனைவிக்கு, குழந்தைக்கு என்று சில கன்ஸல்டேஷன்கள். இப்படி எல்லோருக்கும் உடம்புக்கு வந்ததாகக் காட்டினால்தான் அந்த அரசு ஊழியர் ரேடியோவோ, சுவர்க்கடிகாரமோ வாங்க இயலும். ஒரு வியாதிக்கான கன்ஸல்டேஷன்களுக்கு அதிகபட்சம் பதினான்கு ரூபாய் பெறலாம். ஒரு குடும்பத்திலுள்ள நாலைந்து பேர்களிடமிருந்து எழுபது ரூபாய் கிடைக்க வழி உண்டு. அப்படியானால் இருபது அரசு ஊழியர்கள் தயாரிக்கும் வியாதிகளுக்கு 1400 ரூபாய் பெற முடியும். அத்தனையும் மக்கள் கொடுக்கும் வரிப் பணம். இதில், ஊசி போடுவதற்கான பீஸ் சேர்க்கப்படவில்லை. அதையும் சேர்த்துக் கொண்டால் ராஜகோபாலின் வருமானக் கணக்கு இன்னும் கூடும். ஒரு வியாதிக்கு ஆறு ஊசிகள் போடலாம். ஓர் ஊசி குத்த, இரண்டு ரூபாய் ஃபீஸ். ஒரு குடும்பத்தில் ஐந்து கன்ஸல்டேஷன்கள் நடந்தால் ஊசி குத்த அறுபது ரூபாய். இருபது ஊழியர்களுக்கு என்ன கிடைக்கும் என்று கணக்குப் போட்டுக் கொள்ளுங்கள்! அவருடைய மாதச் சம்பளத்தைக் கொண்டு, அவர் கார், ரேடியோகிராம், பிரிஜிடேர், டேப் ரிகார்டர், காமிராக்கள், இன்னும் அவருடைய வீட்டில் தென்படும் பகட்டான படாடோபப் பொருள்கள் ஆகியவைகளை நிச்சயமாக வாங்கியிருக்க முடியாது. பொதுவாக, டாக்டர்களுடைய திறமை, எந்த வியாதிக்கு எந்த மருந்தைக்

கொடுக்க வேண்டும் என்னும் அறிவுதான். ராஜகோபாலின் திறமையோ எந்த மருந்துக்கு எந்த வியாதி என்பதைக் கண்டுபிடிப்பதுதான்.

அன்று மாலை நான்கு மணிக்கு ராஜகோபால் தம்முடைய கிளினிக்கில் மேஜை மீதிருந்த மருந்துக் கடை பில்லில் எழுதப்பட்டிருந்த மருந்துகளுக்குப் பொருத்தமான வியாதிகள் எவை என்பதைச் சிந்தித்துக் கொண்டிருந்த போது, அவரைப் பார்க்கக் கருணாகரன் வந்தார். கருணாகரனைக் கண்டதும், மேஜையின் மீதிருந்த தாள்களை மேஜை இழுப்பறைக்குள் தள்ளினார் ராஜகோபால்.

''டாக்டர், இன்று மத்தியானம் கார் விபத்தில் அடிபட்ட பையன், ஆஸ்பத்திரிக்கு வந்திருப்பானே, எப்படி இருக்கிறது?'' என்று கேட்டுக் கொண்டே நாற்காலியில் அமர்ந்தார் கருணாகரன்.

''கஜேந்திரா மில் ராகவனுடைய கார், வண்டியில் மோதிய விபத்துத்தானே?.... முதுகுத் தண்டில் பலத்த அடி'' என்றார் ராஜகோபால்.

''பிழைப்பானா, போய்விடுவானா?''

''பிழைக்கலாம். ஆனால் ஒன்றுக்கும் பயன் படமாட்டான்'' என்று ராஜகோபால் கூறியதும் கருணாகரனின் முகம் சந்தோஷத்தால் மலர்ந்தது.

''அப்படி என்றால் பலத்த அடியோ?'' என்று கேட்டார்.

''தலையிலும் பலத்த அடி விழுந்து மூளையைத் தாக்கி யிருக்கிறது. கையும் காலும் விளங்காமல் போய் விடலாம். இன்னும் மயக்கம் தெளிய வில்லை'' என்றார் ராஜகோபால்.

''உயிர் போய்விடாதே!''

''இன்னும் நாற்பத்தெட்டு மணி நேரத்துக்கு எதையும் நிச்சயமாகச் சொல்ல முடியாது. பிழைத்துக் கொள்வான் என்றுதான் நம்புகிறேன்.''

'' எப்படியாவது பிழைக்க வைத்து விடுங்கள், டாக்டர்!''

''இன்றைக்கு நான் கோர்ட்டுக்கு வர வேண்டாம் என்று சொல்லி அனுப்பிவிட்டீர்களே, ஏன்?'' என்று கேட்டார் ராஜகோபால்.

''உங்களைத் திங்கட்கிழமை விசாரிப்பதாக முடிவு செய்தோம்'' என்றார் கருணாகரன்.

''ஏன், கூடிப் போனால், பதினைந்து நிமிஷங்கள் ஆகும்.''

''சொல்ல முடியாது. ஆவுடையப்பபிள்ளை குறுக்கு விசாரணையை ஆரம்பித்தால், இலேசில் முடியாது.''

''ஆமாம் சார்! அவரிடம் வேறு ஒரு வழக்கில் நான் மாட்டிக் கொண்டு திணறிப் போனேன். வைத்தியத் துறையில் எனக்குத் தெரியாத விஷயங்களை யெல்லாம் அவர் தெரிந்து வைத்திருக்கிறார், சார்! அவரைக் கண்டாலே எனக்குப் பயந்தான்'' என்றார் ராஜகோபால்.

''மத்தியானம் கேஸ் நடக்கவில்லை. பாதியில் விட்டு விட்டு ஜட்ஜ் போய்விட்டார்.''

'' ஏன் சார்?''





''இப்போதிருக்கிற ஜட்ஜ். ஒரு கிறுக்கு.''

''கெட்டிக்காரர் என்கிறீர்களே, இவரைப் போன்ற திறமை உள்ளவர்கள் அபூர்வம் என்றல்லவா பேசிக் கொள்கிறார்கள்?''

''என்ன திறமை? ஜட்ஜுக்கு ஒரு திறமையும் வேண்டாம். நாங்கள் சொல்வதைக் கேட்டு, எதையாவது எழுதி வைத்தால் போதும். சட்ட ஞானத்தில் மட்டும் மேதாவியாக இருந்தால் போதுமா? இன்று பாருங்களேன், வழக்கைப் பாதியில் நிறுத்திவிட்டு வீட்டுக்குப் போய்விட்டார்.''

''ஏனோ ?''

'' வீட்டிலிருந்து போன் வந்ததாம். வீட்டில் ஏதோ விருந்தாம்.''

''வயதான காலத்தில் இரண்டாம் கல்யாணம் செய்திருக்கிறார். பாவம் என்ன அவசரமோ?''

'' சுத்தக் கிறுக்கு.''

''கிழட்டு வயதில் சிறு பெண்ணை மணந்தாலே இந்த மாதிரி கிறுக்குத்தனம் வரத்தான் செய்யும். அவருடைய மனைவி கதை எழுதுகிறாளாமே?''

'' என்ன பிரமாதமாய் எழுதுகிறாள் ? பார்ப்பதற்கு அழகாயிருக்கிறாள்.''

''துணிச்சல்காரிதான் சார். நியூவேவ் கதைகளை அல்லவா எழுதுகிறாள் !''

'' ஏன் எழுதமாட்டாள் ? கிழவனுக்கு வாழ்க்கைப்பட்டு விட்டால், நியூவேவ்களைப் பற்றி எழுதித்தான் திருப்தி பெற வேண்டும்'' என்றார் கருணாகரன் கோணலான புன்னகையுடன். ராஜகோபால் கலகலவென்று ஆபாசமாகச் சிரித்தார்.

''இங்கட்கிழமையாவது என்னை விசாரித்து முடித்து விடுவார்களா?'' என்று ராஜகோபால் கேட்டார்.

'' ஓ.... கட்டாயம் இங்கட்கிழமை முடித்துவிடலாம். நீங்கள் உங்கள் ரிப்போர்ட்டைப் படித்துவிட்டீர்களா?'' — கருணாகரன் கேட்டார்.

''பப்ளிக் பிராஸிக்யூட்டர், ஒரு நகல் அனுப்பியிருந்தார். படித்துவிட்டேன்.''

''உங்களுடைய சாட்சியத்தைப் பொறுத்துத்தான் இந்த வழக்கே இருக்கிறது '' என்று குழைந்தபடி கூறிச் சிரித்தார் கருணாகரன்.

''நான் சோதனை செய்து எழுதிய குறிப்புப்படி சொல்லிவிடுகிறேன்'' என்றார் ராஜகோபால்.

''இது விஷயமாகக் கட்சியின் மாவட்டச் செயலாளர் உங்களைப் பார்த்தாராமே?''

''தேன்மொழியனா ? நேற்று வந்தார். பப்ளிக் பிராசிக்யூட்டருக்குத் தகுந்தபடி சாட்சி சொல்லச் சொன்னார். அதெப்படி சார் முடியும்? நான் ஒரு சர்க்கார் சேவகன். நான் எழுதிய குறிப்பில் இல்லாததை எப்படிச் சொல்ல முடியும்?''

''குறிப்பில் இல்லாததைச் சொல்ல வேண்டாம். குறிப்பில் உள்ளதை வைத்துக் கொண்டே, உங்களுடைய அபிப்பிராயத்தைச் சொல்லலாமே?''

''அது சொல்லலாம்.''

''அவ்வளவு போதும்.''

'' என்னுடைய அபிப்பிராயம் என்றால் எப்படிச் சொல்ல வேண்டும் என்று எதிர்பார்க்கிறீர்கள்?'' — ராஜகோபால், சந்தேகத்தோடு கேட்டார்.

''டாக்டர், இது கற்பழிப்பு வழக்கு. அந்தப் பெண்ணை அவன் கற்பழித்திருக்கிறான் என்பதை நீங்கள் கூறினால் போதும்.'' இப்படிக் கருணாகரன் சொன்னவுடன் ராஜகோபால் குறுக்கிட்டு, ''அதெப்படி சார், நான் சொல்ல முடியும்?'' என்று கேட்டார்.

''ஏன் சார், முடியாது ? அந்தப் பெண்ணுக்கு ஓர் ஆணோடு தொடர்பு இருந்தது என்பது சோதனையில் நிரூபணமாகிவிட்டது அல்லவா ?''

''அது வாஸ்தவம்தான். ஆனால் 'இந்தப் பையனுக்கும் அந்தப் பெண்ணுக்கும்தான் தொடர்பிருந்தது' என்று எப்படி உறுதியாகக் கூற முடியும்?''

'' டாக்டர்! இந்த வழக்கே அந்தப் பெண்ணை அவன் கற்பழித்துவிட்டான் என்பதுதான்'' என்றார் கருணாகரன் எரிச்சலுடன்!

''இருக்கலாம். ஆனால்....''

''அந்தத் தொடர்பு பலாத்காரத்தினால் ஏற்பட்ட தொடர்பாயிருக்கலாம் அல்லவா?''

''அப்படித் தோன்றவில்லையே !''

''பின்னே ?'' — கருணாகரன் கோபத்தோடு கேட்டார்.

''பலாத்காரத் தொடர்புக்கான அறிகுறி எதும் இல்லையே !''

''டாக்டர்! நீங்கள் சொல்வதைப் பார்த்தால் அந்தப் பெண்ணும், அந்தப் பையனும் காதல் கொண்டு உறவாடினார்கள் என்று கூடச் சொல்லிவிடுவீர்கள் போலிருக்கிறதே!'' என்றார் கருணாகரன். டாக்டர் ராஜகோபால் சிரித்தார்.

''எப்படி உறவாடினார்களோ, எனக்குத் தெரியாது. ஆனால், பலாத்காரத்துக்கான அறிகுறி ஏதும் இல்லை. எதிர்ப்பு இருந்து பலாத்காரம் நடைபெற்றிருந்தால், பெண்ணினுடைய உடலில் காயங்கள், சிராய்ப்புகள் இருக்க வேண்டும். பெண் எதிர்த்துப் பிறாண்டியிருந்தால், ஆணின் முகத்திலோ,

உடலிலோ நகக் குறிகள் இருக்க வேண்டும். எதுவுமே இல்லை.''

''உங்கள் முடிவுதான் என்ன டாக்டர்?''— எரிச்சலோடு கேட்டார் கருணாகரன்.

''அந்தப் பெண்ணுக்கு ஓர் ஆணோடு உடல் உறவு இருந்திருக்கிறது. லாபரட்டரி டெஸ்டும் அதை உறுதிப்படுத்துகிறது. அவ்வளவு தான்'' என்று கூறிவிட்டுக் கருணாகரனை உற்றுப் பார்த்தார் ராஜகோபால். கருணாகரன் சிரித்தார்.

''டாக்டர்! இந்த வழக்கில் நீங்கள் எங்களுக்கு உதவி செய்தால், உங்களுக்கு நன்மை உண்டு. தேன்மொழியன் உங்களுக்காக எந்த உதவியையும் செய்யத் தயாராயிருக்கிறார்'' என்றார் கருணாகரன்.

''நான்தான் சொல்லிவிட்டேனே, என்னுடைய பரிசோதனைக் குறிப்புப்படி நான் சாட்சி சொல்லிவிடுகிறேன் என்று.''

''டாக்டர்! இதில் ஆளும்கட்சியே அக்கறை கொண்டிருக்கிறது'' என்றார் கருணாகரன்.

ராஜகோபால் யோசனையில் ஆழ்ந்தார். அவருடைய பயமெல்லாம் கருணாகரனைப் பற்றித்தான். புரட்சிக் கட்சிக்காரர்களைப் பற்றி டாக்டர் ராஜகோபாலுக்கு நன்கு தெரியும். எந்தச் சமயத்திலும் காலை வாரி விட்டுவிடுவார்கள் என்பதை அவரே தம்முடைய அனுபவத்திலிருந்து அறிந்திருக்கிறார். ஒரு சமயம் கருணாகரனே ஒரு நபருக்காக 'டாக்டர் சர்டிபிகேட்'டுக்கு அவரிடம் சிபாரிசு செய்தார். ராஜகோபாலும் பணத்துக்கு ஆசைப்பட்டுச் சர்டிபிகேட் கொடுத்து விட்டார். மறு வாரம் கருணாகரனின் தலைமையில் நடைபெற்ற புரட்சிக் கட்சியின் பொதுக் கூட்டத்தில், ஒரு புரட்சிக் கட்சிக்காரன் டாக்டர் ராஜகோபாலையே தாக்கிப் பேசினான்: ''பணத்துக்காகப் பொய் சர்டிபிகேட் கொடுப்பவர்'' என்றும், ''பாட்டாளிகளின் இரத்தத்தை உறிஞ்சும் முதலாளி வர்க்கத்தைச் சேர்ந்தவர்'' என்றும் ஏசினான். இந்த விவரம் தெரிந்து ராஜகோபால் கோபத்தோடு கருணாகரனைப் பார்க்கச் சென்றிருந்த போது, ''அந்த முட்டாள் ஏதோ உளறியிருக்கிறான். நான் நேற்றே அவனைக் கண்டித்து விட்டேன்'' என்று சமாதானம் சொன்னார் கருணாகரன். ஆனால் உண்மையில் கருணாகரனின் தூண்டுதலின் பேரில்தான் அந்தப் புரட்சிக் கட்சிக்காரன் அவ்விதம் பேசினான் என்பதை டாக்டர் புரிந்து கொண்டார். புரட்சிக்காரர்களிடம் பழகுவது, பாம்போடு பழகுவது மாதிரி என்பதைப் புரிந்து கொண்ட ராஜகோபால் இப்போது கருணாகரனின் ஆசை வார்த்தைகளில் மயங்கவில்லை.

''டாக்டர்! இதில் நீங்கள் பயப்பட ஒன்றுமே இல்லை. பிராஸிக்யூஷன் பக்கமாக உங்கள் அபிப்பிராயத்தைச் சொன்னாலே போதும்'' என்றார் கருணாகரன்.

''சார்! இதில் என்னைக் கட்டாயப்படுத்தாதீர்கள். ரிப்போர்ட்டில் உள்ளபடியே ஒரு வார்த்தைகூடக் கூட்டிக் குறைக்காமல் சொல்லிவிட வேண்டும், அவ்வளவுதான். ஓர் அரசாங்க ஊழியன் என்கிற முறையில் நான் அதைத்தான் செய்ய முடியும்'' என்று கூறி எழுந்தார் ராஜகோபால்.

கருணாகரனுக்கு உள்ளூறக் கோபம் எழுந்தது. வெளிக் காட்டிக் கொள்ளாமல் எழுந்தார். ''சரி, உங்கள் இஷ்டம்'' என்று கூறிவிட்டுத் தம்முடைய காரை நோக்கி நடந்தார். கார்க் கதவைத் திறந்து உள்ளே உட்கார்ந்து சாத்திக்கொண்ட விதமே அவருடைய கோபத்தை வெளிக் காட்டியது.

தமக்குப் பிடிக்காதவர்களுக்கும், தம்முடைய விரோதிகளுக்கும் கருணாகரன் எவ்விதம் கெடுதி விளைவிப்பார் என்பது ராஜகோபாலுக்கு நன்கு தெரியும் — ஏதாவது ஓர் அரசியல் போராட்டத்தைக் காரணமாக வைத்துக் கொண்டு புரட்சிக் கட்சிக்காரர்களின் ஊர்வலத்துக்கு ஏற்பாடு செய்வார் கருணாகரன். ஊர்வலத்தில் கட்சியைச் சேர்ந்த சில ரௌடிகளும் இருப்பார்கள். கருணாகரனுக்கு வேண்டாதவரின் வீட்டுப் பக்கமோ அல்லது வியாபார ஸ்தலத்தின் பக்கமோ ஊர்வலம் வரும்போது, வேண்டும் என்றே ஊர்வலத்தில் ரௌடிகள், குழப்பத்தை விளைவிப்பார்கள். குழப்பம் ஏற்பட்டிருக்கும் சமயத்தில் எதிரியின் மீதோ — எதிரி அகப்படவில்லை என்றால், எதிரியின் கட்டடத்தின் மீதோ கற்களையும், பெட்ரோலில் நனைக்கப்பட்ட தீப் பந்தங்களையும் வீசிச் சேதப்படுத்தி விடுவார்கள்.

கருணாகரனைப் பற்றி ராஜகோபால் நன்கு தெரிந்து வைத்திருந்ததால், அவருக்குக் கொஞ்சம் பயம் தோன்றியது. (தொடரும்)


பவுடரினால் துலக்கிய
இடத்திலே கீறல்
விழுந்ததுதான் மிச்சமா?
மாசில்லாத பளபளப்பை வீசிட
வைப்பது விம்.
Vim
கசடு இல்லை!
பிசுக்கு இல்லை!
கீறல் இல்லை!

மகாத்மாவின் உபவாசங்கள்



மகாத்மா காந்தியடிகள் தம் வாழ்நாட்களில் அநேக உபவாசம் இருந்திருக்கிறார். நாட்டின் நலனுக்காகவும் மக்களின் முன்னேற்றத்துக்காகவுமே உபவாசம் இருந்திருக்கிறார். ஆத்மீகத் தூண்டுதல் ஏற்படும் பொழுதெல்லாம் உபவாசம் இருந்திருக்கிறார்.

உபவாசத்தைப் பற்றிய காந்திஜியின் கருத்து :

''சொந்த லாபத்துக்காக உபவாசம் இருக்கக் கூடாது. அது பிறரைப் பய முறுத்துவதற்கு ஒப்பாகும். என்னிடம் யார் யார் அன்பு கொள்கிறார்களோ, அவர்களைச் சீர்திருத்தவே நான் உபவாசம் இருந்து வருகிறேன்.''

மகாத்மா காந்திஜியின் உபவாசங்களாவன :

14– 4–1919	3 நாட்கள்	முதல் உபவாசம். அஹமதாபாத் ஆலைத் தொழிலாளர்களின் சம்பள உயர்வுக்காக.
– 9–1921	5 நாட்கள்	வேல்ஸ் இளவரசரின் இந்திய விஜயத்தை எதிர்த்து மக்கள் செய்த கலவரம் அடங்க.
8– 2–1921	5 நாட்கள்	தம்மைத் தாமே தூய்மை செய்து கொள்வதற்காக.
18– 9–1924	21 நாட்கள்	ஹிந்து முஸ்லிம் சகோதரத்துவம் ஏற்பட.
–11–1925	5 நாட்கள்	ஆத்மீகத் தூண்டுதலின் பேரில்.
20– 9–1932	6 நாட்கள்	ஏர்வாடா சிறையில் — ஹிந்துக்கள் — ஹரிஜனங்கள் ஒற்றுமைக்காக — தீண்டாமை விலக.
8– 5–1933	21 நாட்கள்	ஆத்மீகத் தூய்மை கொள்ள.
16– 8–1933	8 நாட்கள்	பூனா சிறையில்.
– 7–1934	7 நாட்கள்	ஹரிஜன இயக்கத்துக்கு விரோதமாக நடந்த செயல்களின் பிராயச்சித்தத்துக்காக.
– 3–1939		ராஜ்கோட் மக்களின் பிரஜா உரிமைக்காக.
10– 2–1943	21 நாட்கள்	ஆயுட்காலமெல்லாம் அஹிம்சைக்காகவே காந்திஜி பாடுபட்டிருக்க நாட்டில் நடந்த கலவரத்துக்குக் காந்தியே பொறுப்பாளி என்று லின்லித்கோ பிரபு கூறினார். அதைக் கேட்டு வேதனையுற்றார் காந்தி அடிகள். அவ்வேதனைக்குச் சாந்தி வேண்டுமென உபவாசம்.
15– 8–1947	1 நாள்	சுதந்திர நாள்—கல்கத்தாவில் நடந்த கலவரங்களை அடக்க.
1– 9–1947	3 நாட்கள்	கல்கத்தாவுக்கு நல்ல அறிவு திரும்ப வேண்டுமென.
13– 1–1948	6 நாட்கள்	இதுவே மகாத்மாவின் கடைசி உபவாஸம்: தில்லியில் ஒரு மதத்தினர் மற்ற மதத்தினரைக் கொடுமைப்படுத்துவதை நிறுத்த.


மகாத்மாவின் உபவாசத்துக்கான விதிகள்:

1. முதலிலிருந்தே மன ஆற்றலைச் சேமித்து வையுங்கள். 2. உபவாச காலத்தில் உபவாசத்தை மறந்து வேறு எதையாவது பற்றிச் சிந்தித்துக் கொண்டிருங்கள். 3. முக்கியமாக உணவைப்பற்றி நினைக்காதீர்கள். 4. தண்ணீரை நிறையக் குடியுங்கள். 5. காலை இளம் காற்றை அவசியம் பெற வேண்டும். 6. வெதுவெதுப்பான நீரில் ஒத்தடம் கொடுத்துக் கொள்ளுங்கள். 7. திறந்தவெளியிலேயே தூங்குங்கள். 8. ஆண்டவனைப் பற்றி நிறைய சிந்தியுங்கள். அநேக உண்மைகள் புலப்படும்.

— சி. ஆர். திருவேங்கடத்தான்

படம்: 1924ல் 21 நாள் உண்ணாவிரதம் இருந்தபோது மகாத்மா காந்தி ஆறு வயதான இந்திராவைப் புன்னகையுடன் வரவேற்கிறார்.





இன்றைக்குத்தான் வார்டர் சொன்னார்: ''டேய் பக்கிரி! உனக்குக் காலையில் விடுதலை'' என்று.

''ஒருநாளா? இரண்டு நாட்களா? இந்தக் கட்டடத்துக்குள் நான் பத்து வருஷங்களுக்கு மேல் கழித்து விட்டேன். என்னை அடைத்திருந்த அறையின் ஒவ்வோர் அங்குலமும் எனக்கு அத்துபடி. வெளியே போனால்கூட எனக்குப் பாந்தமாகத் தோன்றாது.

எத்தனை நாட்கள் நான் வெளியே இருக்கப் போகிறேன்? எதற்காக இத்தனை வருடங்கள் இந்த உடலில் உயிரைத் தக்க வைத்துக் கொண்டிருந்தேனோ, அந்தக் காரியம் மட்டும் நடக்கணும். அப்புறம் என்னைத் தூக்கிலே போட்டால்கூட மெய்யாலும் நான் கவலைப்பட மாட்டேன்.

நான் செய்யப் போகும் வேலை பயங்கரமான படுபாதகம் போல எவருக்கும் தோன்றலாம். என்னைப் பொறுத்த வரை அது செய்யப்பட வேண்டிய ஒரு வேலை. கடித்த மூட்டைப் பூச்சியை நசுக்குவது போல் ஒரு நல்ல காரியம்.

என்னை ஏமாற்றி விட்டதாக நினைத்துக் கொண்டு இந்த உலகத்தில் நடமாடிக் கொண்டிருக்கிறான். அவன் கதையைத் தான் நான் முடிக்கப் போகிறேன். இந்தப் பத்து வருஷங்களாக — இரவும் பகலும் — அவன் துடிதுடித்துச் சாகும் காட்சியைத் தான் நான் என் மனக்கண்ணால் பார்த்துக் கொண்டிருக்கிறேன். அதே காரியத்தை இப்போது என் கைகளால் நிறைவேற்றி வைத்து ஆனந்தமாக ரசிக்கப் போகிறேன்.


மாணிக்கம் — அந்தத் தறுதலையின் பெயர்தான். அவன் பெரிய வீட்டுப் பையன், இருந்தாலும் கூட என்னுடன் சரிசமமாகப் பழகுவான். நான் யார்? குப்பத்திலே பிறந்த பக்கிரி. யாருக்குப் பிறந்தேனோ — எங்கே எப்படி வளர்ந்தேனோ — எனக்கே தெரியாது.

எப்படியோ நானும் மனுசனாக வளர்ந்து விட்டேன்.

என்னை யாரோ தூக்கிப் பள்ளிக்கூடத்திலே போட்டார்கள். அஞ்சாம் கிளாசில் எங்கள் சிநேகிதம் தொடங்கியது. அப்புறம் நான் ஸ்கூலை விட்டு நின்றபிறகு கூட அவன் என்னைத் தேடிக் கொண்டு வருவான். அவனைப் பார்க்க நான் போவேன் — அவன் வீட்டில் என்னை யாரும் விரும்பா

விட்டாலும் பயலுக்கு என்னவெல்லாமோ ஆசைகள். பார்ப்பதற்கு நான் அவன் அடியாள் போல் இருந்தேன்.' ஆற்றங்கரைப் பக்கத்தில் ஒரு புறம்போக்கு நிலம். ஒரு கிழவி — அதில் குடியிருந்தாள். சுற்றிலும் கீரையைச் சாகுபடி செய்து அதை விற்றுத் தன் பிழைப்பை நடத்தி வந்தாள். ஊரில் அவள் பெயரே கீரைக்காரக் கிழவிதான்.

கிழவி மட்டும் தனியாக இருந்திருந்தால் வம்பே இல்லை. அவளுக்கு ஒரு பேத்தி. வளர்ந்த கீரைத் தண்டு போல் தளதள வென்று கண்களைப் பறிக்கிறாற் போல் இருந்தாள். மாணிக்கத்துக்கு அவள் மேல் ஒரு கண். நாலு காசு விட்டெறிந்தால் எதுவும் நடக்கும் என்ற தைரியம். ஒரு நாள் இரவு எட்டு மணிக்கு மேல் என்னைத் துணைக்குக் கூப்பிட்டான். வாலைக் குழைத்துக் கொண்டு ஓடும் நாயைப் போல அவன் பின்னால் போனேன்.



அன்னம்

அந்தப் பெண் மட்டும் தனியாக இருந்தாள். பக்கத்தில் கூப்பிடு தூரத்தில் வீடு ஏதும் கிடையாது. கிழவியும் கூட இல்லை. எங்கள் இருவரையும் பார்த்தவுடன் அந்தப் பெண் முதலில் பயந்துதான் போனாள். எப்படியோ தன்னைச் சுதாரித்துக் கொண்டாள். ''ஆயா இல்லீங்களே!'' என்றாள் குடிசைக்குள் நுழையும் வழியை மறைத்துக்கொண்டு.

''ஆயா எதுக்கு? நான் உன்னையல்ல தேடிக்கிட்டு வந்தேன்?'' என்றான், அவளை உள்ளே தள்ளிக் கொண்டு உள்ளே நுழைந்த மாணிக்கம். ''டேய் பக்கிரி? நீ வெளியே இருடா. ஆள் அரவம் கேட்டால் குரல் கொடு!'' என்று என்னை அவன் எச்சரிக்க மறக்கவில்லை.

என் முகத்தில் — இந்த ஏழைப் பக்கிரியின் கண்களில் அவன் எதைக் கண்டானோ, நான் அறியேன். என் கால்களில் விழுந்தாள். என் கைகளைப் பிடித்தாள். ''உன்னை என் கூடப் பிறந்த அண்ணனா நெனச்சுக் கேட்கிறேன். என் மானத்தைக் காப்பாத்து.. ஏழைக்கு ஏழை, உன் காலில் விழுகிறேன்!'' என்று கெஞ்சினாள்.

மாணிக்கத்தின் கண்களில் வெறி. அவள் கையைப் பற்றி இழுத்தான். நம்மை நம்பிய பெண்ணைக் கண்ணெதிரே ஒருவன் தொட்டு இழுப்பது எனக்கே தாளவில்லை. இறுகிப்போயிருந்தது என்று நான் நினைத்த என் நெஞ்சிலே கொஞ்சம் ஈரக் கசிவு இருந்திருக்க வேண்டும்.

''வாடா மாணிக்கம்....வேண்டாம்டா ..;.பாவம்டா....விட்டு விடு!'' என்றேன்.

''பாவமும் புண்ணியமும் பார்க்கிறவன் ஏண்டா என்கூட வரே?'' என்று அவன் அதட்டினான்.


எது கண்டனை?

அவனுடைய முரட்டுப் பிடியிலிருந்து அவளை விடுவிக்க நான் முயன்றேன். பரிசாகக் கிடைத்தது ஓர் உதை. நான் என்னை மறந்தேன். இருவரும் அந்தக் குடிசை வாசலில் கட்டிப் புரண்டோம்.

அந்தச் சமயம் பார்த்துத்தானா அந்தக் கிழவி வர வேண்டும்? ''ஓடி வாருங்க ஐயா! வயசுப் பொண்ணு இருக்கிற வூட்டுக்குள்ளே புகுந்து அக்கிரமம் பண்ணறாங்களே ... மாரியாத்தா .. காளியாத்தா ... இவுகளை வாரிக்கினு போக!'' என உரத்த குரலில் ஒப்பாரி வைத்தாள்.

மாணிக்கத்துக்கு ஏகக் கோபம். தான் திட்டமிட்டது நடக்கவில்லை என்று ஆத்திரம். ''சீ கிழவி! வாயை மூடு!'' என்றவன் பக்கத்திலிருந்த மண் வெட்டியை

அத்தான் ஆசை!



அந்தப் பெண்ணுக்கு யாரோ ஒரு பாட்டி சொல்லி வைத்தாள்: "உன் அத்தானுக்கு நல்ல சமையல் என்றால் பிடிக்கும். நன்றாகச் சமைத்துப் போட்டால் அவன் உள்ளத்தைக் கவர்ந்து விடலாம்!" என்று.

சமையல் அறையே கதி என்று அத்தானுக்கு ருசிருசியாக நள பாகங்களைச் சமைப்பதில் ஈடுபட்டாள் அந்தப் பெண்.

ஒரு நாள் அத்தான் அவளைச் சினிமாவுக்கு அழைக்கவே, "என் சகோதரியை அழைத்துச் செல்லுங்கள். நீங்கள் திரும்பியதும் சாப்பிடப் பிரமாதமாகச் சமையல் பண்ணி வைத்திருக்கிறேன்" என்றாள்.

"அப்படியா? சரி!" என்று அத்தான் அவள் சகோதரியைச் சினிமாவுக்கு அழைத்துச் சென்றான். அத்தானுக்கு அவள் சகோதரி மீது ஆசை விழுந்து விட்டது! வெளிப்படையாகத் தன் காதலைத் தெரிவித்தபோது, "என் அக்காவை யல்லவா நீங்கள் மணக்கப் போவதாகப் பெரியவர்கள் சொல்லி வருகிறார்கள்!" என்றாள் தங்கை.

"முதலில் உன் அக்காவைத்தான் மணக்கலாம் என்று நினைத்தேன். ஆனால் சமையல்காரி போல் அவள் வீட்டோடு அடைந்து கிடப்பது எனக்குப் பிடிக்கவில்லை!"

"நானும் உங்களுக்குத் தகுந்த மனைவியாக மாட்டேனே! எனக்குச் சமைக்கத் தெரியாதே!"

"கவலைப்படாதே! ஒரு சமையல்காரனைப் போட்டு விடுகிறேன்!" என்று கூறினான் அத்தான்!

- பி. எஸ். எம்.

எடுத்து அவன் மேல் வீசி விட்டான். கிழவி கீழே விழுந்தாள். அருகேயிருந்த என் உடை ரத்தத்தால் நனைந்தது.

அந்தப் பெண் பெரிதாக ஓலமிட ஆரம்பித்தாள். நாங்கள் இருவரும் இசைக்கொருவராக ஓடி அந்த இருளில் மறைந்தோம்.

மறுநாள் பகல் பன்னிரண்டு இருக்கும். நான் ஒளிந்திருந்த கொல்லைக்காட்டுக்குப் போலீஸ் நாய் வந்து விட்டது. என்னை உதைத்து ஸ்டேஷனுக்கு இழுத்துப் போனார்கள். அந்தப் பெண் அங்கு இருந்தாள். நான் என்ன தப்பு செய்தேன்? கொலை செய்தது மாணிக்கம் ... நடந்ததை அப்படியே சொன்னேன்.

'அந்த இன்ஸ்பெக்டர் சிரித்தார். அந்தப் பெண் கொடுத்திருந்த வாக்குமூலத்தை எனக்குப் படித்துக் காட்டினார். நான் திடுக்கிட்டுப் போனேன். நான் ஒருவன் மட்டும் தான் குடித்து விட்டு அவன் குடிசைக்கு வந்தேனாம். தப்பா நடக்க ஆரம்பித்தேனாம். கிழவி கூச்சல் போட்ட போது நான்தான் மண் வெட்டியால் அடித்தேனாம்.

"ஸார்! இது அத்தனையும் பொய் ... மாணிக்கம்தான்..." என்று நான் ஆரம்பித்தேன்.

"கம்மா இரப்பா!... மாணிக்கமாவது வைரமாவது! நீ சொல்ற ஆள் நேற்றுக் காலையிலிருந்து ஊரிலே இல்லை ... நம்பத் தகுந்த சாட்சி இருக்கு!" என்றார்.

மாணிக்கம் துரோகம் செய்து விட்டான். அவன் பணம் வேலை செய்து விட்டது.— உண்மை பொய்யாகிப் பொய் சட்ட பூர்வமாக மெய்யாக்கப்பட்டு விட்டது. மாணிக்கம் கூடப் பரவாயில்லை. தன் உயிருக்குப் பயந்து என்னை மாட்டி விட்டுத் தான் தப்பித்துக் கொண்டான். என்னை அண்ணன் என்று அழைத்த இந்தப் பெண் ஏன் இப்படி மாற வேண்டும்? எப்படிப் பயமுறுத்தினார்களோ? என்ன கொடுத்து வாங்கினார்களோ?

என்னைச் சிறையில் அடைத்தார்கள். நான் என்ன கதறியும் என் வாதம் எடுபடவில்லை. முதல்நாள் முதல் மாணிக்கம் மதுரையில் இருந்ததற்கு அடுக்கடுக்காகச் சாட்சிகள் கூண்டிலேறிச் சத்தியம் செய்து சொன்னார்கள். தொங்க வேண்டியதுதான் என்ற நிலை வந்தாகி விட்டது. குடிவெறியில் திட்டமிடாமல் செய்த குற்றம் என எண்ணி ஆயுள் தண்டனை வழங்கினார்கள்.

நல்ல பிள்ளையாகச் சிறையில் நடந்து கொண்ட காரணத்துக்காக எனக்குப் பத்து வருஷங்களில் விடுதலை கிடைத்து விட்டது. நானா நல்ல பிள்ளை? நான் எப்படிப்பட்டவன் என்று இன்னும் ஒரு வாரத்துக்குள் தெரியப் போகிறது.

வெளியில் வந்து விட்டேன். சொந்த ஊருக்கு டிக்கெட் எடுத்து இறங்கியும் விட்டேன்.

அந்த மாணிக்கம் பயலைப் பற்றி விசாரித்தேன். பூர்விகமான அந்தப் பெரிய வீட்டில் தான் இருக்கிறானாம். ஏதோ 'பிஸினஸ்' செய்து பிழைக்கிறானாம். எல்லா 'பிஸினஸும்' இன்றுடன் முடிந்துவிடும்.

கையில் நான் எந்த ஆயுதமும் எடுத்துக் கொள்ளவில்லை. அவன் கழுத்தை நெரிக்க என் இரண்டு கைகள் மட்டும் போதும். என் சக்தியை எல்லாம் அந்த விரல்களில் கொண்டு வந்து எத்தனை நாட்கள் பழகி இருக்கிறேன்.

அவன் வீட்டுக்குப் பக்கத்தில் இருளடைந்த மூலையில் காத்திருந்தேன். இரவு ஒன்பது மணிக்கு மேல் அவன் வந்தான். சாய்ந்துச் சாய்ந்து நடக்கும் அந்தப் பழைய நடை இன்னும் மாறவில்லை.


என்னை அவன் கடந்து சென்றதும் சட்டென்று பாய்ந்து அவன் சட்டைக் காலரைப் பிடித்துப் பலமாக இழுத்தேன். மற்றொரு கையால் அவன் வாயை இறுகப் பொத்தினேன்.

"நான்தான்டா பக்கிரி. உன் கணக்கைத் தீர்க்க வந்திருக்கும் எமன்!" என்று இருண்ட அந்த மூலைக்குள் அவனை இழுத்தேன்.

அவன் திமிறினான். என் கையைப் பிடித்து இழுத்து அமைதிப்படுத்த முயற்சி செய்தான். "கொஞ்சம் இரு! நீ வருவாய் என்று எனக்குத் தெரியும். நான் காத்துக் கொண்டு தான் இருந்தேன். என் வீட்டுக்குள் வா!" என்றான்.

'பரவாயில்லையே ... பயல் கோவையாக நான்கு வார்த்தை பேசக் கற்றுக் கொண்டு


எழிலரசி-
ராய்ப்பூர்
இளவரசி
யாரோ?
'மிஸ் ஏஷியா 1973'
ராய்ப்பூர் மில்ஸ்
துணிகள்



விட்டானே' என நினைத்தேன். மறுபடியும் மாட்டி விடுவானோ?

என் தயக்கத்தை அவன் புரிந்து கொண்டான். ''பயப்படாமல் என்னுடன் வா... உன்னை யாரும் தடுக்க மாட்டார்கள். வீட்டுக்குள் யாரும் இல்லை...'' என்றான் அவன்.

யாருக்குப் பயம்? எனக்கா? இன்று பயல் என்னிடமிருந்து தப்பித்தாலும் இன்னொரு நாள் மாட்டாமலா போகிறான்?

உள்ளே நுழைந்த மாணிக்கம் விளக்கைப் போட்டான். அவன் முகத்தை நான் நன்றாகப் பார்த்தேன். தலையில் சொட்டை. கன்னங்களில் பயங்கரமான பள்ளங்கள். கண்களை வெளியே விழுந்து விடும் போல் துருத்திக் கொண்டிருந்தன. ஆப்பப்பா, ஒரே அருவருப்பு எனக்கு. ஜெயில் களி தின்ற நான் கூட நன்றாகத்தான் இருக்கிறேன்.

''என்னைக் கொன்று விட்டு நீ அந்தப் பெண்ணைத் தேடிப் போவாய், இல்லையா?'' என்று கேட்டான் அவன்.

''ஆமாம்!'' என்றேன் நான்.

''வேண்டாம். அவளை விட்டு விடு ... உனக்கும் அவளுக்கும் தொடர்பு இருந்தது என்று நம்ப வைக்கப் பல சாட்சிகளை உருவாக்கியிருந்தார் என் அப்பா. உண்மையைச் சொன்னால் அவளையும் உள்ளே அனுப்புவதாகச் சொல்லிப் பயமுறுத்தி அவளை அப்படிப் பேச வைத்து விட்டார்கள் ... பாவம், விட்டு விடு!'' என்றான்.

சைத்தான் வேதம் ஓதுகிறது. நான் அந்தப் பெண்ணை நினைத்துப் பரிதாபப்பட்டேன்.

''பக்கிரி! என்னிடம் பணம் இருந்தது. நான் ஆடாத ஆட்டம் இல்லை. சுவைக்காத இன்பம் இல்லை. ஆனால் இப்போது பார். வியாதிகளின் மொத்த உருவமாக நிற்கிறேன். என் பெண்டாட்டிக்குப் பைத்தியம். ஆஸ்பத்திரியில் இருக்கிறாள். இரண்டு குழந்தைகள். ஒருத்தனுக்கு இளம் பிள்ளைவாதம். மற்றொருவனுக்குப் பிறவியிலிருந்து கண் பார்வை கிடையாது. தாயாதி ஒருவனுடன் வழக்கு — ஐந்து வருஷங்களாக நடக்கிறது. வழக்கு முடிந்த பிறகு சொத்து ஏதும் மிச்சம் இராது. நான் தினமும் படும் நரகவேதனை எனக்குத்தான் தெரியும். நான் கோழையடா, பக்கிரி. சாகக் கூடத் துணிவு இல்லை. நீ என்னைக் கொன்று விடு. நான் உன்னைத் தடுக்க மாட்டேன்.'' கைகள் இரண்டையும் கட்டிக் கொண்டு அவன் என்னைப் பார்த்தபடியே நின்றான்.

நான் பல்லைக் கடித்தபடி அவனை நெருங்கினேன். என் கைகள் அகலமாக விரிந்தன. அத்தனை விரல்களும் துடித்தன. என் கைகள் அவன் கழுத்து முழுவதும் பரவின.

என்னுள் ஒரு பொறி தட்டியது. ''டேய் பக்கிரி! மாணிக்கத்தைக் கொல்வதால் அவனுக்கு என்ன நஷ்டம்? சாவில்தான் அவன் நிம்மதி அடங்கியிருக்கிறது. அவனைக் கவலைகளிலிருந்தும் தொல்லைகளிலிருந்தும் விடுவித்து விட்டு, அதற்காக நீ தூக்கில் தொங்குவதா?''

என் கைகளை நான் விலக்கிக் கொண்டேன். மாணிக்கத்துக்குச் சாவு தண்டனையல்ல. வாழ்க்கைதான் அவனுக்கு நரகம்.

வேகமாக வெளியே நடந்தேன்!



ஆறு வயதுச் சிறுவன் பள்ளிக்கூடத்தில் கரும் பலகையைப் பார்க்க முடியவில்லை என்று பெற்றோரிடம் கூறினான். உடனே அவனைக் கண் வைத்தியரிடம் அழைத்துச் சென்றனர் பெற்றோர்.

''ஏன் கரும் பலகையைப் பார்க்க முடியவில்லை?'' என்று கண் டாக்டர் வினவினார்.

''ஏனென்றால் ஒரு தடிப் பையன் என் முன்னால் உட்கார்ந்துகொண்டு மறைக்கிறான்!'' என்று பதில் சொன்னான் சிறுவன்.

- பி. எஸ்.

O O O O

பதவியில் கழுதை!



ஆப்ரஹாம் லிங்கன் ஒரு குட்டிக் கதையை அடிக்கடி தம் நண்பர்களிடம் சொல்வது வழக்கம். அது இதுதான்:

''ஒரு மன்னன் தன் மந்திரியிடம், ''இன்று மழை பெய்யுமா?'' என்று கேட்டபின்பே வேட்டைக்குச் செல்லும் வழக்கம் உடையவன்.

ஒரு நாள் மந்திரியை அழைத்து ''இன்று மழை வருமா?'' என்று கேட்டான். மந்திரியும் ''வராது'' என்று கூறவே இருவரும் வேட்டைக்குப் புறப்பட்டுப் போனார்கள்.

போகும் வழியில் குடியானவன் ஒருவன் தன் கழுதையுடன் வந்து கொண்டிருந்தான். மன்னனைக் கண்டதும் அவன், ''மகாராஜா! கொஞ்ச நேரத்தில் மழை வரும்'' என்று எச்சரித்துவிட்டுப் போனான்.

சிறிது நேரத்தில் குடியானவன் சொன்ன மாதிரியே பலமான மழை பெய்ய ஆரம்பித்தது. அரசனும் மந்திரியும் நன்றாக நனைந்து விட்டனர். வேட்டை முடிந்து திரும்பும் வழியில் அந்தக் குடியானவனை அரசன் கண்டுபிடித்து ''உனக்கு எப்படித் தெரியும் மழை வரும் என்று?'' என்று கேட்டான்

அதற்குக் குடியானவன், ''எனக்குத் தெரியாது ராஜா! ஆனால் என் அதிசயக் கழுதைக்குத் தெரியும். அது மழை வரும் நேரங்களில் தன் காதுகளை முன்னுக்கு நீட்டிக் கொள்ளும். உடனே மழை வரும் என்று தெரிந்து கொள்வேன்'' என்று சொன்னான்.

இதைக் கேட்டதும் அரசன் தன் மந்திரியைப் பதவியிலிருந்து நீக்கிவிட்டுக் குடியானவனின் கழுதையைத் தன் மந்திரியாக நியமித்துக் கொண்டான்.''

இப்படிக் கதையை முடித்த லிங்கன் மேற்கொண்டு சொன்னார்: ''அதில்தான் அந்த மன்னன் மாபெரும் தவறு செய்து விட்டான் என்று எனக்குத் தோன்றுகிறது. ஏனென்றால் அது முதற்கொண்டு எல்லாக் கழுதைகளுமே ஏதாவது பதவி வேண்டுமென்று அலைகின்றன!''-கண்ணன்

Printed and published by V. Vaidyanathan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-600031. Editor: K. Rajendran

ஒரே ஒரு காசு செலவில் 1 சேலை அல்லது 3 சட்டைகள் பனிபோல் வெண்மை பெற...

மாக்ஸிம்*

எல்லா துணிகளுக்கும்
உகந்த ஏற்றமிகு ஒயிட்னர்

எவ்வளவோ சிக்கனமானது!

எந்த ஆடையாக இருந்தாலும் சரி, அதற்குப் புத்தம் புதிய வெண்மை ஒளியேற்ற சராசரி ஒரு துளி மாக்ஸிம் போதும். ஒவ்வொரு மாக்ஸிம் பாட்டிலும் சுமார் 1200 துளிகள் கொண்டது என்பது உங்களுக்குத் தெரியுமோ என்னவோ! எனவேதான் மாக்ஸிம் மிகவும் சிக்கனமான, வீரியமுள்ள நீலநிற. திரவ வடிவ ஒயிட்னராக விளங்குகிறது. மேலும் விசேஷ ட்ராப்பர் மூடி கொண்ட பிளாஸ்டிக் பாட்டிலாக இருப்பதால், இன்னும் லாபம். ஏனெனில் தேவைக்கு மேல் ஒரு துளி கூட சிந்தாது. எனவே துளியும் வீணாவதில்லை, துணியும் நீலம் படிவதில்லை.

- 'டெரீன்' ✓
- 'டெரீன்'/காட்டன் ✓
- நைலான் ✓
- உல்லன் ✓
- சில்க் ✓
- காட்டன் ✓


எல்லா துணிகளுக்கும் ஏற்றது

எல்லாவித துணிகளுக்கும் நீங்கள் மாக்ஸிம் உபயோகிக்கலாம். 'டெரீன்' 'டெரீன்'/காட்டன், நைலான், உல்லன் சில்க் மற்றும் காட்டன் போன்ற எல்லா துணிகளுக்கும் மாக்ஸிம் வெண்மையூட்டி புதிய மெருகேற்றுகிறது. தவிர, மாக்ஸிம் துணியில் கறை ஏற்படுத்துவதுமில்லை.

உபயோக முறை மிகமிக எளிது

மாக்ஸிம் உபயோக முறை மிகமிக் எளிதானது. துணிகளை முதலில் சோப் அல்லது பிற சலவைச் சாதனங்கள் மூலம் சுத்தமாக துவைத்து நன்றாக அலசி எடுக்கவும். பிறகு வாளியிலுள்ள (5 லிட்டர்) நல்ல தண்ணீரில் 10-15 துளிகள் மாக்ஸிம் விட்டுக் கலக்கவும். (பழுப்பேறிய துணிகளென்றால் கொஞ்சம் கூடுதல் துளிகள் மாக்ஸிம் சேர்க்கவும்) பின்பு துணிகளை 10—15 நிமிடங்களுக்கு அதில் ஊறவைக்கவும். மீண்டும் அலச வேண்டாம். அப்படியே உலரவிடவும்.





ஒவ்வொரு காசுக்கும் உரிய பலனைத் தருகிறது மாக்ஸிம்

GMM-23 TAM

*Regd. T.M. Geoffrey Manners & Co., Ltd

Registered No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

